148

148

நாஞ்சில் நாட்டு

மருமக்கள் வழி மான்மியம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JAN 1943
MADRAS

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

1809

புதுமைப் பதிப்பகம்

புதுமைப் பதிப்பக வெளியீடு - 9

நாஞ்சில் நாட்டு
மருமக்கள்வழி மான்மியம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JAN 1943
MADRAS

இருபுறச் சுவரிலும் இரண்டுருவங்கள் - செய்து வைத்த கதைதெரி யாதோ?—பக்கம் 54

நாஞ்சில் நாட்டு
மருமக்கள்வழி மான்மியம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JAN 1943
MADRAS

சி. தேசிகவிநாயகம் பிள்ளை
இயற்றியது

சென்னை
ஸர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்
ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை எழுதிய
முன்னுரையுடன் கூடியது

புதுமைப் பதிப்பகம்
காரைக்குடி

1942

முதற்பதிப்பு : 1 - 12 - 1942

விலை ரூபா ஒன்று

பதிப்புரிமை பெற்றது

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை

முன்னுரை

க

நாஞ்சில் நாடு இப்போது திருவிதாங்கூர் இராச்சியத்தின் தெற்குப் பகுதியாயுள்ளது. பெரும் புகழ் பெற்ற 'குமரி' இந்நாட்டினகத்தேதான் இருக்கிறது. இந்நாட்டினர் அனைவரும் தமிழார்வம் மிக்கவர்களாகவே உள்ளவர்கள். இன்றும் இந்நாட்டில் தமிழ் மொழியே வழங்கி வருகிறது. இன்றிருப்பதுபோலவே சுமார் 1800 ஆண்டுகட்கு முன்பும் தமிழ் கூறு நல்லுலகத்தின் பகுதியாகவே இந்நாடு விளங்கிற்று. தொல்காப்பியத்தின் பாயிரத்தில்,

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து

என வருவதைக் கொண்டு மேற்கூறியதன் உண்மை தெளியலாம். இப்பாயிரம் பாடிய பனம்பாரனுர் குமரிக்கருகிலுள்ள திருவிதாங்கோடு என்னும் ஊரினர் என்பதும் இங்கே மனங்கொளத் தக்கது. பாண்டியனுக்குரியதாகக் 'குமரிச் சேர்ப்பன்' என்று ஒரு பெயர் திவாகரத்தில் காணப்படுகிறது. இப்பெயரால்,இந்நாடு தொன்றுதொட்டுப் பாண்டியனுக்குரியதாயிருந்தமை புலனும். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் குறித்த அச்சமும் புகழும் தெற்கின்கண் உள்ள கன்னிக்குத் தெற்கும் பரவுகவென அப்பாண்டியனைக் காரிகிழார் என்ற புலவர் பாடுகின்ருர் (புறம் 6). பாண்டிய

னுக்குரியதாகவே குமரியை அடுத்துள்ள பஃறுளி யாறுங் கூறப்பட்டுள்ளது (புறம் 9). தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் குறித்து,

தென் குமரி வட பெருங்கல்
குணகுட கடலா வெல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப (70-72)

என மதுரைக்காஞ்சி என்ற நூல் கூறுகிறது. இங்கே 'தொன்று மொழிந்து' என்பது 'மிகவும் பழங்காலந் தொட்டுத் தொடர்புடையரா யுள்ளமையைப் பாராட்டிச் சொல்லி' எனப் பொருள்படுதலாலே, பாண்டியர்களுக்கு அநாதியாகவே தென்குமரியைச் சார்ந்த நாடு உடைமையாயிருந்ததென்பது விளங்கும்.

பாண்டியர்பரம்பரைக் குரியதாயிருந்த இந்நாடு சங்ககாலத்தில் தானே சேரர்களால் பலமுறை அபகரிக்கப்பட்டதெனப் புறநானூற்றாலும் (17) பதிற்றுப் பத்தினாலும் அறிகிறோம். பிற்குறித்த நூலில்,

ஆரியர் துவன்றிய பேரிசை யிமையந்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே (11)

எனவும்,

வடதிசை யெல்லை யிமைய மாகத்
தென்னங் குமரியொ டாயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ (43)

எனவும் வரும் அடிகள் குமரியைச் சார்ந்த நாட்டைச் சேரர்கள் வென்று அடிப்படுத்தினர் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

நாஞ்சில் என்ற பெயரும் சங்ககாலத்தில் வழங்கி வந்த தொன்றேயாம். புறநானூற்றிலே (139)

> உயர் சிமைய உழாஅ நாஞ்சிற் பொருந

என வருகின்றது. இங்கே 'உழாஅ நாஞ்சில்' என்பது 'பாயா வேங்கை', 'பறவாக் கொக்கு' என்பன போல, உழுதல் செய்யாத நாஞ்சில், அஃதாவது, நாஞ்சில் என்னும் மலை யெனப் பொருள்படுகின்றது. இது மலையே யாம் என்பது 'உயர் சிமைய' (உயர்ந்த சிகரத்தையுடைய) என்ற அடையால் உணரலாகும். இப் பழம்பெருநூலின் உரைகாரரும் 'நாஞ்சில் என்னும் பெயரையுடைய மலைக்கு வேந்தே' என்று இவ் வடிக்குப் பொருள் கூறினர். நாஞ்சில் மலையைத் தன்னகத்தே கொண்ட நாடு 'நாஞ்சில் நாடு' ஆகும். இந்நாட்டிலே வீரத்தாற் சிறந்து விளங்கிய வள்ளுவன் என்னும் பெயருடையான் ஒருவன் சங்ககாலத்தில் வாழ்ந்தனன். இவனைக்குறித்துப் புறநானூற்றில் ஐந்து செய்யுட்கள் (137, 138, 139, 140, 380) உள்ளன. இவற்றுள் நான்கு செய்யுட்களில் இவன் 'பொருநன்' என்றே சிறப்பிக்கப்படுகிறான். இவன் பெருங்கொடை வள்ளலாகவும் விளங்கியவ னென்பது பாணாற்றுப் படையாகப் பாடப்பெற்ற 138-ம் செய்யுளால் தெளியலாம். இவன் ஒரு வேந்தனுக்குப் படைத்துணையாய் அமைந்தவனென்பது,

> ஈதல் ஆனான் வேந்தே வேந்தற்குச்
> சாதல் அஞ்சாய் நீயே (139)

என இவனது வேந்தனையும் இவனையுங் குறித்துவரும் அடிகளால் அறியலாகும். இவ்வேந்தன் சேரன் என

உரைகாரர் கூறுவர். ஆனல் 380-ம் புறப்பாட்டு இவனைத் 'தென்னவர் வயமறவன்' என விசேடிக்கின்றது. தென்னவர் என்பது பாண்டியரையே சிறப்பாக உணர்த்துமாதலால், பாண்டியனே இவனது வேந்தனெனத் துணிதல்வேண்டும். 'சாதல் அஞ்சாய்' என்ற தொடரை நோக்கும்போது, பிற்காலத்து அமைக்கப் பெற்ற 'சாவேறு' என்னும் வீரர் தொகுதியினரைப் போல் இவ்வள்ளுவன் சிறந்து மேம்பட்டவனெனக் கருதுதல் தக்கதாகலாம்.

சங்ககாலத்துக்குப் பின் சுமார் 250 ஆண்டுகளாக (கி. பி. 650 வரை) நாஞ்சிநாட்டுப் பகுதி சேரர்களது ஆட்சிக்குட்பட்டிருந்ததென ஊகித்தற்கிடமுண்டு. ஏனெனின், திருஞானசம்பந்த சுவாமிகளது காலத்தவரான நெடுமாறர் சேரவரசனேடு கோட்டாற்றிலும் விழிஞத்திலும் போர் செய்தனரெனப் பாண்டிக்கோவை அறிவிக்கின்றது. கோட்டாறு மதில் முதலியவற்றால் நன்கு காவல் செய்யப்பட்ட ஒரு நகரமாக முற்காலத்தில் இருந்தது. அங்கே ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அதனருகில், விழிஞத்தில் கடலிடையே போரொன்றும் நிகழ்ந்தது. 'விண்டார்பட விழிஞக்கடற்கோடியுள்' என்று கூறப்படுகின்றது (*இறை. உரை. செய். 30). இப்போரில் சேரனைக் காட்டகத்து வெருட்டியோட்டி (செய். 37) அவனது தென்னாட்டை நெடுமாறர் கைக்கொண்டார் (செய். 239). இங்ஙனம் கொண்ட நாடு எவ்வளவு காலம்வரையில் மீண்டும் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததென அறியக்கூடவில்லை. ஆனல் நாஞ்சிநாட்

*இங்கே காட்டுவது பவானந்தர் கழகப் பதிப்பு.

டுக்கு இயற்கை அரணுக அமைந்த மலைத்தொடராலும் பிற இடையூறுகளாலும் பாண்டியர்களுக்குத் தாம் கைப்பற்றிய நாட்டைக் காப்பாற்றுதல் அரிதாயிருந் திருத்தல்வேண்டும். ஆகவே அவர்களிடமிருந்து சேர வரசர்கள் தாமதமின்றி நாஞ்சினாட்டை மீண்டும் பெற் றனரென்றுதான் ஊகித்தல் தகும். 10-ம் நூற்ருண்டி லிருந்து 13-ம் நூற்ருண்டு இறுதியாகச் சோழ அரசர் கள் தென்னுட்டரசர்களில் தலைமை பூண்டனர். அக்காலத்துச் சேர வமிசத்தினரிடமிருந்து சோழ ரிடம் நாஞ்சினுடு கைம்மாறியது. முதற்பராந்தகன், கேரளாந்தன் என்னும் விருதுடைய முதல் ராஜ ராஜன் : இவர்களுடைய சாசனங்கள் நாஞ்சினுட்டில் பலவிடங்களிலும் காணப்படுகின்றன. வீரசோழியம் இயற்றுவித்த வீரராசேந்திர சோழன் (கி. பி. 1062) கேரளனை வென்றதாக ஒரு சாசனங் கூறுகின்றது. முதற்குலோத்துங்கன் (கி. பி. 1070 - 1118)

'கன்னியுங் கைக்கொண்டு புனிதத் தென்னுட்
டெல்லை காட்டிக் குடமலைநாட் டுள்ள
சாவே றெல்லாந் தனிவிசும் பேற...
குறுகலர் குலையக் கோட்டா றுட்பட
நெறி தொறும் நிலைகளிட் டருளி' னன்

எனப் பிறிதொரு சாசனம் தெரிவிக்கின்றது. இரண் டாங் குலோத்துங்கன் காலத்தும் மூன்ரும் ராஜராஜன் காலத்தும் சோழரது ஏகாதிபத்தியத்துக்கு இந்நாடு உட்பட்டிருந்ததென்றும் சாசனங்கள் உணர்த்துகின் றன. இங்ஙனம் உட்பட்டிருந்தமையால் கோட்டாற் றிற்கு 'மும்முடிச் சோழபுரம்' என்றும் பின்னர் 'சோழ கேரளபுரம்' என்றும் புதிய பெயர்கள் உண் டாயின. கன்னியாகுமரியில் தேவியைக் குறிக்கநேரிடும் சாசனங்களில் 'ராஜராஜப் பாண்டிநாட்டு உத்தம

சோழவள நாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரிக் கன்னியா பகவதியார்' என வருகின்றது. நாஞ்சிநாடு உத்தம சோழ வளநாட்டின் பிரிவாகவே ஒரு சாசனத்தில் (T. A. S. i. 163) கூறப்பட்டிருக்கிறது. சாசனங்களிற் காணும் நாட்டுப் பெயர்களுள் இந்நாஞ்சிநாடு என்ற பெயரொழிய அதனோடியைந்த ஏனைப் பெயர்களெல்லாம் இப்பொழுது மறைந்துவிட்டன.

சோழவம்சம் வலிகுன்றியொழியவே, சேரவரசர்கள் மீண்டும் நாஞ்சிநாட்டுப் பிரதேசத்தைக் கைப்பற்றியாளத் தொடங்கினர். இங்ஙனம் ஆளத்தொடங்கியது கி.பி. 15-ம் நூற்றாண்டின் முற்பகுதியாயிருக்கலாமெனத் தோன்றுகிறது. சேரவரசர்கள் தங்கள் உரிமையை நாட்டியபோதினும், பாண்டியநாடு முதலியவற்றை ஆண்டுவந்த விஜய நகரப் பேரரசர்களின் பிரதிநிதிகளாலும் மதுரைப் பிரதேசத்தையாண்ட நாயக்கவரசர்களாலும் அடிக்கடி அல்லற்பட்டனர். படையெடுப்புக்கள் நிகழ்ந்த வண்ணமாயிருந்தன. நாஞ்சிநாட்டுக்கும் திருநெல்வேலிக்கும் இடைப்பட்ட பிரதேசம் அடிக்கடி கைம்மாறி வந்தது. இப்பிரதேசத்தைத் 'திருவடி தேசம்' என்று சாசனங்கள் குறிப்பதிலிருந்து, இது நீண்ட காலமாகச் சேரவரசர்கள் கைவச மிருந்ததெனக் கருதவேண்டியதா யிருக்கிறது. ஆனால் விஜய நகரப் பிரதிநிதிகளுள் விட்டலராயர் முதலியோரும் நாயக்கர் சேனாபதியான ராமப் பய்யன் முதலியோரும் திருவடி தேசத்தின் உட்பகுதிக்கே படையெடுத்துச் சென்று தங்கள் அரசரின் பெருமையை நிலைநாட்டினர். நாயக்கர் படை கொல்லம் 810 முதல் (கி. பி. 1635) நாஞ்சிநாட்டை மிகவும் துன்புறுத்தியது என்றும், இது

போன்ற காரணங்களால், கொல்லம் 849 முதல் 869 வரை, நிலவரி முதலியன நீக்கப்பட்டனவென்றும் முதலியார் ஓலைச் சாசனமொன்று தெரிவிக்கின்றது. கி. பி. 1700-க்குப் பின்தான் நாஞ்சிநாட்டில் சிறிதளவு சமாதானம் ஏற்பட்டதென்று சொல்லலாம். ஆனால் உள்நாட்டுக் கலகங்களும் திப்பு சுல்தான் படையெடுப்பால் வந்த விபத்துக்களும் நாஞ்சிநாட்டினருக்குப் பெருந்துன்பம் விளைத்தன. இதுவும் நீங்கி, கடந்த நூறு ஆண்டுகளாகத்தான் நாடு அமைதி பெற்றிருக்கிறது.

உ

மேலே விவரித்த சரித்திரத்தால் நாஞ்சிநாட்டினரின் நிலை மிகவும் வருந்தத் தக்கதாயிருந்தமை எளிதின் அறியத்தகும். அவர்களிற் பல குடும்பத்தினர் பல நூற்றாண்டுகட்கு முன்னே அங்கே குடியேறியவர்கள்; ஒரு சில குடும்பத்தினர் சோழர் படையெடுப்போடு வந்தவர்களா யிருக்கலாம்; இன்னும் ஒரு சில குடும்பம் அதற்கு முன்பு அங்கு வந்து சேர்ந்தனவாகக்கூட இருக்கலாம்; சில பூர்வ குடிகளும் இருக்கலாம்; ஆனால் பெரும்பாலோர் பாண்டிய நாடு சோணாடுகளிலிருந்து சென்றவர்களேயாவர். நாஞ்சிநாட்டினர் பொதுப்பட இங்ஙனமிருப்ப, அந்நாட்டு வேளாளர் அனைவரும் வெளி நாடுகளிலிருந்து பல நூற்றாண்டுகட்கு முன்பு அங்கே குடியேறி, படைத்தலைமைபூண்டும் படைவீரராயமைந்தும் நாட்டின் ஆட்சிமுறையில் அதிகாரம் வகித்தும் வந்தவர்களே. இவர்கள் நாஞ்சிநாட்டில் பெருநிலக்கிழமை பூண்டும் இருந்தனர். பாண்டி முதலிய பிரதேசங்களிலிருந்து வரும் படைகளைத் தடுத்தும், நாட்டின் ஆட்சியில் அதிகாரம் தாங்கி அரசியல் செவ்வையாக

நடைபெறுவதற்கு உதவிபுரிந்தும், உழவு, வாணிபம் முதலிய தொழில்களை மேற்கொண்டு நாட்டின் நலத்தைப் பேணியும் பெருந்தொண்டு புரிந்து வந்தனர். சேரவரசர்களுக்கு இன்றியமையாத பெருங் குடிகளாயமைந்தனர். அரசியல் நடைபெறுவதற்கு வேண்டும் பொருள்வருவாய் பெரும்பாலும் இந்நாஞ்சினாட்டினரிடமிருந்தே பெறக்கூடியதாயிருந்தது. சுருங்கக்கூறின் சேர ராஜ்யத்தின் உயிர்நிலையா யிருந்து அரசு செழிக்கும்படி செய்தது நாஞ்சினாடாகும்.

ஆனால், நாஞ்சினாட்டினர் - முக்கியமாக நாஞ்சினாட்டு வேளாளர் - எப்பொழுதும் தங்கள் தாயகமாகிய சோழ பாண்டிய தேசங்களையே நோக்கிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வழக்க வொழுக்கங்களெல்லாம் பாண்டி நாட்டிலுள்ள வேளாளர்களுடைய வழக்கவொழுக்கங்கள். அவர்களுடைய குடும்பத் தெய்வங்கள் பாண்டிநாடு முதலிய இடங்களில் இருந்தன. அவர்களுடைய கொள்வினை கொடுப்புவினையெல்லாம் பாண்டி முதலிய நாட்டினரோடு நிகழ்ந்தன. அவர்கள் தாய்மொழி தமிழ்; அவர்கள் போற்றிவந்த இலக்கியங்கள் தமிழிலக்கியங்கள்; அவர்களுடைய ஆசாபாசமனைத்தும் அப் பாண்டி முதலிய நாடுகளோடு பின்னிக் கிடந்தன. இந்த நிலையில் அவர்களைத் தமது நாட்டு நிலைக்குடிகளாகச் செய்து விடவேண்டுமென்று ஒரு சேரவரசர் எண்ணியது முற்றும் இயல்பேயன்றோ?

இதற்கேற்ப, கர்ண பரம்பரைச் செய்தியொன்று நாஞ்சினாட்டு வேளாளரிடை வழங்குகிறது. அவர்கள் தங்களுடைய பூர்விகநாட்டிற்குப் போய்விடாதபடி ஒரு

சேர அரசன் மருமக்கள்-தாயச் சட்டத்தை அவர்கள் மேற்கொள்ளும்படி செய்தனனென்பதுதான் இக்கர்ண பரம்பரை. இந்தச் செய்தி உண்மையாயின், இது அரிய தோர் அரசியற் சூழ்ச்சியாகும். வேறொரு செய்தியும் வழங்குகின்றது. பாண்டியனொருவனுக்கும் சேரனொரு வனுக்கும் இந்நாஞ்சினாட்டின் உரிமையைப்பற்றி விவாதம் நிகழ்ந்தது.

வஞ்சி நாடதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன்றுளது ; அதன்
அந்தமில் பெருவளம் அறிவார் யாரே ?
மருதமும் நெய்தலும் மயங்கி அங்கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும் (II, i, 75-79)

* * * *

இப்பெருந் தேயத்து எங்கு மிராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவரு
கொண்மூ என்னுங் கொள்கலங் கொண்ட
அமிழ்தினை அவ்வயிற் கவிழ்த்தபின் செல்வுழி
வடியும் நீரேநம் மிடிதீர் சாரல் (II, i, 101-105)

* * * *

தூவியால் தம்முடல் நீவிடிற் சிரிக்குஞ்
சிறுமியர் என்னஅச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல்குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம்நகுவள் (II, ii, 140-144)

* * * *

எங்கட்கு அந்நாடு உரித்தாம் ; அங்குப்
பரவு பாடையும் விரவும் ஆசாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா (II, iii, 77-79)

என்று மனேன்மணீயம் கூறுமாறு பாண்டியன் தன்

கட்சியை எடுத்துரைத்தனன். மேலும் 'பாண்டியன் அணை' என்பதும், நாஞ்சினாட்டினர் மக்கள் - தாயிகளாயிருத்தலும் அந்நாடு தனக்குரியதே யென்பதை வலியுறுத்துகின்றன என்றனன். பாண்டியன் ஒருவனது நட்பின் ஞாபகார்த்தமாகச் சேரவரசனொருவனாற் பாண்டியன் அணை கட்டப்பெற்றதென்றும் நாஞ்சினாட்டினர் மருமக்கள் - தாயிகளே யென்றும் வஞ்சியர் பூபதி வாதித்தனன். முடிவில் நாஞ்சினாட்டினர் மக்கள்-தாயிகளா அல்லது மருமக்கள் - தாயிகளா என்பதைப் பொறுத்ததாயிற்று இவ்வுரிமை விவாதம். இதனை அந்நாட்டினரே தீர்க்கவேண்டியதாயிற்று. அவர்கள் எக்காரணத்தாலோ சேரர் குடிகளாய் வாழ்தலை விரும்பினர். இவ்விருப்பத்திற்கிணங்க, தாங்கள் மருமக்கள் - தாயிகளே என்றும் அத்தாய முறையைத் தங்கள் முன்னோர்கள் மேற்கொண்டு விட்டார்களென்றும் சான்றுகூறி விவாதத்தை முடித்தனர். இது நிகழ்ந்தது கொல்லம் 292-ம் ஆண்டில்* (அதாவது கி. பி. 1116) என்று ஸ்ரீபத்மநாபசுவாமி கோயிலிலுள்ள ஓர் ஓலைப் பத்திரம் தெரிவிக்கிறதெனத் திருவிதாங்கூர்த் தேசச் சரித்திரம் (Travancore State Manual) கூறுகிறது.

இங்கே கூறிய இருசெய்திகளாலும் அநாதியாக மக்கள்-தாயமுறையைக்கொண்ட நாஞ்சினாட்டுவேளாளர் அரசியற் காரணங்கள்பற்றி மருமக்கள் - தாய முறையைக் கைப்பற்றினரென்பது உறுதியாகின்றது. பிற்கூறிய தாயமுறையின் முக்கியாம்சங்கள் மிகவும்

*கலைமகள் I, 585 பார்க்க. இங்குக் குறிப்பிட்ட காலம் சோழரது ஆதிக்ய காலம்; ஆதலால் இக்காலக் குறிப்பு ஐயப்பாட்டிற்கிடனாயுள்ளது.

விசித்திரமானவை. ஒரு காரணவனது பூர்விகச்சொத்து அவனது சகோதரியின் குழந்தைகளுக்குத் தாயமுறைப்படி இறங்கும். அவனுடைய குழந்தைகளுக்கு 'உகந்துடைமை' என்னப்படும் ஒரு சிற்றுரிமையைத் தவிர வேறு யாதொரு பாத்தியதையும் இல்லை. சகோதரியின் குழந்தைகளுக்கும் பூர்விகச் சொத்தைப் பாகப்பிரிவினை கேட்க உரிமையில்லை. இந்நிலையில் தன் குழந்தைகள் ஒருபக்கமும் தன் சகோதரிகளின் குழந்தைகள் ஒரு பக்கமுமாகக் காரணவனை அரித்துத் தின்பதுதான் நாஞ்சினாட்டுக் குடும்பத்தின் சாதாரண கதியாய் விட்டது. இயற்கையான அன்பு தன் குழந்தைகள்மீது செல்ல, செயற்கையான சட்டம் அவ்வன்பிற்கு இடங்கொடாதபடி, தன் சகோதரிகளின் குழந்தைகளுக்கு அவகாசிகள் நிலையிற் குடும்பச்சொத்தைக் கொடுக்கும்படி செய்தது. சகோதரிகளின் குழந்தைகளுக்குச் 'சேஷகாரர்' என்று பெயர். இவர்களின் இதம்போல் காரணவன் நடக்கத் தவறினால், அவனைக் 'குடும்பதோஷி' என்று கூறிக் காரணவ ஸ்தானத்திலிருந்து நீக்க வேண்டும்வழி தேடுவார்கள். இதனால் எப்போதும் கோர்ட்டு விவகாரம்தான். குடும்பச் சொத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று காரணவன் நினைப்பதற்கு இடமே யில்லாமற் போய்விட்டது. குடும்பச் சொத்தும் பாழாகும் நிலையில் வந்துவிட்டது. நாஞ்சினாட்டிலுள்ள பெருங் குடும்பங்களிற் பெரும்பாலன இவ்வாறாக அல்லற்பட்டுத் தவித்துக்கொண்டிருந்தன.

நாஞ்சினாட்டுப் பெண்களின் துன்பம் சொல்லி அளவிட முடியாது. பல தாரங்களை ஒருவன் மணந்து கொள்ளலாம். இங்ஙனம் பலருள் ஒருத்தியாய் வாழ்

வது நாஞ்சிநாட்டில் சர்வ சாதாரணமாய்ப் போயிற்று. கணவன் இறந்த பிற்பாடு, மறுமணம் செய்துகொள்ளும் உரிமை விதவைக்கு இருந்தது. இவ்வுரிமையால் பெண் மக்களின் அல்லற்பாடு மிகுந்ததே யன்றிக் குறைவுபடவில்லை. தான் மணந்த மனைவியை ஆதரித்துக் காப்பாற்ற வேண்டுமென்ற பொறுப்பைக் கணவன் அவ்வளவாக மேற்கொள்ளவில்லை. சேஷகாரர்களுக்குக் காரணவனுடைய மனைவி மக்களைக் கவனிக்க வேண்டும் பொறுப்புச் சிறிதும் இல்லை. இவ்வாறான பல குறைகளினால் பெண்களின் நிலைமை பெரிதும் பரிதபிக்கத் தகுந்ததாயிருந்தது.

இந்நிலைமைகளை யெல்லாம் நோக்கி, தங்களுக்குரிய அவகாசக் கிரமம் பற்றிய சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்து நாஞ்சிநாட்டில் முற்போக்கில் அவாவுள்ள மக்கள் மனத்தில் தோன்றிற்று. இக்கருத்து 30 ஆண்டுகட்கு முன்னர் மிகவும் பிரசாரமெய்தியது. முற்போக்கில் ஈடுபடாத ஒருசிலர் இதனை ரகசியமாக எதிர்க்கத் தலைப்பட்டனர். நாஞ்சிநாடு இரு பிளவு பட்டது. ஆனால் முற்போக்காளரே முடிவில் வென்றனர்.

ஸ்ரீ சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் முற்போக்காளரில் முதன்மை பெற்றவர். 'மலபார் குவார்ட்டர்லி ரிவியூ' என்ற பத்திரிகையில் இவர்கள் நாஞ்சிநாட்டு வேளாளரைக் குறித்து எழுதிய ஆங்கிலக் கட்டுரை அதுகாறும் உறங்கிக் கிடந்த வேளாளரின் கண்களைத் திறந்து விழிக்கச் செய்தது. பிள்ளையவர்களுடைய தூயவுள்ளமும் சீரிய நோக்கமும் மனத்தைக் கவர்ந்தன. நாஞ்சிநாட்டு வேளாள சமுதாயம் பலவகை இன்னல்

களும் நீங்கி அதற்குரிய உயரிய நிலையை அடைய வேண்டுமென்ற ஆழ்ந்த வுணர்ச்சி அவர்களுடைய சம்பாஷணைகளிலும் எழுத்திலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. அவர்கள் தமிழ் - இலக்கியங்களில் ஊறியவர்கள் ; தமிழ் மக்களுடைய சரிதத்தை நன் குணர்ந்தவர்கள் ; தமிழர்களுடைய உயர்ந்த லட்சியங்களிலும் ஒழுக்க நியதிகளிலும் ஈடுபட்டவர்கள் ; ஆங்கிலக் கவிஞர்களின் அறிவுரைகளில் திளைத்தவர்கள்; பிற சமுதாய சரித்திரங்களை ஊன்றி நோக்கியுணர்ந்தவர்கள்; நாஞ்சினாட்டு இளைஞர்களுக்கு ஒரு லட்சிய புருஷராக வுள்ளவர்கள். ஆடம்பரம் சிறிதும் இல்லாதவர்கள் ; ஆதலால் பிரசங்க மேடைகளிலோ பிரசாரக்கூட்டங்களிலோ அவர்களைக் காணுதல் அரிது. ஆனால் அமைதியோடும் உள்ளுணர்ச்சியோடும் தங்கள் சமுதாய நன்மையின்பொருட்டு இடைவிடாது உழைத்து வந்தார்கள். அவர்கள் உழைப்பில் சுயநலமென்பது சிறிதும் இருப்பதற்கிடமே இல்லை. தூய வாழ்க்கையுடையவர்கள் ; சந்தானம் அற்றவர்கள் ; எனவே அதுபற்றிய பாசபந்தங்களும் அற்றவர்கள். இல்லறத்தேயிருந்தும் துறவியே.

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
> பண்பும் பயனும் அது

என்ற வள்ளுவர் குறளுக்கு லட்சியமா யுள்ளவர்கள் எப்பொழுதும் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் கவித்வ நிவேதனத்திலும் வாழ்ந்து வருபவர்கள். தாம் ஆற்ற வேண்டும் அரிய முதற்கடமையாகும் என்று நினைத்தே தமது சமுதாயச் சீர்திருத்தத்திலும் சட்டச் சீர்திருத்தத்திலும் பிள்ளையவர்கள் முனைந்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் நான் திருவனந்தபுரத்தில் பிள்ளையவர்கள் அருகில் வசித்து வந்தேன். ஆதலால் இங்கே எழுதுவனவெல்லாம் எனக்கு நேரில் தெரிந்தவையே. சட்டத்தைச் சீர்திருத்தும் விஷயமாகப் பல நண்பர்களும் பிள்ளையவர்களைக் கண்டு கலந்து கொண்டு சென்றூர்கள். ஸ்ரீ மூலம் பிரஜா ஸபையின் அங்கத்தினர் பலர் பிள்ளையவர்கள் கூடவே தங்கியிருந்து சட்ட விஷயமாக விவாதித்துப் பரிசீலனை செய்து வந்தார்கள். தமது சமுதாயத்தினர்கள் சுயநலத்தின் காரணமாகச் சீர்திருத்தத்திற்கு இணங்காமற் போய் விடுவார்களோ என்ற கவலை பிள்ளையவர்களுக்கு இருந்தது. இக்கவலை மனத்திற் பட்டவுடன் 'நாஞ்சினுட்டு வேளாளருக்கு ஒரு கோட்டை விஞக்கள்' முதலிய பல துண்டுப் பத்திரங்களை வெளியிட்டார்கள். சமுதாயத்தின் பரிதாபகரமான நிலையைச் சித்திரித்துக் காட்டினுல் தம்மவர்கள் உண்மை யுணர்ந்து சீர்திருத்த விஷயத்தில் ஒருமுகமாய் உழைப்பார்கள் என்று பிள்ளையவர்கள் கருதினுர்கள். இதுதான் நாஞ்சினுட்டு மருமக்கள் வழி மான்மியத்தின் உற்பத்தியாகும்.

௩

பிள்ளையவர்கள் வரைந்த சமுதாய சித்திரம் ஒரு நூதன இலக்கிய வகையை நமது தமிழ்மக்களுக்குக் கொடுத்தது. இவ்விலக்கிய வகையில் நகைப்பும் இகழ்ச்சியும் சோகமும் ஒன்ருகக் கலந்து வரும். பெரியதோர் பயனும் விளைவதாகும்.

மக்களுக்கு நகைப்பு - உணர்ச்சியும் இகழ்ந்துரையாடலும் இயல்பாகவுள்ளவையே. ஏதாவ

தொரு வகையிற் பொருத்தமற்ற மொழி அல்லது செயல் நிகழ்ந்தவிடத்து நகை யுண்டாகும். இலக்கண நூலார் நகைச்சுவை இன்னின்ன காரணங்களாற் பிறக்குமென்று அறுதியிட்டுரைப்பர். அக்காரணங் களை இங்கே ஆராய வேண்டும் அவசியம் இல்லை ஐந்துவயசுப் பையனொருவன் மிகப் பெரியதொரு தலைப் பாகை கட்டிக்கொண்டு வயது முதிர்ந்தவன்போல் நடிப்பானானால், பார்ப்பவர்களுக்கு உடனே நகைப்பு வந்துவிடும். இப்படியே மிக்க ஆடம்பரமாகச் சட்டை முதலியன அணிந்து செல்பவன் அடிசறுக்கிக் கீழே விழுவானானால் உடனே நகைப்பு உண்டாய்விடும். பேச்சிலும் இப்படி நகையுண்டாவதற்குரிய சந்தர்ப்பங் களை எளிதில் பாவித்துக் கொள்ளலாம். ஆடுசாபட்டி அஷ்டாவதானம் அம்மையப்ப பிள்ளை தம் வீட்டில் திருடர்கள் புகுந்து களவாடிக்கொண்டிருக்கும்போது அவர்களைப் பார்த்து 'நீவிர் பிழைத்தீர்; இனிப் பிழை யீர்' என்று கூறுதலும், இதற்குப் பதிலாகத் திருடர் கள் அவரை அடிக்கச் செல்லுவதும் நகையுணர்ச்சி யைத் தோற்றுவிக்காதபடி இருக்கமுடியுமா? இவ் வுணர்ச்சியை எழுப்பக்கூடிய நூல்கள் தமிழில் பல இருக்கின்றன. பம்மல் சம்பந்த முதலியாரவர்கள் இயற்றிய 'சபாபதி' என்னும் நாடகம் நகைச்சுவை யிலே தோய்ந்திருக்கிறது. வில்லியப்ப பிள்ளையின் பஞ்சலட்சணத் திருமுக விலாசம் நகைச் சுவையின் பொக்கிஷமாகவுள்ளது. வீரமா முனிவரின் பரமார்த்த குரு கதையில் நகைச்சுவை ததும்புகிறது. கம்பராமாய ணம் முதலிய காவியங்களிலும் அங்கங்கே நகைச்சுவை குமிழியிட்டொழுகுகிறது. சங்கச் செய்யுட்களிலும் ஏகதேசமாய் இந்த நகைச் சுவை தலைக்காட்டி இன்ப

மூட்டுகிறது. உதாரணமாக 'திருந்திழாய் கேளாய் நம் ஊர்க்கெல்லாஞ் சாலப் பெருநகை யல்கல் நிகழ்ந் தது' என்று வரும் கலித்தொகைப் பாட்டைக் (65) கூற லாம். பத்திரிகை யுலகிற்கூட நகைச்சுவை புகுந்துவிட் டது. இக்காலத்தே தமிழ்நாட்டில் நகைச்சுவை மலிந்த பத்திரிகைகளே இருபாலராலும் மிகவும் போற்றப்படு கின்றன. ஹாஸ்யத்தையே பெரும்பான்மை மக்கள்பெரி தும் விரும்புகிறவர்கள் என்பதை யுணர்ந்து சினிமாப் படக் கர்த்தர்களும் இந்தச் சுவையுடைய கதைகளையே படம் பிடிக்கின்றனர். ஆனால் இங்கே கூறிய நகைச் சுவைப் பகுதி யெல்லாவற்றிலும், ஆழ்ந்தவுணர்ச்சி யில்லை; ஆழ்ந்த பொருளில்லை; நிலைத்த பயனில்லை. கணநேர மகிழ்ச்சியையே நமக்குத் தந்து அதனோடு ஒழிகிறது.

இகழ்ச்சிச் செயலும் இவ்வாறுதான். விருப்பு வெறுப்பு மக்களியற்கையில் ஒன்றிக்கிடப்பவையே. வெறுப்பின் உருவவேறுபாடே இகழ்ச்சி யென்பது. நமது தினசரி வாழ்க்கையில் இவ்விகழ்ச்சி அடிக்கடி புலப்படுவதொன்றே. இலக்கியங்களிலும் இது மிகுதி யாகக் காணப்படுகிறது. தமக்குப் பொருள் கொடாத ஒருவரைக் குறித்து ஒரு புலவர்,

பாரி ஓரி நள்ளி எழினி
ஆஅய் பேகன் பெருந்தோள் மலையனென்று
எழுவருள் ஒருவனும் அல்லை, அதனால்
நின்னை நோவது எவனோ
அட்டார்க்கு உதவாக் கட்டி போல
நீயும் உளையே நின்அன் னோர்க்கே
யானும் உளனே தீம்பா லோர்க்கே

குருகினும் வெளியோய் தேளத்துப்
பருகுபால் அன்னஎன் சொல்உகுத் தேனே
(தொல் - செய்யுளியல், 125, உரை)

என்று பாடுகிருர். வசைக்கூத்து என்ற நூலொன்றும் முற்காலத்து இருந்ததாகத் தெரிகிறது. கம்பராமாயணத்தில் பல இடங்களிலும் இவ்விகழ்ச்சியுரை மிக்க திறம்படக் கையாளப்படுகிறது. உதாரணமாக, இராவணனை நோக்கி அனுமன்,

'அஞ்சலை யரக்க பார்விட் டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனியான்றன் அடுகணை யொன்றுல்மாழ்கித்
துஞ்சினன் ; எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல்'

என்ருன்

இகழ்ந்து பாடுதலையே தமது தொழிலாகக் கொண்டு, அவ்வகைப் பாடலில் சிறந்து விளங்கியவர் காளமேகம் என்று கூறுவர்.

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்

என்பது அவர் பாடல்களில் ஒன்று.

மேற்காட்டியன போன்ற இகழ்ச்சி யுரைகளெல்லாம் யாரேனும் ஒருவரைக் குறித்துத்தோன்றியவை; கணநேரந் தோன்றும் மனவேறுபாட்டுக்கு ஒரு போக்கிடமா யமைந்தவை ; பொருள் அற்றவை ; நன்மை யற்றவை ; வசையென்ற அளவில் நல்லுணர்வுடையோரால் கொள்ளத் தகாதவை.

இகழ்ச்சியுரை வசையாக மாத்திரம் அமையாத படி குற்றத்தைக் கண்டித்து நீக்குதலேயே உண்மையான நோக்கமாகக் கொண்டதாயின் அப்போது அவ் விகழ்ச்சி ஒருபடி உயர்ந்து விடுகிறது. புராதன லத்தீன் ஆசிரியர்களுள் லுஸில்லஸ் என்பவர்தாம் இந் நோக்கத்தை முதன்முதற் கையாண்டவர் எனக் கூறுகிறார்கள். இகழ்ச்சிக் கண்டனம் ஒருவரைக் குறித்துத் தோன்றாது ஓரினத்தவரைக் குறித்து எழுமாயின், அதனால் விளையும் நன்மை மிகப் பலவாதற்கு இடமுண்டு. இனம்பற்றி யெழும் இகழ்ச்சியுரையின் தோற்றுவாய் 'ஹோமர்' என்ற கிரேக்க மஹா கவியின் சிருஷ்டிகளில் காணப்படுகிற தென்பர். கம்ப - ராமாயணத்தில் அது வெளிப்படும் திறம் கவனிக்கத் தக்கது. இராவணன் முதலிய அரக்கர்களால் அடிமைப் படுத்தப் பட்டவர்கள் இந்திரன் முதலிய தேவர்கள். இத்தேவர்களின் ஏழைமை நிலை பலவிடங்களிலும் வெளிப்படுகிறது. இலங்கையைச் சூழ்ந்திருந்த பொழிலுக்கு இவர்கள் காவற்காரரா யிருந்தனர். அப்பொழில் அழிந்ததைப் பற்றியும் பஞ்ச சேனபதிகள் அக்ஷயகுமாரன் முதலானவர்களின் வதத்தைப் பற்றியும் இராவணனுக்கு அறிவிக்கும் பொறுப்பு இவ்வேழைத் தேவர்களுக்கு ஏற்பட்டது. இராவணன் சமுகத்திற்கு அவர்கள் உள்ளம் பறைகொட்ட நடு நடுங்கி வருதலும் அவனிடம் சொல்லுவதற்கு அஞ்சித் தடுமாறும் நிலைமையும், நகைச்சுவைபட, இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற, வருணிக்கப்படுகின்றன. அடிமை வாழ்வின்மீது ஏற்படும் அருவருப்பு தேவ ஜாதியாரின் மீது ஏற்றியுணர்த்தப் படுகிறது. இதனால் விளையும் சுவையும் பயனும் பெரிதும் போற்றத் தக்கவை.

இராமாயணத்தில் வருவது பழங்காலச் சரித்திரத்தில் ஓர் ஆழ்ந்தவுண்மை. ஓர் ஆசிரியன் தன்காலத்து வாழ்ந்த சில இனத்தாரைப் பரிகசித்து இகழ்வதுதான் மிகுதியாகக் காணப்படுகிறது. இவ்வாறு இகழப்படுதற்குப் பெரும்பாலும் பெண்ணினத்தார்களும் துறவு வேடம் பூண்டவர்களுமே தக்கவர்கள் ஆவார்களென்று ஆசிரியர்கள் கருதினர்கள்.

பெண்களுடைய நடையுடை பாவனைகளையும் அவர்களுடைய சாகசத்தினையும் அறிவு நுட்பத்தினையும் 'அளக்கவொண்ணு வஞ்சத்'தினையும் பற்றிப் பல நூல்கள் ஆங்கிலத்தில் முற்காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணமாக, தாமஸ் டெக்கர் என்னும் கவிஞர் எழுதிய 'பிரமசாரியின் விருந்து' (Bachelor's Banquet) என்ற நூலைக் கூறலாம். நமது நாட்டில் பெண்களைப் பழித்துரைத்தலே பிற்காலத்தில் - சைன பௌத்த மதங்கள் ஓங்கி நின்ற காலத்தில் - பெருவழக்காக ஏற்பட்டு விட்டது:

புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல-புதுப்புனலும்
மாரி யறவே அறுமே அவரன்பும்
வாரி யறவே அறும்.

என்ற நாலடிச் செய்யுளும்,

உண்டியுட் காப்புண் டுறுபொருட் காப்புண்டு
கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே

என்ற வளையாபதிச் செய்யுளும் தக்க உதாரணங்களாம். இங்ஙனமே ஒரு பௌத்த பிக்ஷுவையும் ஒரு

காபாலிகனையும் 'மத்த விலாஸ ப்ரஹஸநம்' என்ற வடமொழி நாடகம் பரிகசிக்கிறது. வள்ளுவரும்,

தேவ ரணையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

எனவும்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்

எனவும் கயவர்களையும் கூடாவொழுக்கமுடைய துறவிகளையும் குறித்துக் கூறுகிறார்.

இங்ஙனம் பெண்டிர், பொய்த் துறவிகள் முதலாகிய இனத்தினர்களை இகழ்ந்துரைப்பதிலே அவர்கள் திருந்தவேண்டுமென்ற நோக்கமும் ஏற்பட்டு விட்டதாயின், அவ்விகழ்ந்துரை நம்மைச் சூழ்ந்துள்ள தீங்குகள் அறியாமை முதலியவற்றை நீக்குவதற்கு ஏற்ற நற்கருவியாகி விடுகிறது. இகழ்ச்சியினாலே உண்டாகக்கூடும் மனக்கசப்பு, அவ்விகழ்ச்சியோடு உடனொன்றிவரும் நகைச்சுவையினால் மாறிவிடுகிறது. நன்மை பெருகுதற்குத் தக்க வாய்ப்பு ஏற்படுகிறது. கோபத்தினால் கொறுகொறுக்கும் ஒருவன் முகத்திற் கெதிரே கண்ணாடியைக் காட்டுவது போன்ற பயன் விளைகிறது. ஆகவே நகைப்பு, இகழ்ச்சி, நன்னோக்கம் ஆகிய மூன்றும் இயைந்துவரும் சரளகாவியமொன்றே தமது கருத்திற்கு ஒத்ததெனப் பிள்ளையவர்கள் துணிந்தார்கள். இச்செய்யுள் வகையை ஆங்கிலத்தில் 'ஸட்டயர்' (Satire) என்று கூறுவார்கள். தொல்காப்பியர் 'அங்கதம்' வசையொடும் நகையொடும் கூடியது என்று கூறி, அது 'செம்பொருள் - அங்கதம்', 'பழிகரப்பு - அங்கதம்' என இருவகைப்

படும் என்றனர் (செய் 129, 124). ஒருகால் இது 'பழிகரப்பு - அங்கதம்' என்றதில் அடங்கலாம். ஆனல் இதைப் பிரகசனம் என்று சொல்வது மிகப் பொருத்தமாகும்.

பிரகசனத்தின் இயல்பை நாம் நன்குணர்தல் வேண்டும். மக்களில் ஒரு பகுதியார் தாம் கையாண்டு வரும் ஒழுக்கங்களும் பழக்க வழக்கங்களும் நல்லவை யென்று கொண்டு, அவைபற்றித் தமக்குள்தாமே திருப்தியடைந்திருப்பர். அவ்வாறு திருப்தியா யிருத்தல் தவறென்றும் அவ்வொழுக்க முதலியன திருந்துதல் அவசியமென்றுங் காட்டி நல்வழிப்படுத்துதலே பிரகச னத்தின் நோக்கமாகும். உண்மையைச் சிறிது மிகைப் படுத்திக் கூறுதல் இவ்வகை நூல்கள் மேற்கொள்ளும் பொது முறையாகும்.

இப் பிரகசனம் இருவகை நெறியிலே செல்லலாம். ஒன்று பண்பட்ட அமைதி நெறி; நல்லியற்கையினின் றும் தவருத நெறி. இந்நெறியிலே பிரகசனத்தின் அடிப்படையில் நீதி உள்ளடங்கிக்கிடக்கும். ஆசிரியன் தான் பரிகசிக்கும் சமுதாயத்தின் ஓரங்கம் என்பதை மறந்துவிடுவதில்லை. தான் சமுதாயத்தினரைப் புண் படுத்த வேண்டுமென நினைப்பதேயில்லை. பரிகாசமும் மிகவும் நயமாகவும் சரளமாகவும் இருக்கும். லத்தீன் ஆசிரியர்களுள் ஹாரெஸ் (Horace) என்பவர் இந் நெறியில் பிரகசனங்கள் எழுதியமையால் இதனை ஹோரேஷியன் (Horatian) நெறியென்று மேலைநாட் டறிஞர்கள் கூறுவார்கள். இந்நெறியைச் சாந்தநெறி என்று சொல்லலாம். பிறிதொரு நெறி உக்ரநெறி யென்று சொல்லலாம். தீமைகளையும் குற்றங்களையும் கண்டவுடன் ஆசிரியனது உள்ளங் கொதித்துப்

பொங்குகிறது; எரிமலையினின்று பொங்கிவழியும் நெருப்பாறுபோலக் கண்டனச் சொற்கள் பரந்து பாய்கின்றன. இந்நெறியில் அருவருப்பு எளிதில் உண்டாகும்படியாய் உண்மை சிறிது மிகுத்துக் கூறப்படுவதாகும். லத்தீன் ஆசிரியருள் ஜூவெனல் (Juvenal) என்பவர் இந்நெறியைக் கையாண்டமையால் இதனை ஜூவெனேலியன் (Juvenalian) நெறியென்று கூறுவார்கள்.

பிள்ளையவர்களோடு பழகியவர்கள் மேற்சுட்டிய இரண்டு நெறிகளுள் சாந்த நெறியை அவர்கள் மேற்கொள்ளலாம் என்று நினைப்பார்கள். ஆனால் அந்நெறி அவர்கள் நோக்கத்தை நிறைவேற்ற வல்லதல்ல. அவர்கள் கூறுமாறு:

> காரணத் தீனம் கடிய தீனம்
> கண்டுரேத்தில் மருந்து கருத்தாய்க்
> கொடுத்தா லன்றிக் குணமாகாது
>
> (நாகாஸ்திர. 79 - 81)

ஆதலால் உக்ரநெறியே கைக்கொள்ளத் தக்கதாயிற்று. இந்நெறி தம் இயல்பிற்கு முற்றும் மாறுயுள்ளது. இதற்கு ஏற்றதொரு கதாபாத்திரத்தைச் சிருஷ்டித்துக் கதையும் ஒன்று அமைப்பது இன்றியமையாததாய் முடிந்தது.

கதையைச் சொல்லுவது சூத பௌராணிகரா? அல்ல. அவருக்கு நாஞ்சினாட்டுக் குடும்பத்தினரின் துன்பத்தை அளவிட முடியுமா? அத்துன்பத்தின் காரணத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று அவரது உள்ளங் கொதித்தெழுமா? இரண்டும் முடியாத காரியம். அக்குடும்பத்திற் பிறந்த ஒருத்திக்குத்தான்

இரண்டும் இயலும்; வாய்பேசாது மௌனமாயிருந்து துக்கங்களையெல்லாம் அடக்கியடக்கி வைப்பாள்; முடிவில் அத்துக்கங்கள் நெடுங்காலமாக அடக்கப்பட்டிருந்த காரணத்தினாலே, குமுறிக் கொந்தளித்து அதிவேகத்துடன் வெளிப் புறப்படும். அந்நிலையில் வருஞ் சொற்கள் உண்மையோடு பட்டனவாகும்; கேட்டோர் இதயத்தைத் தகர்க்கத் தக்கனவாகும். இக்காரணங்களினால் நாஞ்சினாட்டுக் குடும்பத்திலுள்ள பெண்ணொருத்தியின் வாய்ப்பிறப்பாகவே கதையைப் பிள்ளையவர்கள் அமைத்துள்ளார்கள். தன் சுய சரிதையையே அவளுங் கூறுகின்றாள். இச்சுய சரிதையின் மூலமாக எத்தனையோ காட்சிகள் சித்திரிக்கப்படுகின்றன.

உலகமே துக்கமயமாய்த் தோன்றுகிறது. எல்லா வகை இடையூறுகளையும் நீக்க வல்ல விநாயகக்கடவுளும் இடையூற்றால் நெஞ்சு கலங்கி வருந்திநிற்பவர் போலத் தோன்றுகிறார். அவரும் மருமக்கள் வழியைச் சார்ந்தவராயிருக்க வேண்டும்; அதனால்தான் துன்புறுகிறாரெனச் சுயசரிதை கூறும் கதாநாயகி நினைக்கிறாள். இக்கடவுளின் அருகே நிற்கும் ஒரு சிலரிடத்தும் துக்கம் தோன்றுகிறது; ஆனால் மனத்தில் இரக்கமில்லை; ஏழைப் பெண் புலம்புவதில் ஒரு மாத்திரை அதிகமென்று துக்கிக்கிறார்கள். இவர்கள் இலக்கண வித்துவான்கள்; தாடிபற்றி யெரியும்போது சுருட்டுப் பற்றவைக்க நெருப்புக் கேட்கிற இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களைத் தனது சோகங்கலந்த சிரிப்பினால் ஒதுக்கி விட்டுத் தனது கதையைத் தொடங்குகிறாள். துன்பத்திற்கும் வறுமைக்கும் தாயகமாயுள்ள ஒரு குடும்பத்தில் தோன்றினாள்; அநாதை. பஞ்சகலியாணிப் பிள்ளைக்கு ஐந்தாவது மனைவியாய் இவள் வாழ்க்கைப் பட்டாள்;

புகுந்தகத்தில் செல்வமிருந்தது ; ஆனால் துன்பத்துக்குக் குறைவில்லை. அங்கே அவளுக்குக் கிடைத்தது புழுக்கை யுத்தியோகந்தான் ; சக்களத்திகளின் தலையணை மந்திரோபதேசமெல்லாம் இவள் தலையில்தான் விடிந்தது. மாமியின் கொடுங்கோ லரசு ; இவ்வரசி தாடகைப் பிராட்டியின் அவதாரம் ; இவள் திருவிளையாட லெல்லாம் பத்துப் பரஞ்சோதிகள் பாடினாலும் முடிவடையாது.

இந்த ஆட்சியில் புது மருமகள் 'கஞ்சியோ கூழோ காடி நீரோ கும்பியாரக் குடித்ததேயில்லை'.

ஒருநாள் தன் மகன் கேலியாகப் பேசத் தொடங்கியது அவனுக்கே கெடுவினையாக முடிந்தது. இதனால் விளைந்த துன்பம் ; இதுபோன்ற துன்பங்களிடையில் நகைப்பு - நிகழ்ச்சிகள் ; தனது கணவன் மனைவியர் இவரோடும் குமரித் தீர்த்தம் ஆடியது (இது தேவர்களுக்கும் ஆனந்தமளிக்கும் திருக்காட்சி) ; கணவன் தீர்த்த மாடியதன் பயனாக மீளாவுலகம் புகுந்து மீண்டு வந்தது ; தான் அடைந்த தாங்கவொண்ணாத் துன்பம் ; பின்னர், கணவனது எச்சிற் சோற்றுக்குச் சக்களத்திகள் செய்த சச்சரவு : இவையெல்லாம் மழையிருளும் மின்னலும்போல மாறிமாறிக் காட்சியளிக்கின்றன. காரணவனாகிய தன் கணவனை மருமகனை அவகாசி பழித்து வைகிறான். இங்கே,

ஆரைக் கேட்டுநீர் ஐந்து கலியாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர் ஐயா ?
பட்டப் பெயரும் பஞ்ச கலியாணிப்
பிள்ளை யென்றுநீர் பெற்று விட்டீரே

என்று மருமகன் கூறுவது நகைச் சுவையின் பேரெல்

லேயைத் தொட்டு விடுகிறது. மருமகனுக்கு விடையாகக் காரணவன் தனது ஸ்தானத்தின் கௌரவமும் குடும்பத்தின் பெருமையுந் தோன்றச் சொல்லும் சொற்கள் மிகவும் சுவை பொருந்தியவை. ஆலடிமாடன் கொடை, அதில் காரணவன் 'கணிசமாக' அலங்கார வுடை தரித்து ஆடுதல், இழவு 'அடியந்திரம்', கோயில்களில் குடும்ப கௌரவத்திற்காக ஏற்படுத்தும் கட்டளைகள், சானல் வாச்சர் (Channel Watcher) சந்தனத் தேவருக்கு 'அட்ரஸ்' கொடுத்தல், மருமகன் ஏழு வருஷமாய் இங்கிலீஷ் படித்து ஏ. பி. ஸி. டி எழுதத் தெரியாம லிருத்தல், மருமகன் ராஜா திருவிளையாடல்கள்: இவைக ளெல்லாம் நினைக்குந் தோறும் நம்மை விலா வொடியச் சிரிக்கச் செய்கின்றன. மருமகனது தந்தை வீரபத்திர பிள்ளை வந்து அவன் மகனுக்காகச் சண்டையிட்டு 'வைய வைய வைரக் கல்லும் திட்டத் திட்டத் திண்டுக் கல்லு'மாய்த் தன் கணவர் இருந்த காட்சி பார்ப்போருக்கு நகைக்கிடமாகவும் அவளுக்கு ஆற்றொணுத் துயரத்துக்கிடமாகவும் உள்ளது. பின் குடும்பச் சண்டை முற்றிக் கோர்ட்டுச் சண்டையாக மாறி விடுகிறது. முதலில் இருந்த வீறுப்புகள் வர வரக் குறைகின்றன; குடும்பச் சொத்துக் கரைந்துபோய் விடுகிறது; காரணவருக்குத் தேகவலிமை குன்றிவிடுகிறது; கவலையும் நோயும் பீடிக்கின்றன. முடிவில்,

படிப் படியாய் இப்படியவர் பாடு
குறைந்து குறைந்து கொண்டே வந்தது
அண்டை வீடாகி அறைப்புரை யாகி
படிப்புரை யாகிப் பாயிலு மானர்

எழுந்து நடக்க இயலாதானூர்
நடந்தவர் கீழே கிடந்தா ரம்மா !

நோயும் பாயுமாய்க் கிடந்த இக்காரணவருக்கு இரண்டு மனைவியர்களே கடைசிக் காலத்தில் உதவியவர்கள். கடைசிக் காலமும் அமைதியாய்க் கழிந்தபாடில்லை. அவரது தங்கையும் மருமகனும் இருக்கிற பொருள்களைக் காவல் செய்துவைப்பதற்கு வந்து சேர்ந்தார்கள். மருமகனிடத்தில் நல்ல வார்த்தை சொல்லித் தன் மனைவி மக்களைக் காப்பாற்றும்படி சொல்லுகிறார். தங்கை இதைக் கண்டு மிகவும் கோபித்து வைப்புத் திட்டங்களெல்லாம் பூட்டி முத்திரை யிடச் செய்கிறாள். கதையைச் சொல்லி வரும் ஐந்தாம் மனைவி

கணவர்க் கந்திய காலம் தண்ணீர்
குடிக்கும் பாத்திரம் குடுக்கை யானதும்
பரந்த சட்டி படிக்க மானதும்
பாலும் அன்னப் பாலே யானதும்

எண்ணி யெண்ணி நெஞ்சம் குமுறுகிறாள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் கணவனது அந்திய நிலையில் அவரது ஆத்ம சாந்திக்குத் திருவாசகம் படிக்கத் தன் மகனைச் சொன்னபோது அவன் தன்னால் முடியாதென்று தமிழை இகழ்ந்து சொன்னது இப்பெண்மணியின் நெஞ்சைப் பிளந்து விட்டது. கணவர் முடிவு வந்தது ;

ஏங்கி யழுத எங்களை நோக்கினர்
வாடி யழுத மக்களை நோக்கினர்

கடவுளை யெண்ணிக் கையை எடுத்தனர்
கண்ணை மூடினர், கயிலைபோய்ச் சேர்ந்தனர்.

கதாநாயகியின் துக்கம் நிரம்பிவிட்டது. அவள் கண்களிலும் இதயத்திலும் உதிரங் கொட்டுகிறது; அவள் வயிறு எரிகிறது. அனற்பிழம்பு பெருக்கெடுத் தோடுவதுபோல் அவள் சொற்கள் புறப்படுகின்றன: மருமக்கள் வழி

மனிதரைப் பேயாய் மாற்றும் பாழ்வழி
... ...
நடைப்பிணம் ஆயிரம் நடக்கும் வனவழி
வெவ்வழி, சற்றும் வெளிச்சமிலாவழி
இருள்வழி, செல்பவர் இடறும் கல்வழி
... ...
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று
அவ்வை சொல்மொழி அறியா மடவழி
... ...
ஐயோ, இவ்வழி ஆகா தாகாது
ஆடுகள் மாடுகட் காகும் இவ்வழி
மனிதர் செல்லும் வழியாயிடுமோ ?
... ...
கற்றவர் உளரோ கற்றவர் உளரோ !
பெற்ற மக்களைப் பேணி வளர்த்திடாக்
கற்றவர் உளரோ கற்றவர் உளரோ ! !

அறிஞரும் உளரோ அறிஞரும் உளரோ !
வறுமைக் கிரையாய் மக்களை விட்டிடும்
அறிஞரும் உளரோ அறிஞரும் உளரோ ! !

நீதியும் உளதோ நீதியும் உளதோ !
மாதர் கண்ணீர் மாறு நிலத்தில்
நீதியும் உளதோ நீதியும் உளதோ ! !

தெய்வமும் உளதோ தெய்வமும் உளதோ !
பொய்வழிப் பொருளைப் போக்குமிந் நிலத்தில்
தெய்வமும் உளதோ தெய்வமும் உளதோ !!

என்று கதறி ஓலமிடுகிருள் நமது கதாநாயகி.

௬

இப்புதிய கண்ணகியின் ஓலம் வீணுகிப் போய் விடுமா ? நாஞ்சிஞட்டுப் பெருமக்கள் காதைத் துளைத்து விட்டது. அவர்கள் இதயக் கோட்டையைத் தாக்கித் தகர்த்து விட்டது. அவர்கள் குடும்பம் மேன்மை யடைவதற்குரிய சீர்திருத்த மசோதா கொல்லம் ஆண்டு 1101-ல் (1926) சட்ட சபையில் நிறைவேறி 1102-ல் அமுலுக்கு வந்தது. இம் மான் மியமே சீர்திருத்தத்திற்குக் காரணமா யிருந்தது.

இம்மான்மியம் திருவனந்தபுரத்தி லிருந்து முன் பிரசுரிக்கப்பட்டு வந்த 'தமிழன்' என்ற பத்திரிகை யில் 1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் தொடங்கிப் பகுதி பகுதியாக வெளிவந்து கொண்டிருந்தது. 1918 பெப்ரு வரியோடு முற்றுப் பெற்றது. அக்காலத்தில் அப் பத்திரிகையின் ஆசிரியரா யிருந்தவர்கள் பண்டித எஸ். முத்துசாமிப் பிள்ளையவர்களும் திருவனந்தபுரம் மஹாராஜா கல்லூரி மலையாளப் பேராசிரியர் சி. என். ஏ. அனந்தராமைய சாஸ்திரிகளும் ஆவார்கள்.

பத்திரிகையில் ஆசிரியர் பெயரோடு மான்மியம் வெளிவரவில்லை. பழைய ஏட்டுச் சுவடியில் இருந்த நூலை அச்சிற்பதிப்பிக்கிற பாவனையிலே வெளியாகிக் கொண்டிருந்தது. ஆசிரியர் பெயர் காணப் பெரு

விட்டாலும், பழைய நூல் என்ற தோற்றத்தோடு பிரசுரமாகிய போதிலும், இத்தோற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு நூலிற் சிற்சில வரிகளும் சொற்களும் பொடிந்து போயின என்று குறிப்பிட்டிருந்தபோதிலும், எழுதியவர்கள் இன்னார்தாமென்பது பலருக்குந் தெரிந்த இரகசியமாகத்தான் இருந்தது. ஒவ்வொரு பகுதியும் வெளிவர வெளிவர, தமிழ்மக்கள் அதனை ஆவலாய் வாங்கிப் படித்து வந்தார்கள். இலக்கியச் சுவையிலே ஈடுபட்ட ஸ்ரீ கே. ஜி. சேஷையர் முதலானவர்கள் இந்நூலின் பெருமையைப் பலரும் அறியச் செய்து வந்தார்கள். நாஞ்சினாட்டு வேளாள இளைஞர்கள் இதனை வாசித்து உள்ளங் கொதித்தார்கள்; அவர்களில் முதியோர்கள் இதனை வாசித்த அளவில் இதிலே பொதிந்து கிடக்கும் உண்மையையும் சீர்திருத்தத்தின் அவசியத்தையும் உணர்ந்தார்கள். அந்நாட்டு ஆண்களும் பெண்களும் நூலிலுள்ள நகைச்சுவையில் ஈடுபட்டு உளத்தாற் சிரித்து மகிழ்ந்தார்கள். தமிழிலே ஒரு நூதன இலக்கியம் தோன்றிவிட்டது.

மான்மியம் ஒரு சமுதாயத்தில் சீர்திருத்தத்தை விளைத்தது. அப்படியே தமிழ் நடையிலும் கவிஞர் சமுதாயத்திலும் சீர்திருத்தத்தை இது விளைக்கவல்லது என்பதைத் தமிழ் அறிஞர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை
ஸர்வகலாசாலை
20-11-42

எஸ். வையாபுரிப் பிள்ளை
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்

பொருளடக்கம்

			பக்கம்
	முன்னுரை	...	எ
	நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்		1
	கதைச் சுருக்கம்	...	2
	விநாயகர் வணக்கம்	...	3
	அவையடக்கம்	...	5
1.	குலமுறை கிளத்து படலம்	...	6
2.	மாமி அரசியற் படலம்	...	11
3.	கேலிப் படலம்	...	14
4.	கடலாடு படலம்	...	16
5.	பரிகலப் படலம்	...	19
6.	நாகாஸ்திரப் படலம்	...	22
7.	கருடாஸ்திரப் படலம்	...	28
8.	வாழ்த்துப் படலம்	...	40
9.	கோடேறிக் குடிமுடித்த படலம்	...	47
10.	யாத்திரைப் படலம்	...	75
11.	கும்பியெரிச்சல் படலம்	...	84
	பிழை திருத்தம்	...	89

நாஞ்சில் நாட்டு

மருமக்கள் வழி மான்மியம்

கதைச் சுருக்கம்

நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி வேளாளர்குலத்தில் பிறந்த ஒரு பெண் தன் ஜீவிதகாலத்தில் அனுபவித்த கஷ்டங்களையெல்லாம் எடுத்துச்சொல்லி வருந்துகிருள். இவள் ஓர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவள். பதிஞருவது வயதில் ஒரு பிரபுவுக்கு ஐந்தாம் மனைவியாஞள். கணவன் வீட்டில், மாமி, சக்களத்திகள், மதினி முதலியோரால் இவள் அடைந்த துன்பத்திற்கு அளவில்லை. சிறிது நாளில், இவள் கணவனுக்கும் அவன் மருமகனுக்கும் குடும்பக் காரியங்களை முன்னிட்டு மனஸ்தாபம் உண்டாயிற்று. மனஸ்தாபம் முற்றி வழக்காய் முடிந்தது. வழக்கு முடியுமுன் கணவன் வியாதியில் வீழ்ந்தான். அச்சமயம் அவனுடைய [1]அவகாசிகள் செய்த துன்பங்களைச் சொல்லிமுடியாது. மரணத்தறுவாயில் கணவன், தன் மக்களைக் காப்பாற்றும்படி மருமகனிடம் ஒப்புவித்தான். ஆனல், அவன் இறந்தவுடன், மனைவி மக்கள் யாவரும் வீட்டிலிருந்து வெளிப்படுத்தப்பட்டனர். அப்பொழுது, தங்களுக்குள் வழங்கும் மருமக்கள்வழி அவகாசக்கிரமத்தை அப்பெண் பழித்துரைக்கிருள்.

[1] அவகாசிகள் - வாரிசுகள்.

நூல்

விநாயகர் வணக்கம்

எம்பெரு மானே! இணையடி பரவும்
அன்பினர் வேண்டிடும் அவையெலாம் அளிக்க
யானை நீள்கரம் ஏந்திய கடவுளே!
உலகெலாம் போற்றும் ஒருவனே! உனது
தந்தையோ,
என்றும் கையில் தலையோ டேந்தி
இரந்து திரிவான், இருப்பிட மில்லான்,
அம்பலந் தோறும் ஆடி அலைவான்,
அமிழ்தென நஞ்சையும் அள்ளி யுண்பான்,
பித்த னாகிப் பேயொடு குனிப்பான்,
நாடிய பொருளெலாம் நாசஞ் செய்வான்.

2-3. இவ்வரிகளுக்கு இருவகையாகப் பொருள் கூறலாம். 'அன்பினர் உனக்கு வேண்டிக்கொள்பவற்றை யெல்லாம் வாரியுண்பதற்கு (அளிக்க) வசதியாக யானை நீள்கரம் ஏந்தினாய்' என்பதொன்று. 'அன்பினர் உன்னிடம் வேண்டுபவற்றை யெல்லாம் அவர்களுக்கு அளிக்க யானை நீள்கரம் ஏந்தினாய்' என்பது மற்றொன்று.

10. குனிப்பான் - நடமாடுவான்.

மாமனே,
பூமக ளோடும் புவிமக ளோடும்
மதித்திட அரிய வளமெலாம் ஒருங்கு
வைகுந் திவ்விய வைகுந் தத்தில்
ஆயிரம் பணாமுடி அரவணை மீதே
அறிதுயி லமர்ந்திவ் வகில மெல்லாம்
ஆளும் பெரிய அண்ணலே யாயினும்,
கபட நாடகன் ; கையிற் சக்கரம்
இருந்தும், எவர்க்கும் ஈயாக் கள்வன்.
ஆதலின், நீயும்,
தந்தை வீடெனத் தங்கிட மின்றி
மாமன் வீடென மதிப்பிட மின்றிச்
சந்தியும் தெருவும் தண்ணீர்க் கரையும்
மரத்தி னடியும் வாழிட மாக
இருந்தனை. உன்போல் இருவழி கட்கும்
இடைவழித் தங்கி இடர்ப்படும் எங்கள்
வருத்த மெல்லாம் அறிந்திட வல்லவர்
அறிந்து முற்றும் அகற்றிடும் நல்லவர்
நடுநிலை கண்ட நாயகர் வேறிங்கு
ஒருவரும் இல்லை ;உன் திருவடி பணிந்து
மருமக் கள்வழி மான்மியம் பாடத்
தொடங்கினன். வந்து துணைநின் றிந்நூல்
இனிது முடிய இதயம்
கனிவு செய்தெனைக் காத்தருள் வாயே.

19-20. சக்கரம் - இருபொருள் : திருமால் கையி லேந்திய சக்கராயுதம் ; திருவிதாங்கூரில் வழங்குகிற சக்கரம் என்னும் ஒரு செப்பு நாணயம்.

அவையடக்கம்

அருந்தமிழ் அகத்தியன் ஆராய்ந் திடவும்
கேள்வியிற் பெரியநக் கீரன் கேட்கவும்
கல்வியிற் பெரியனும் கம்பன் காணவும்
இயற்றிய நூலிதென் றெண்ணவும் படுமோ ?
மருமக் கள்வழி யென்னும் வனத்தில்
புலிகள் சூழுமோர் புல்வா யைப்போல்
வலையிற் படுமோர் மணிப்புருப் போல
கொள்கொம் பற்றுத் துவள்கொடி போல,
ஒருத்தி ஏழை ஒருதுணை யில்லாள்,
தானும் மக்களும் தமிய ராகிப்
பொறியும் கலங்கிப் போதமும் கெட்டுப்
புலம்பும் பொழுது, புண்ணிய சீலரே !
தொல்காப் பியமுதல் பல்காப் பியங்களும்
கற்றுத் தெளிந்த கவிவல் லோரே !
விகாரம் முற்றும் விரவி வருமலால்
பொருட்சுவை சொற்சுவை பொருந்திவந் திடுமோ
எதுகை மோனை இசைந்துவந் திடுமோ
அணிகள் பற்பல அடுக்கிவந் திடுமோ ?
ஆதலின், இதனைப்

---

6. புல்வாய் - மான் வகையில் ஒன்று.

பதவியும் பணமும் படிப்பு மிலாதேன்
பஞ்சப் பாட்டெனப் பழித்திக ழாதீர்.
இலக்கண வழுஉக்கள் இருப்பினும், அவற்றை
வலித்தல் மெலித்தலாய் மதித்துக் கொண்மின்
நீட்டல் குறுக்கலாய் நினைத்துக் கொண்மின்
விரித்தல் தொகுத்தலாய் விளக்கிக் கொண்மின்
பழையன திரிதலாய்ப் படித்துக் கொண்மின்
புதியன புகுதலாய்ப் பொறுத்துக் கொண்மின்.
இன்னும்,
அமைக்கும் விதியறிந் தமைத்துக் கொண்மின்.
நாயேன்
கொண்ட கருத்தைக் குறைவறக்
கண்டு கொள்வது பெரியவர் கடனே.

---

1. குலமுறை கிளத்து படலம்

என்கதை கேளும் என்கதை கேளும்!
இரக்கமுள் ளோரே என்கதை கேளும்!
நூல்களைக் கற்ற நுண்ணறி வோரே!
நடுநிலை நீதி நடத்தும்நல் லோரே!
மக்களைப் பெற்று வளர்க்கும் சீலரே!
ஏழையென் துயரம் எல்லாம் கேளும்.
காசினி மீதென் கதைபோல் இல்லை.
சீதையின் கதையும் சிறுகதை யாகும்;

பாஞ்சா லியின்கதை பழங்கதை யாகும் ;
தமியேன் கதைக்குச் சந்திர மதிகதை
உமியாம், தவிடாம், ஊதும் பொடியாம்.
கேளும் கேளும் என்கதை கேளும்.
பதும நாபன் பாத பங்கயம்
அணிமுடி யாக அணிதிரு மூல
மன்னர் புரக்கும் வளமலி வஞ்சி
நாட்டிற் சிறந்த நாஞ்சில் நாட்டில்
தொல்லூ ராகும் நல்லூ ரதனில்
மேழிச் செல்வம் விரும்பும்வே ளாளர்
குலத்திலோர் எளிய குடியிற் பிறந்தேன்.
தந்தைநோ யாளி, தாயுமோ ரேழை,
அண்ணன் தம்பிகள் ஐவரும் மாண்டார்,
அக்காள் தங்கையும் இல்லை, அடுத்தவர்
உற்றார் உறவினர் ஒருவரு மேயிலை ;
ஒருதடி நிலமும் ஓரிணை ஏரும்
ஒருசிறு குடிலும் உண்டெமக் காஸ்தி.
ஐயோ தெய்வமே ! ஐயோ தெய்வமே !

---

13. பதுமநாபன் - திருவனந்த புரத்தில் எழுந்தருளியுள்ள திருமால். பாத பங்கயம் - திருவடித் தாமரை.

14-5. திருமூலமன்னர் - திருவிதாங்கூர் நாட்டை கி. பி. 1886 முதல் 1924 வரை ஆண்ட அரசர். வஞ்சிநாடு-திருவிதாங்கூர் நாடு.

17. நல்லூர்-சுசீந்திரத்தினருகிலுள்ள ஒரு சிற்றூர்.

24. தடி - வயல். ஓரிணை ஏர் - உழவு வேலைக்கான ஒரு ஜதை மாடும் அதற்குரிய ஒரு கலப்பை நுகமும்.

உற்றதெ லாம்சொல ஒருகழி நூலாம்.
ஒருநாள் போதுமோ? இருநாள் போதுமோ?
முற்றும் கேளும் முடிவையும் பாரும்!
தாழையம் பதிக்குத் தலைவர் - அவர் பெயர்
ஏழையான் சொல்வ(து) இசையுமோ அம்மா-
பாவியாம் என்னைப் பதினா றாண்டில்
ஐந்தாம் மனைவி யாக மணந்தனர்.
கணவர் வீட்டுக் கதையினைக் கேளும்
மனைவியர் வேலை வகையினைக் கேளும்;
தொழுத்துச் சாணம் வழிக்க ஒருத்தி
தொட்டித் தண்ணீர் சுமக்க ஒருத்தி
அடுக்களைச் சமையல் ஆக்க ஒருத்தி
அண்டையில் அகலா திருக்க ஒருத்தி;
அத்தனை பேர்க்கும் அடிமை யாளாய்
ஏழை பாவி யானும் ஒருத்தி.
எளியேன் சென்ற நாள்முத லாக
எல்லா வேலையும் என்தலை மேலாம்.
பெண்டிர் நால்வரும் பென்ஷன் பெற்றனர்.

---

27. ஒரு கழி நூல் : மிக நீண்டது. நூலைப் பிரிக்கப் பிரிக்க வந்து கொண்டேயிருப்பது போல, கதையும் சொல்லச் சொல்ல வளர்ந்து கொண்டே போகும். சொல்லி முடிவு பெறாது.

30. தாழையம்பதி - தாழக்குடி என்ற ஊர்; நாகர் கோவிலுக்கு அருகிலுள்ளது.

36. தொழுத்துச் சாணம் - மாட்டுத் தொழுவிலுள்ள சாணம்; தொழு - மாட்டுக் கொட்டில்.

பெரிய அக்காள் பெருமாப் பிள்ளை,
"ஏனடி அம்மா! யான்ஏ காங்கி.
உரிய அரிசி உண்டெனில் சோறு;
உழக்குக் குறுநொய் உண்டெனில் கஞ்சி;
மக்களைப் பெற்ற மகரா சிகள்நீர்
உண்ண வேண்டும், உடுக்க வேண்டும்,
உழைத்துப் பொருளுண் டாக்க வேண்டும்;
எனக்கினி யிங்கே யாதுண் டம்மா?"
என்று பெருமூச் செறிந்து சொல்லி,
இருந்த இடம்விட் டகலவே மாட்டாள்.
அடுத்த அக்காள், அழுபிள்ளைக் காரி
அடமும் கொஞ்சம் அதிகம் கொண்டவள்;
அம்மா, மிளகை அரைஎன் றால்உடன்
அவள்கை மதலை அழுவது கேட்டிடும்;
பிள்ளைக் குணமோ, பிடுங்கி வைப்பாளோ,
என்ன மாயமோ யானேதும் அறியேன்.
மூன்றாம் அக்காள் முழுச்சோம் பேறி;
அன்றியும்,
மூன்று மாதமாய் முழுகவு மில்லை;
வாயா லெடுப்பாள் வயாக்கோட் டியினால்
ஏறின கட்டில் இறங்கவே மாட்டாள்.

---

45. பெருமாப் பிள்ளை : ஒரு பெண்ணின் பெயர்.
46. ஏகாங்கி-குழந்தைகளில்லாமல் தனியே யிருப்பவள்.
63. முழுகவுமில்லை : கர்ப்பமாயிருக்கிறாள்.
64. வயாக்கோட்டி - மசக்கை.

இனியோர் அக்காள் எடுப்புக் காரி,
இந்தி ராணியும் ஈடிலை ; இவளது
மஞ்சள் பூச்சும் மயக்கிடு பேச்சும்
சாந்துப் பொட்டும் தாசிகள் மெட்டும்
கோல உடையும் குலுக்கு நடையும்
கொண்டை யழகும் கண்டு, கணவர்
அண்டையி லிருந்தும் அகலவே ஒட்டார் ;
‘ தங்கப் பெண்ணே தாராவே !
தட்டான் கண்டால் பொன்னென்பான்
தராசிலே வைத்து நிறுஎன்பான்
எங்கும் போகாமல் இங்கே யேயிரு’
என்று சொல்லுவ திவட்கே இசையும்.
இவள்,
அடுக்களை வந்திடாள் - அரக்குப் பாவையோ ?
கரிக்கலம் கையெடாள் - கனகசுந் தரியோ ?
வாருகோ லேந்திடாள் - மகராணி மகளோ ?
வெயிலில் இறங்கிடாள் - மென்மலர் இதழோ ?
குடத்தை எடுத்திடாள்-குருடியோ நொண்டியோ?
வஞ்சகி இவள்செய் தலையணை மந்திர
உபதே சங்களை உண்மையென் றெண்ணிக்
கணவன் ஒவ்வொரு காலத் தெங்களைப்
படுத்திய பாடெலாம் பகர்வதும் எளிதோ ?

---

66. எடுப்புக்காரி - கர்வமுடையவள்.

73-75. இது, வாய்மொழியாக வழங்கும் ஒரு பாடலின் பகுதி.

2. மாமி அரசியற் படலம்

இவர்கதை இவ்வா ருக, இனிஎன்
மாமி கதையை வகுப்பேன் கேளும்.
அரங்கு பூட்டாம், அறைப்புரை பூட்டாம்,
தட்டுப் பூட்டாம், சாய்ப்புப் பூட்டாம் ;
அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்,
நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்,
கொல்ல மிளகைக் குறுக்கி வைப்பாள்,
உப்பில் புளியை உருட்டி வைப்பாள்,
கறிக்குத் தேங்காய் கருக்கி வைப்பாள்,
கடுகையும் எண் ணிக் கணக்கிட்டு வைப்பாள் ;
தீபா வளிக்குத் தீபா வளியே
எண்ணெ யறியும் என்தலை, அம்மா !
அரைக்க மஞ்சள் அளித்திடா மாமி
குளிக்க மஞ்சள் கொடுத்திடு வாளோ ?
உன்மே லாணை, ஒருநா ளாகிலும்
கஞ்சியோ கூழோ காடி நீரோ
கும்பி யாரக் குடித்ததே யில்லை.
கந்தைத் துணிகள் கட்டின தல்லால்,
கண்டாங் கிகளைக் கண்டதே யில்லை.
அடுக்களை நடையே நிலைய மாயினும்

3-4. அரங்கு, அறைப்புரை, தட்டு, சாய்ப்பு : வீட்டின் பாகங்கள்.

7. கொல்லமிளகு : மிளகாய் வகை.

19. கண்டாங்கி - சாயப்புடைவை.

அங்கும் இங்கும் ஆக அவ்வீடு
எங்கும் இருப்பாள் எங்கள் மாமி.
இவளொரு கண்ணுக் கிணைஅவ் விந்திரன்
ஆயிரம் கண்ணும் ஆகா துண்மை.
பின்னே நோக்கினும் முன்னுள தறியும் ;
முன்னே நோக்கினும் பின்னுள தறியும் ;
எறும்பும் காணு இடத்திவள் கண்போம் ;
புகையும் நுழையா இடத்திவள் புத்திபோம்.
ஆணுய்ப் பிறந்தால் அகிலம் ஆளுவாள் ;
இருகண் இருப்பின் இடமிது போதுமோ ?
எல்லாம் வல்ல எம்பெரு மானிவள்
குணத்தை அறிந்தே கொடுத்தான் ஒருகண்.
கணகண என்றெக் கணமும் நாக்கின்
அடிக்கும் மணிவிசை அடங்கி விடுமென்று
எவரும் எண்ணி யிருந்ததே யில்லை.
ஊரை முழுதும் உழக்கால் அளப்பாள்,
நாட்டை முழுதும் நாழியால் அளப்பாள்.
நரியை முன்னம் பரியாய் ஆக்கின
நாதனும் கண்டு நாண, இவளும்
யானையைப் பூனை யாக மாற்றுவாள்,
பூனையை யானை போலக் காட்டுவாள்.
ஐயோ ! உலகுக் கெங்கள் அருமை
அத்தை திருவிளை யாடலை யெல்லாம்

38-40. நரியை...நாதன் - மதுரைச் சோமசுந்தரக் கடவுள்.

பத்துப் பரஞ்சோ திகளே பாடினும்
முடியா தென்றால், மூதறி வில்லா
அடியாள் சொல்லி அறியப் படுமோ ?
இரக்கம் சிறிதும் இன்றி, எனக்கிவள்
இடுவாள் வேலைகள் இரவும் பகலும்.
குழந்தைக் குப்பால் கொடுக்க வொட்டாள்,
கும்பி யாரக் குடிக்க வொட்டாள்,
உண்ண வொட்டாள் உறங்க வொட்டாள்,
உடலைக் கீழே சரிக்க வொட்டாள்.
அருமை மதினி அடிக்கடி அடிக்கடி
சடைவா றுதற்குத் தாய்வீ டடைவாள் ;
மக்களும் பின்னால் வருவர் ; புருஷன்
இரண்டொரு நாட்கழிந் தெட்டிப் பார்ப்பான்.
வந்தால், போகும் வரையிலும் என்னை
அம்மியில் வைத்துச் சம்மந்தி யாக
அரைத்து விடுவாள். ஐயம் அதற்கில்லை.
என்னிரு மக்களும் இவருக் கேவல்
செய்து செய்து துரும்பாய்த் தேய்ந்தார்.

---

44. பரஞ்சோதி - திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர்.

52. சரிக்க - சாய்க்க ; படுக்க.

58. சம்மந்தி (சம்பந்தி) : துவையல் வகை ; ஒரு பெண்ணின் நாயகனுடைய தங்கை அவளைவிட வயதில் சிறியவளாயிருந்தால் அவளுக்குச் சம்பந்தி முறையா வாள் ; அவளுடைய தம்பி மனைவியும் அவளுக்குச் சம் பந்தியாவாள்.

54. சடைவு ஆறுதற்கு - இளைப்பு நீங்குதற்கு.

3. கேலிப் படலம்

என்மகன் சாமி, ஏதோ ஒருநாள்,
அத்தை மகளென விளையாட் டாகவோ
வேண்டு மென்றோ, "வீர லெச்சுமி!
குலுக்கை போலக் குறுகிப் போனாயே!
எருமை போல இளைத்துப் போனாயே!
பனந்தூர் போலப் பாறிப் போனாயே!
வயிற்றில் உனக்கு மடிப்புகள் எத்தனை?
இன்னும் சிலநாள் இங்கிருப் பாயேல்,
வாசலும் வேறு மாற்றவே வேண்டும்.
குதிலும் வெளியாய்க் கொஞ்ச நாளாச்சுதே,
பத்தய நெல்லும் பாதி யாச்சுதே,
நீங்களும் வந்து நெடுநா ளாச்சுதே!
இந்த ஆடி முழுதுமிங் கிருந்து
புதுநெல் வரினும் போகமாட் டீரோ?
நல்லது நல்லது, நல்ல தம்மா!
தின்பவ னெல்லாம் தின்பான் போவான்,
திருக்கணங் குடியான் தெண்ட மிறுப்பான்,

---

4. குலுக்கை - குதிர்.

6. பனந்தூர் - பனைமரத்தின் அடி.

10-11. குதில், பத்தயம் முதலியவற்றுள்ள நெல்லெல்லாம் தீர்ந்துவிட்டது, இவர்கள் வந்து நீண்டநாள் தங்கி உண்டதனால் என்பது குறிப்பு.

16-17. 'தின்றவன் தின்றான், திருக்கணங் குடியான் தெண்ட மிறுப்பான்' என்பது ஒரு பழமொழி; செலவு செய்பவன் ஒருவன், அதனால் சுகமும் அனுபவமும் பெறுபவன் வேறொருவன் என்பது பொருள். திருக்கணங்குடி - திருக்குறுங்குடி. தெண்டம் இறுப்பான் - வரியைக் கொடுப்பான்.

அவியல் பொரியல் துவையல் தீயல்
பச்சடி தொவரன் கிச்சடி சட்டினி
சாம்பார் கூட்டுத் தயிர்ப்புளி சேரி
சேனை ஏத்தன் சேர்த்தெரி சேரி
பருப்பு பப்படம் பாயசம் பிரதமன்
பழமிவை யோடு படைப்புப் போட
எத்தனை நாளைக் கெங்களால் ஏலும் ?
அரசனும் கூட ஆண்டியா வானே !
இப்படி உண்மை யிருக்க, ' யாவும்
மக்களுக் காக வாரிக் கொடுத்தான்,
கடன்கள் வாங்கினன். கைச்சீட் டெழுதினன்
ஒற்றி கொடுத்தான் ' என்றுன் பெற்ருேர்
எங்கள்ஐ யாவைத் தூற்றுவ தெல்லாம்
உணர்வில் லாமல் உளறுவ தல்லவோ ? "
என்று கூறிய மொழிகள் யாவையும்
மங்கை கேட்டு, மனம்நொந் தழுது,
ஒன்றைப் பத்தாய்ப் பெருக்கி, உடனே
தாய்க்குச் சொன்ஞள் ; தந்தையும் அறிந்தார்;
பையப் பையப் பாட்டியும் அறிந்தாள் ;
யாவரும் கூடி, என்கண் மணியை

18-20. கறிவகைகள்.

21. சேனை - சேனைக்கிழங்கு. ஏத்தன் - ஏத்தங்காய் (ஒருவகை வாழை). எரிசேரி - இவற்றைச் சேர்த்துச் செய்யும் கறிவகை.

22. பப்படம் - அப்பளம். பிரதமன் - பாயசவகை.

30. ஐயா - தந்தை.

‘உனக்கிங் கென்ன உண்டடா பயலே?
உடையக் காரியைத் தடைவையோ பயலே?
பத்திர மாயிரு! பழைய காட்டுக்கு
அனுப்பி விடுவேன் அறிநீ பயலே’
என்றிப் படிநா எழுந்தது சொல்லி,
ஏசி வசைகள் பேசிப் பிரம்பால்
ஐயோ! ரத்தம் சிந்த அடித்தனர்.
காணு தென்று கண்ணில் மிளகும்
இட்டனர், இரக்கம் கெட்டவர் பாவிகள்.
நடந்ததை யெல்லாம் நன்கறிந் தாலும்,
யாதும் பேசா திருப்பர்என் கணவர்.

---

4. கடலாடு படலம்

நேர்ந்த வெல்லாம் நெடுநா ளாகியும்
நெஞ்சைவிட் டின்னும் நீங்க வில்லையே!
இவற்றை,
இறந்து போகுநாள் அன்றி, இடையில்
மறந்து போய்விட மருந்தும் இல்லையோ?
சென்ற

---

39. உடையக்காரியைத் தடைவையோ-சொத்துக்கு உடையவளை நீ தடை செய்வாயோ.

40. பழைய காட்டுக்கு - முன்னிருந்த இடத்துக்கு; தாய்வீடான நல்லூருக்கு; அங்கு ஏழைக்குடும்பமாதலால், சாப்பாட்டுக்கு வழியின்றிக் கஷ்டப்படவேண்டி வரும் என்பது கருத்து.

ஆடி மாதம் அமாவாசை யன்று
குடும்பத் தோடு குமரித் துறையில்
தீர்த்த மாடச் சென்று, நாங்கள்
பட்ட பாடும் பரிசு கேடும்
சொல்லி முடியுமோ ! சொல்லி முடியுமோ !
கரையில் தர்ப்பணக் கடனெலாம் முடித்து,
நீரில் இறங்காது நின்றனர் கணவர்.
நின்றனர் நின்றனர், நெடிது நின்றனர்.
கண்டவர், “ இதற்கென் காரணம் ” என்றனர்.
அவரும்,
“ ஏக காலத் திவர்களை எல்லாம்
அங்கை பிடித்துநீர் ஆடு தற்குநான்
பன்னிரு கரத்தப் பரமன் அல்லவே,
இருபது கரத்தவ் இராக்கதன் அல்லவே,
ஆயிரங் கரத்தவ் அண்ணலும் அல்லவே ! ”
என்று பலபல சொல்லி, இறுதியில்
மணந்த முறையாய் மனைவிய ரெங்களைத்
தனித்தனி யாகத் தடங்கை பற்றிக்
கடல்நீ ராடினர் ; கதையிது பெரிதே !
இங்ஙனம்,
ஐந்து முறைநீ ராடிவந் ததனால்,
ஐயோ ! அவரும் அறுபது நாள்விடாச்
சுரத்தில் விழுந்து துன்பம் அடைந்தனர்.
அடையவே,
ஏட்டைத் திருப்பித் திருப்பி யிருந்தும்,

---

8. குமரித்துறை - கன்னியாகுமரி.

பாட்டைப் பாடிப் பாடி யிருந்தும்,
நாட்டு வைத்தியர் நாளைக் கடத்தினர்.
முடிவில்,
மிஷியன் தெரசர் - மிகத்தய வுள்ளவர்,
பொறுமை நல்லகைப் புண்ணிய முள்ளவர்,
இறைவன் அடிகள் இதயத் துள்ளவர் -
வந்தொரு வாரம் மருந்து கொடுத்துக்
கணவரை மீட்டிளம் கைகளி லாக்கினர்.
இவர்,
காட்டை வெட்டிக் கஷாய மிடவோ
கடலைக் குறுக்கிக் குடிநீர் காய்ச்சவோ
மலையை யிடித்துச் சூரணம் வைக்கவோ
சொல்லி, எங்களைத் தொந்தரை செயவிலை;
அன்றியும்,
பணமோ காசோ பாதிவெற் றிலையோ
எமக்குச் செலவுகள் ஏற்பட் டதுமிலை.
இவ்வறம்
வையகத் தென்றும் வளர்க வளர்கவே!
வையகத் தென்றும் வளர்க வளர்கவே!

---

35. மிஷியன் தெரசர் - லண்டன் மிஷன் சங்கத்தைச் சேர்ந்த வைத்தியர்.

5. பரிகலப் படலம்

ஐவரை மணந்தெம் கணவர் அடைந்த
துயரெலாம் இங்கே சொல்லி முடியுமோ !
இவரில் ஒருத்தியாய் எளியேன் அடைந்த
குறையெலாம் இங்கே கூறி முடியுமோ !
ஒருநாள் -
வெட்கம் வெட்கம் மிகவும் வெட்கம் !
துக்கம் துக்கம் பெரிதும் துக்கம் !
மனமும் நாணி வருந்துதே அம்மா
நாவும் குழறி நடுங்குதே அம்மா
எப்படிச் சொல்வேன் ! யாவற் றிற்கும்
என் தலை விதியை யன்றியிவ் வுலகில்
எவரை நோக இடமுண் டம்மா ! -
தீபா வளியோ திருக்கார்த் திகையோ,
நன்ருய் எனக்கு ஞாபக மில்லை :
வீட்டில் ஏதோ விசேஷ முண்டு
வீரவ நல்லூர் விருந்து முண்டு
பருப்பு முதலிய பற்பல கறிகள்
வகைவகை யாக வைத்தது முண்டு.
வந்த மனிதரும் எங்கள் மன்னரும்
அமுது செய்துகை அலம்ப வெளியில்
இறங்கினர். உடனே, எனக்கு முன்ஞய்
வாழ்க்கைப் பட்ட மனைவிய ருக்குள்

---

16. வீரவ நல்லூர் - நாஞ்சில் நாட்டின் வடபகுதியி லுள்ள ஒரு சிற்றூர்.

இழுப்பும் வலிப்பும் எதிர்ப்பும் வந்தன,
அடியும் பிடியும் கடியு மாயின.
மனிதப் பிறவியில் வந்தவ ராமென்று
எள்ளள வேனுமோர் எண்ண மிலாதவர்
கொண்டை பற்றிச் சண்டை செய்தனர் !
மண்டை ரத்தம் வடிய விட்டனர்.
என்னுல்
ஆன மட்டும் விலக்கினேன் அம்மா
ஆகா தாகா தென்றேன் அம்மா
கெஞ்சிக் கெஞ்சிச் சொன்னேன் அம்மா
கீழே விழுந்துகும் பிட்டேன் அம்மா !
எதற்கும் அவர்கள் இணங்கிஞ ரில்லே.
எளியேன் செய்யவே றென்னுண் டம்மா ?
கூகூ என்ற கூக்குரல் கேட்டுப்
பக்கத் துள்ளார் பலரும் வந்தனர்.
ஊரார் எல்லாம் ஒன்ருய்க் கூடினர்.
விருந்தின ரெல்லாம் விரலே மூக்கில்
வைத்த படியே மயங்கி நின்றனர்.
முடிவில்,
மேலவீட் டண்ணன் வெள்ளேயம் பிள்ளே -
(நல்ல மனிதன், நடுநிலே யுள்ளவர்,
நாலுகா ரியமும் நன்ருய் அறிந்தவர்,
பட்டுத் தேறிப் பழக்கம் வந்தவர்-
என்ன செய்யலாம் ! இறந்துபோ யினரே -)
வந்தொரு வாறு வழக்கைத் தீர்த்தார் :
"ஒவ்வொரு நாளேக் கொவ்வொரு மணேவி
புருஷன் எச்சில் புசித்திட வேண்டும் ;
இடையில்,

தீபா வளியோ, திருக்கார்த் திகையோ,
வேறிம் மாதிரி விசேஷ நாளோ,
வந்திடு மாகில், வரிசை வரிசையாய்
ஐந்திலை யிட்டவை அனைத்திலும் அமுது
படைத்துப் புருஷன் பருகிய பின்னர்,
பரிகலத் துள்ள பதார்த்தம் எல்லாம்
மனைவியர் சரியாய் வகுத்துண வேண்டும்.
வழக்குகள் ஒன்றும் வரலா கா(து)"எனக்
கூறிப் போயினர் ; கூடி யிருந்தோர்
யாவரும், 'இதுவே நீதி' என்றனர்.
என்றவர்
கலகமுண் டான காரண மறிந்து
சிரித்து நின்றார், சீசீ யென்றார் ;
"எச்சில் இலைக்காய் இந்தக் களரி
கூட்டுவ ரோ ?" எனக் கூறிப் போனார்.
ஐயோ !
துயரம் துயரம், பிறப்பே துயரம் ;
பிறப்பினும் துயரம், பெண்மக ளாதல் ;
பெண்மக ளாதலிற் பெரிதும் துயரம்,
மருமக் கள்வழி வலையிற் படுதல் ;
வலையிற் பட்டு வருந்தலில் துயரம்,ஓர்
காரண வருக்குக் கழுத்தைக் கொடுத்தல் ;
கழுத்தைக் கொடுத்தலில் துயரம், கருணை
இல்லா மாமிக் கிசைய நடத்தல் ;
இசைய நடத்தலில் துயரம், என்போல்
பாரக மீதிப் பஞ்சபா விகளில்
ஒருத்தி யாக உயிர்பெற் றிருத்தலே !

6. நாகாஸ்திரப் படலம்

இம்முறை யாக இருக்கும் காலம்,எம்
கணவரை ஒருநாள் மருமகன் கண்டு
வழக்குப் பேச வந்தா னம்மா !
வந்தவன்,
அம்மான் என்றோர் அடக்கமில் லாமல்,
மாமன் என்றோர் வணக்கமில் லாமல்,
கூறின மொழியெலாம் கூறுவேன், அம்மா !
“ஆத்தாள் செத்த அடியந் திரச்செலவு
ஆயிரம் பணத்துக் கதிகம் வருமோ ?
விளையை நிலமாய் வெட்டித் திருத்த
பனையை விற்ற பணம் போதாதோ ?
கண்ணி யம்மை கலியா ணத்தில்
கால்கா சுமக்குக் கைப்பொறுப் புண்டோ ?
மருமகள் என்றொரு மஞ்சா டிப்பொன்
குச்சா கிலும்நீர் கொடுத்ததும் உண்டோ ?

---

8. அடியந்திரச் செலவு - கருமாதிச் சடங்குக்குரிய செலவு.

10-11. விளை - புன்செய் நிலம். புன்செய் நிலத்தில் நின்ற பனை மரங்களை வெட்டின பிறகு தான் அதை நன்செய் நிலமாகத் திருத்த முடியும். வெட்டின பனைகளை விற்றதனால் கிடைத்த பணம் புதுநிலம் திருத்துவதற்குப் போதாதோ என்று மருமகன் காரணவரிடம் கேட்கிறான்.

14. மஞ்சாடி - கழஞ்சில் இருபதிலொரு பாகம் ; பொன்னை நிறுக்கும் ஓர் அளவு.

15. குச்சு - காதிலணியும் ஒரு சிறு ஆபரணம்.

ஆண்டு தோறும் ஆதா யத்தில்
ஆயிரம் ரூபாய்க் கையம் இல்லையே!
ஏழாண் டாக இந்த மிச்சம்
எங்கே போச்சுது? என்னடா அப்பா,
கேட்பா ரில்லையோ, கேள்வியு மில்லையோ!
நெட்டா மாவும் நெடுங்கண் வயலும்
யாரிடம் கேட்டுநீர் ஈடு கொடுத்தீர்?
கடனுக் கென்ன காரணம்? சொல்லும்.
ஊரில் காரிய விசாரம் உமக்கு
வேண்டாம் என்றேன். விடுவனோ என்றீர்.
கணக்கன் உமது கழுத்து முறிய
எல்லாச் சுமைகளும் ஏற்றிவைத் ததனால்
அம்மன் வகைக்கீ ராயிரம் ரூபாய்
தெண்ட மிறுத்த கதைதெரி யாதோ?
உச்சிக் கொடைக்குப் பிச்சி வெள்ளையும்
கொழுந்தும் தாழம் பூவும் கொண்டு
வரவில்லை யென்றுநீர் வைரவன் மகனை
எட்டி யடித்த ஏதுவி னாலே

---

21. நெட்டாமா, நெடுங்கண் வயல்: வயற்பெயர்கள்.

26. கணக்கன் - சமுதாய வரவு செலவுகளை எழுதுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த கணக்கப் பிள்ளை.

28. அம்மன்வகை - ஊருக்குப் பொதுவான தேவி கோவிலைச் சேர்ந்த வகை.

30-32. உச்சிக் கொடை - சிறு தெய்வங்களின் கோவில்களில் உச்சி வேளையில் நடத்தும் விசேஷ ஆராதனை. இதற்கு, பிச்சிப்பூ முதலிய பூக்களை அவ்வூர் வேலைக்காரர் கொண்டு வருவது வழக்கம்.

எத்தனை ரூபாய் வாரி யிறைத்தீர் ?
இதுநாள் வரையிலும் எங்கட் காக
எதைநீர் செய்தீர் ? எதைநீர் தந்தீர் ?
மக்கட் கெல்லாம் வாரிக் கொடுத்தீர்.
ஒருபூ வாகிலும் உழக்கு நெல்லு
பொலியள விந்தா கொண்டு போஎனத்
தந்ததும் உண்டோ ? சரிசரி, இன்னும்
உள்ள நிலங்களை ஒவ்வொன் றாக
ஒற்றி கொடுத்திடும் ; மலரணை ஓலைகள்
எத்தனை வேண்டுமோ எழுதியும் வைத்திடும் ;
பேர்க்கூ லிப்பிர மாணம் செய்யும் ;
இட்ட தானம் எழுதிக் கொடுத்திடும்,
வேண்டு மானால் விலையும் கொடுத்திடும் ;
மனைவி பேர்க்கும் மக்கள் பேர்க்கும்
உகந்துடை மைப்பிர மாணம் ஒன்றுநீர்
இருக்கும் போதே எழுதியும் வைத்திடும் ;
மக்களை வீட்டில் வாழ வைத்திடும் ;
எங்களைத் தெருவில் இறக்கி விட்டிடும்.
ஆசை அங்கே அன்பும் அங்கே,
பூசை இங்கே போசனம் இங்கே !

---

42. மலரணை - பேரிரவல் (பிஞமி).

44. பேர்க்கூலிப் பிரமாணம் - தன் பெயருடைய பேரனுக்குப் பாட்டன் எழுதிக்கொடுக்கும் நன்கொடைப் பிரமாணம்.

48. உகந்துடைமை - நாஞ்சில் நாட்டு வேளாளரிடையே, கணவனுடைய சொத்தில் மனைவி மக்களுக்குரிய பாக உரிமை.

ஆரைக் கேட்டு நீர் ஐந்துகல் யாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர் ஐயா ?
பட்டப் பெயரும் ‘ பஞ்ச கல்யாணிப்
பிள்ளை ’ யென்றுநீர் பெற்றுவிட் டீரே ?
அன்னியர் பொருளை அபகரிப் பதிலும்,
ஊரார் பொருளை உண்டுவாழ் வதிலும்,
கைதேர்ந் தவர்கள் காரண வர்களே !
கள்ளர் மறவர் கணக்கரும் இவருக்கு
எள்ளள வேனும் இணையா வாரோ !
கன்னக் கோலும் கையில் எடாமல்,
எழுது கோலும் இறகும் எடாமல்,
இரவும் பகலும் இஷ்டம் போலத்
திருடும் திறம்இச் சீமையில் எவருக்கு
உண்டு ? இதனை உணர்பவ ருண்டோ ?
கள்ளன் கஜானுக் காவலன் ஆனல்,
கொள்ளை யடிப்பில் குறைவைப் பானே ?
செல்வ மெல்லாம் சிதையக் காரணம்,
சிறுவர் சோம்பித் திரியக் காரணம்,
மங்கையர் கண்ணீர் வடிக்கக் காரணம்,
வழக்குகள் மேன்மேல் வளரக் காரணம்,
குடும்ப நிலைமை குலையக் காரணம்,
நாஞ்சில்நாட் டுக்கோர் நாச காரணம் -
எல்லாம் நீங்கள் என்றறிந் தல்லவோ

---

56. பஞ்ச கல்யாணிப் பிள்ளை : ஐந்து கல்யாணம் செய்து கொண்டவராகையால் இந்தப் பெயர் ஊரில் ஏற்பட்டு விட்டது.

காரண வர்எனும் காரணப் பெயரைத்
தந்தனர் உமக்கும் அந்தக் காலமே.
காரணத் தீனம் கடிய தீனம்.
கண்டூ ரத்தில் மருந்து கருத்தாய்க்
கொடுத்தா லன்றிக் குணமா காது.
போகர் மச்ச முனிபுலிப் பாணியர்
கருணா னந்தர் கருவூர்த் தேவர்
அகத்தியர் முதலிய ரிஷிகள் அனைவரும்
வைத்தியம் மந்திர வாதம் இவற்றைப்
பாட்டுக் கணக்காய்ப் பாடி வைத்தனர்!
இவரும், காரணத் தீனம் இன்னதென்று
அறிந்தொரு குளிகை லேகியம் அல்லது
சூரணம் அதற்குச் சொன்னதும் உண்டோ?
அஷ்டாங் கிருத வைத்தியர், 'ஐயா
எல்லாப் பிணியிலும் பொல்லாப் பிணியிது,
எங்கள் நாட்டில் இப்பிணி யாலே
வருந்தா திருக்கும் மனிதர் சிலரே;
இதுநாள் வரையும் இப்பிணி தீர,
கஷாய மொன்று கண்டறிந் தவரில்
வயக்கரை மூசும் வைத்திய ரத்னமும்
எம்மா லாகா தென்றுகை விட்டிடில்

---

79. காரணத் தீனம் - காரணவ ஸ்தானம் என்ற சொற்களை மருமகன் கோபத்தில் இவ்வாறு இழிவாகக் கூறுகிறான்; தீனம் - நோய். கடிய தீனம் - நீக்க முடியாத நோய்.

90. ஜன்னி அதிகரித்திருக்கும் பொழுது கண்டௌஷதம் கொடுப்பதுண்டு. கண்டூரம் - கண்டௌஷதம்.

97. வயக்கரை மூசு, வைத்திய ரத்தினம்: இவர்கள் மலையாளத்திலிருந்த பிரபல வைத்தியர்கள்.

பிணியின்கொடுமை பேசவும்வேண்டுமோ?—'
என்று கூறி யிருந்தனர், என்செய்வார் ?
இங்கிலிஷ் டாக்டரும் இதற்கு மருந்துகள்
இருப்ப தாக இயம்பிடக் காணோம்,
இப்பிணி போல வெப்பை எழுப்பும்
பிணியிவ் வுலகில் பிறிதொன் றில்லை.
ஈக்களும் தேடி யீட்டிய தேன்போல்
பலரும் பலநாள் பாடு பட்டுக்
கூட்டி வைத்த குடும்ப முதலித்
தீனம் கொண்டவர் தீண்டுவ ரேல்,உடன்
ஆனை தின்ற விளாம்பழ மாம்அதற்கு
ஐய மில்லை ; அறியார் யாரே !
பாரும், பாரும், பத்திரமா யிரும் !
குடும்ப தோஷி என்றுமைக் கொண்டு
கோர்ட்டில் கேஸு கொடுப்பேன் பாரும்.
உண்மை யாக உம்மையும் அதனில்
சாக்ஷி போட்டு சமன்ஸை அனுப்பி,
வரவில்லை யானால் வாரண்டும் அனுப்பி,
(- காலரை செலவாம் காரிய மில்லை -)
கூட்டில் ஏற்றிக் குறுக்கு மறுக்காய்
'கிராஸும்' கேட்டுக் கேவல மாக்கி
விடவில்லை யானல், வீர பத்திரன்
மகனென் றென்னை மதிக்கவே வேண்டாம்.''

107-8. குடும்ப முதல் இத்தீனம்; இத்தீனம் என்பது காரணவ ஸ்தானத்தைக் குறிக்கிறது.

112. குடும்பதோஷி - குடும்ப காரியங்களுக்குத் துரோகம் செய்தவன்.

7. கருடாஸ்திரப் படலம்

என்று மருமகன் இயம்பிய மொழிகளை
மாமன் கேட்டு, மனமிக நொந்து,
“நல்ல தப்பா! நாகாஸ் திரங்கள்
இத்தனை தானோ? இனிவே றுண்டோ?
உன்னைச் சொல்ல ஒருகுறை யில்லை.
கலியன் முற்றின காலமி தல்லவோ?
என், மாமனார் இறந்து வருஷம்எட் டாக
யான்படும் பாடெலாம் யாரே அறிபவர்!
நாலாண் டாக நல்ல விளைவிலை;
செலவு கழிந்ததே தெய்வச் செயலாம்.
அடைமழை யாலே அழிந்ததோர் வருஷம்;
வெயிலின் கொடுமையால் வெந்ததோர் வருஷம்;
போன ஆண்டில் பொலியே இல்லை,
கொக்குநோய் விழுந்து குடியைக் கெடுத்தது;
கார்விளை வில்லை, பசானம் கரிந்தது;
விளைவிலை யாயினும் வீட்டுச் செலவில்
ஒருகுறை யேனும் உண்டோ அப்பா?
பிள்ளைப் பேறும் பிறந்த நாளும்
இல்லா வருஷம் இல்லையே அப்பா!

---

14. கொக்கு நோய் - நெற்பயிருக்கு ஏற்படும் ஒரு வகை நோய்.

15. கார் - ஆவணி புரட்டாசி மாதங்களில் விளையும் நெல். பசானம் - மாசி பங்குனி மாதங்களில் விளையும் நெல்.

குடும்பச் செலவுகள் கூறி முடியுமோ ?
ஒன்று ? இரண்டா ? ஒன்பதா ? பத்தா ?
ஆண்டு தோறும் ஆலடி மாடன்
கொடைக்கு ரூபாய் கொஞ்சமா செல்லும் ?
போன கொடைக்குப் புதிதாய் வந்த
வில்லுக் காரி வீரம் மைக்கு
நாலு சேலையும் ரூபாய் நாற்பதும்
கொடுத்தது நீயும் கூடி யல்லவா ?
எனக்கு,
சல்லடம் கச்சை தைக்க மாத்திரம்
ஐம்பது ரூபாய் ஆச்சுதே அப்பா !
போக்கில் லாத பயல்களைப் போலத்
துணியை அரையில் சுற்றிக் கொண்டு
நானும் ஆடினுல் நன்று யிருக்குமா ?
காரணவன் என்றெரு கணிசம்வேண் டாமா ?
பிலே !
சன்னிதி முன்னே தறித்த கடாவுக்கு
இருபது ரூபாய் எண்ணிவைத் தேனே !
நீங்கள்,
அப்பன் மக்கள் அனைவரும் இங்கே
இருந்து தின்றது போதா தென்று,

---

22. ஆலடி மாடன் கொடை - ஆலமரத்தி னடியி லுள்ள மாடன் என்னும் சிறு தெய்வத்துக்குச் செய்யும் சிறப்பு.

35. பிலே - பயலே ; பைதல் - சிறு பிள்ளை.

கொடியிறைச் சிகளும் கொண்டு போனீரே?
இந்தச் செலவுகள் ஏற்படு வதனால்
மாடனை வணங்கா திருக்க லாமா?
கடன்பட் டாயினும் காலா காலத்தில்
வேண்டும் காரியம் செய்யவேண் டாமா?
கொடை ஓ ராண்டு கொடுக்க முடங்கினால்
குடும்ப தோஷமும் குறையும் வராதோ?
அடே!
ஆத்தாள் செத்த அடியந் திரச்செலவு
ஆயிரம் பணமா? ஆறு யிரம்பணம்
என்று சொல்லவுன் வாய்க்கிய லாதோ?
பந்த லில்லையா, பாடை இல்லையா,
பறைமே ளங்களும் பாட்டும் இல்லையா?
நாலு தெருவும் நடைமாற் றில்லையா?
காள மில்லையா, கருங்கொம் பில்லையா,
களியல் கூத்தசை கம்புகள் இல்லையா,

---

41. கொடி இறைச்சி - ஆட்டிறைச்சி முதலியவற்றைக் கெடாமல் காப்பதற்காகக் கயிற்றில் கோத்து வெயிலில் உலர்த்துவதுண்டு. இப்படி 'கொடி'யில் உலர்த்தினமையால் 'கொடியிறைச்சி' என்ற பெயர் வந்தது.

56. களியல் - கோலாட்டம்; வயது முதிர்ந்தவர்கள் இறந்தபோது பறையர் முதலியோர் சிறு கோல்களைக் கையில் வைத்துக்கொண்டு பிரேதத்தின் முன்னே ஆடிப் பாடிக் கோலாட்டம் அடித்தல் வழக்கம். கூத்து: இந்தச் சந்தர்ப்பத்தில் வேஷம்போட்டுக்கொண்டுஆடுதல். அசை கம்பு - சிலர் நீண்டகழைகளைக் கையில் ஏந்தி அவற்றை அசைத்துப் பாடி ஆடுகிற வழக்கமுண்டு. இந்தக் கழைகள் 'அசைகம்பு' எனப்படும்.

முரசு வாத்திய முழக்க மில்லையா ?
என்ன இல்லை என்தாய்க் கப்பா?
தோசை ஆயிரம் சுட்டு மூலையில்
ஆசை தீரவைத் தழுத தில்லையா ?
பத்துச் சாக்குப் பயறும் ஒன்ருய்
அடுத்த கிழமையில் அவிக்க வில்லையா ?
தேங்காய்,
இரண்டா யிரத்துக் கதிகம் எடுத்து,
வீடு வீடாய் விளம்ப வில்லையா ?
பதினு றன்று, பார்ப்பார்க் கெல்லாம்,
பட்டும் குடையும் பாத ரட்சையும்
கட்டிலும் மெத்தையும் கடுக்கன்மோ திரமும்
பாயச பாத்திரம் பஞ்சபாத் திரமும்
அமுது படியும் அளிக்க வில்லையா ?
மேலும்,
பசுவும் கன்றும், பத்து மரக்கால்
நிலமும், தானம் நெறிதவ ருமல்
செய்ய வில்லையா ? தினமும் வெற்றிலைச்
செலவும் உனக்குத் தெரியா தோடா ?
படிப்புரை யருகில் வைத்த படிக்கம்
பத்திர காளி பலிபீ டம்போல்
ஆனதை நீயும் அறியா யோடா ?
பத்துப் பெண்கள் பட்டினி கிடந்து

---

76. படிப்புரை - ஓட்டுத் திண்ணை.

79-81. யாராவது ஒருவர் மரணமடைந்தால் இறந்தவருடைய பந்துக்களில் சில பெண்கள் பதினு நாளும் பட்டினி கிடப்பார்கள். இந்தப் பட்டினிக் காலத்தில்

பருத்திப் பொதிபோல் பதினாறும்நாள்
வெளியில் வந்திட வேண்டுமானால்,
அவர்,
எத்தனை தோசை இட்டலிக்கெல்லாம்
ஏமகாலரா யிருப்பார் அப்பா !
இட்ட செலவெலாம் எடுத்துச் சொன்னால்
எண்ணி முடியுமா ? எழுதி முடியுமா ?
சிதம்பரக் கட்டளை, செந்திற் கட்டளை,
மதுரைக் கட்டளை வகைக்கொரு பூவில்
எண்பது கோட்டை நெல்லில் உழக்குக்
குறைந்த தானால் கொடுக்க முடியுமா ?
பேயும் அஞ்சும் பெரும்ப ழஞ்சி

சோற்றைத் தவிர மற்றெல்லாப் பண்டங்களையும் உபயோகிப்பதில் ஆட்சேபனையில்லை. ஆதலால், சில பெண்கள், பண்டம் பலகாரம் ஏராளமாகத் தின்னலாமென்ற எண்ணத்தோடு, பட்டினி கிடப்பதுண்டு. அவர்களைப் பதினாறு நாளும் கழிந்த பிறகு பார்த்தால், அவர்களுடைய உடம்பு பட்டினியால் மெலிந்திராது; முன்னையிற் பார்க்கிலும் பருமனாக இருக்கும்; பெயரளவில்தான் பட்டினி; ஆகாரம் மற்றக் காலங்களைப் பார்க்கிலும் அதிகமாயிருக்கும். பருத்திப் பொதி - பஞ்சு மூட்டை.

91-95. பெரும் பழஞ்சி என்பது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நான்குனேரியைச் சேர்ந்த ஒரு சிற்றூர். அதில் ஒரு பிராமண குடும்பத்திலுள்ளவர்கள் பெயர்பெற்ற மந்திரவாதிகளாயிருக்கிறார்கள். அவர்கள் இந்திர ஜாலம், மந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், கூடுவிட்டுக் கூடு பாய்தல், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம் முதலியவற்றில் மிகவும் தேர்ந்தவர்களென்று சொல்லுவதுண்டு.

ஐய னிடத்தில் ஆண்டு தோறும்
கொண்ட கடனைக் கொடுக்கா விட்டால்,
அவர், வயிற்றை ஊத வைத்திடு வாரே!
குறளியை ஏவிக் கொன்றிடு வாரே!
நினைத்தி ராமல் நிதமும் எத்தனை
செலவுகள் வந்திடும், தெரியுமா உனக்கு?
'சானல் வாச்சர்' சந்தனத் தேவர்க்கு
'அட்ரஸ்' கொடுத்த வகைக்கோ ராறு
ரூபாய் இன்று ரொக்கம் கொடுத்தேன்.
இனி,

இவர்கள் ஆண்டுதோறும் இப்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு வந்து ஜாலவித்தைகள் செய்து பணம் பெற்றுப் போவதுண்டு. யாரேனும் தாங்கள் கேட்டபடி பணம் கொடுக்கவில்லையானால், தங்களுடைய ஜாலவித்தைகளினால் அவர்களுக்குப் பலவிதத் தீங்குகள் செய்துவிடுவதாகப் பயமுறுத்துவார்கள். ஏழை ஜனங்களும், பெரும் பழஞ்சி ஐயர் பணம் கொடுக்கவில்லையானால், வயிற்று வலி உண்டாக்கி விடுவார் என்றும், குறளியை ஏவி விட்டுக் கூரை வைக்கோற் போர் முதலியவற்றில் தீயைக் கொளுத்தி விடுவார் என்றும் நம்பிப் பயமடைவார்கள். கொண்ட கடன் - கட்டாயமாகக் கொடுத்துத் தீரவேண்டிய தண்டம் (மனமில்லாமல் நிர்ப்பந்தத்திற்காகக் கொடுக்கும் தானம்).

95. குறளி - குறளிப் பிசாசு.

98-99. சானல் வாச்சர் - நீர்ப்பாசன இலாகாவில் எட்டு ரூபா சம்பளம் பெறும் ஒரு வேலைக்காரன். வாய்க்காலில் தண்ணீர் விடுவது இவன் இஷ்டத்தைப் பொறுத்தது. அட்ரஸ் - உபசாரப் பத்திரம்.

இந்த மாதம் இருபதாம் தியதி
'கார்டர்' அண்ணன் காடு மாறிப்
போகிருர். அவரைச் சும்மா போகச்
சொல்ல லாமோ, சொல்நீ அப்பா?
இப்படி யிப்படி இன்னும் செலவுகள்
எத்தனையோ வரும்; எண்ணில் அடங்குமோ?
உழவன் மீதி உழவுக் கம்பென
உலகம் சொல்வதும் உண்மை அல்லவோ?
பிலே! நீ,
ஏழு வருஷமாய் இங்கிலீஷ் படித்தையே,
ஏ, பி, ஸி, டி எழுதத் தெரியுமா?
எத்தனை பணத்தை வாரி யெறிந்தேன்!
எல்லாம் பாழுக் கிறைத்த நீர்போல்
ஆக்கி விட்டாயே, அவலட் சணமே!
அந்தச்
சாஸ்தாங் கோவில் சாந்தி அய்யர்
மகனுக் கெத்தனை வயது காணும்?
அவன்,
படித்து, பீ. ஏ. 'பாஸாய்', நல்ல
பதவியி லிருப்பதைப் பார்க்க வில்லையா?

---

103. கார்டர் - காட்டிலாகாவில் குறைந்த சம்பளத்தில் வேலைபார்க்கும் ஓர் ஊழியன். இவனைப்போன்றவர்களுக்குங்கூட 'அட்ரஸ்' கொடுப்பதும் 'ஸென்ட்ஆப்' நடத்துவதும் உண்டென்று சொல்லி, பொதுவாக, தகுதியில்லாத உத்தியோகஸ்தர்களுக்கும் இந்நாட்டில் உபசாரங்கள் செய்வதை ஏளனம் செய்கிருர் ஆசிரியர்.

110. பிலே - பயலே.

உண்மை, உண்மை ! ஒருதடை யில்லை.
பட்டினி கிடந்து படிப்பவர் மட்டுமே
பரீக்ஷை தேறுவர், பட்டமும் பெறுவர் !
அன்றி,
ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்,
போளிக் காகப் புத்தகம் பணயம்,
சீடைக் காகச் சிலேட்டுப் பணயம்,
முறுக்குக் காக மோதிரம் பணயம்,
காப்பிக் காகக் கடுக்கன் பணயம்,
'காலரு'க் காகக் காறை பணயம்,
கூத்துக் காகக் குடையும் பணயம்,
இப்படி யாக, எல்லாம் பணயம்
வைத்துத் தின்னும் வயிற்றுக் கள்வர்
வாழ்ந்திடு வாரோ, வாழ்ந்திடு வாரோ ?
முருக்குத் தடிபோல் வளர்ந்தமுட் டாளே !
நீ, பணயம் வைத்த பண்டம் அனைத்தும்
எத்தனை தரம்நான் மீட்டி யெடுத்துத்
தந்தே னப்பா, தந்தே னப்பா !
அடே,
ஆறு வருஷமாய் 'ஐக்கோர்ட்' வரையும்
வழக்குப் பேசிஎன் மாமனு ருக்குப்
பணம்கடன் கொடுத்த பயல்களை எல்லாம்
பஞ்சாய்ப் பறத்தின பாதர் சிங்கமாம்
என்னையும் குடும்ப தோஷி யென்றுநீ

144. பாதர் சிங்கம் - பஹதூர் சிங்கம்.

சொல்ல வந்தாயே, சொல்ல வந்தாயே!
விலைக்கு விற்ற விளையை, மைனர்
வியாச்சியம் செய்து, மீட்டின துன்றன்
அப்பனு, நானு? ஆரடா, சொல்லு?
அன்பாய்ப் பேசும்உன் அப்பனுல் உனக்கு
அரைக்கா சுக்கோர் ஆதாய முண்டோ?
மூத்த
காரணவர் பெற்ற கன்றுகள் கூடி
ஆயிரம் ரூபாய்க் காவ லாதி
வைத்ததை நீயும் மறந்தா யோடா?
அந்த
உகந்துடை மைப்பணம் ஒன்றும் அவருக்கு
இல்லா தாக்க என்னபா டெல்லாம்
பட்டே னப்பா! பார்த்தது மில்லையோ?
குப்பன் சாமியும் குண்டுணிச் சுப்புவும்,
உன்,
அப்பனும் கூடி ஆலோ சனைகள்
செய்த தெல்லாம் தெரியும், தெரியும்!
அறிந்த வித்தைகள் அனைத்தையும் அவரைக்
காட்டச் சொல்போ, காட்டச் சொல்போ!
கோர்ட்டில் வியாச்சியம் கொடுக்கச் சொல்போ!
'செருப்பா லடித்தா செலவுக்கு வாங்குவார்'?
வாங்கட்டும், வாங்கட்டும்! வட்டி முடையட்
நாஞ்சி ஞட்டுக்கு நன்மையுண் டாகட்டும்! [டும்

---

153. கன்றுகள் : மக்களை நிந்தையாகக் கன்றுகள் எனக் கூறினர்.

154. ஆவலாதி - பிராது.

இனியுள காலம் எக்கா ரணவனும்
காடும் மேடும் கரையும் சுற்றி,
ஊணும் உறக்கமும் இன்றி உழைத்து,
விளையும் விளைவெலாம் வீசித் தூற்றி,
ஈரமும் பதரும் இல்லா தகற்றி,
சாக்கில் அளந்து தலையில் எடுத்து,
மாதா மாதம் மருமகன் ராஜா
திருவுளங் கொண்டெழுந் தருளி யிருக்கும்
கொட்டா ரத்தில் கொண்டு சென்று,
அவர்,
குறட்டைச் சுருதியில் கும்ப கர்ணப்
படலம் அன்பாய்ப் பாரா யணம்செயும்
காலமா யிருந்தால் காத்து நின்று, அல்லது,
நடுமனை கீறி 'நாயும் புலியும்'
இஷ்டர்கள் கூட இருந்தி ழுக்கும்
வேளையா யிருந்தால் விலகி நின்று, அல்லது,
புகையிலை வாயிற் போட்டுக் கொண்டு
பொடியும் மூக்கில் ஏற்றிக் கொண்டு
'இறக்கு, வெட்'டென இரைந்து கொண்டு
இடையிடைச் சண்டையும் எழுப்பிக் கொண்டு
பக்க மந்திரிகள் பலரொடும் சீட்டுக்

---

178. கொட்டாரம் - அரண்மனை.

182-185. நாயும் புலியும்: பதினைந்து நாயும் புலியும் என்ற விளையாட்டு (பதினைந்தாம்புலி). நடுமனை கீறுதல் - இந்த விளையாட்டு விளையாடுவதற்காகவுள்ள கட்டம் வரைதல்.

கச்சேரி செய்யும் காலமா யிருந்தால்
ஓரிடம் மாறி ஒதுங்கி நின்று,
தாயப் போர்க்கொரு தடைசெய் யாமல்,
குடித்தன மில்லாக் குறிகள் அறிந்து,
தடித்தன மில்லாச் சமயம் பார்த்து,
‘ அரசே ! பெருந்திரு அமுதுக் காக
இம்மா தத்துக் கேற்படும் நெல்விதை
அளந்து களஞ்சியத் தாக்கிடக் கற்பனை
பாலித் தருள்வீர் ’ என்று பணிந்து
நிற்கும் படிக்கு நீயும் ‘ கோர்ட்டு ’த்
தீர்ப்பைப் பெற்றுச் சீக்கிரம் வா,போ !
உள்ளநா ளெல்லாம் உங்கட் காகநான்
உழைத்த திந்த ஊரறி யாதோ !
பெண்டாட் டிக்கும் பிள்ளை கட்கும்
இத்தனை நாளாய் எத்தனை கொடுத்தேன் ?
உண்ணச் சோறும் உடுக்கத் துணியும்
கொடுத்தா லென்ன ? குறைவாய் விடுமோ ?
அடிமைகள் போலிவர் அத்தனை வேலையும்
செய்வதும் உனக்குத் தெரியா தோடா ?
‘ வயலைப் பார்த்து வா ’எனில், ‘ கிழட்டுப்
பயலே ! உனக்குப் பயித்தியம் ’ என்பாய் !
‘ கொத்தை அளந்து கொடு ’என் றால் ‘ நீ
வைத்த ஆளோ ? மாட்டேன் ’ என்பாய் !

---

196. பெருந்திருவமுது - கடவுளுக்குப் படைக்கும் பெரிய நிவேதனம்; இங்கே பரிகாசமாக மருமகனுடைய போஜனத்தைக் குறிப்பிடுகிறது.

போன பூவில் புளியடிச் சூடு
வட்டம் தள்ளி வரும்போ துன்னிடம்
‘ களத்தில் சென்று கண்காணி ’ என்றேன் ;
அந்தப் படியே அவ்விடம் சென்றுநீ
நிமிஷப் பொழுதில் நெல்லரைக் கோட்டை
கடத்தி விட்ட கதையும் எனக்குத்
தெரியா தோடா, திருட்டுப் பயலே !
மறுநாள்,
விடியற் காலம் விசாரிப்புக் காரன்
சாக்கும் இருபதாம் நம்பர் ‘ ஷாப்பில் ’
இருந்தது கண்டுவந் தென்னிடம் சொன்னான்;
‘ வெளியில் சொன்னால் வெட்க மல்லவோ ?
ஊரும் நாடும் ஒன்றாய்ச் சிரிக்குமே ! ’
என்று பேசா திருந்து விட்டேன்.
அடே,
செப்பில் கிடந்த திருக்குப் பூவன்று
எப்படி இறங்கி இரண்டாம் குடியாள்
கொண்டையில் சென்று குடியே றியது ?
என்னைக் குடும்ப தோஷி யென்று
கூற உனக்குவாய் கூச வில்லையோ ?

---

214. புளியடி - ஒரு வயலின் பெயர். சூடு - நெற் கதிரின் குவியல்.

215. வட்டம் தள்ளுதல் - கடாவிடுதல் (போரடித் தல்).

223. சாக்கு - கோணிப்பை ; நெல் களவுசெய்து கட்டிக்கொண்டுபோன சாக்கைக் குறிக்கின்றது. இருப தாம் நம்பர் ஷாப்பு : இங்கே, கள்ளுக்கடை.

குடும்பத் துக்கொரு குறையும் வராமல்
காரியம் பார்க்கும் கார ணவர்களில்,
எல்லா வகையிலும் என்னைப் போல
நல்லவர் இந்த நாஞ்சில் நாடு
பன்னிரண்டு படாகையில் உண்டோ ?"
என்று வீரம் பேசி எழுந்தனர்.

---

8. வாழ்த்துப் படலம்

இக்கொடு மொழிகளாம்
கருதற் கரிய கருடாஸ் திரங்கள்
பலவும் நெஞ்சிற் பாய, மருமகன்,
புண்பட் டுள்ளம் பொறுக்க முடியாது,
ஐயோ! என்றுகண் ணீர்விட் டழுது,
தந்தை தாயர் தம்மிடம் சென்று
விளைந்த வெல்லாம் விரிவா யுரைத்தான் ;
கோபம் பொங்கிக் கொதித்து வரும்படி
சிற்சில இடையிடை சேர்த்தும் கொண்டான்.
செப்பிய சொற்கள் தீயிற் காய்ச்சிய
கம்பிகள் போலிரு காதும் நுழைந்திட,
வீர பத்திரப் பிள்ளை வெகுண்டு,
கால்நிமி ஷத்தென் கணவரைக் கண்டு,

---

238. பன்னிரண்டு படாகை : படாகை - ஒரு நாட்டின் சிறு உட்பிரிவு. முற்காலத்தில் நாஞ்சில் நாடு பன்னிரண்டு படாகைகள் அல்லது பிரிவுகளாகப் பகுக்கப் பட்டிருந்தது.

"அடடா மூடா! அதர்மசண் டாளா!
வஞ்சகா! கொடிய மறவா! குறவா!
நெஞ்சில் இரக்கம் இல்லா நீசா!
மடையா! நீயென் மகனை நோக்கி
ஊத்தை வாயால் உளறின மொழிகளை
இன்னும் ஒருமுறை என்முன் வந்து
சொல்லடா பார்ப்போம் சொல்லடா பார்ப்போம்!
பள்ளிப் பையனை, பதினு ருண்டு
திகையாப் பாலனை, தெரியாச் சிறுவனை,
கன்னியும் காப்பும் காணுக் குமரனை,
கள்ளன் என்றும் கபடன் என்றும்
கள்ளை யுண்டு களிப்பவன் என்றும்
தடியன் என்றும் மடியன் என்றும்
தாசிகள் வீட்டுத் தானிகன் என்றும்,
பழித்துப் பேசிய பாதகா! உன்றன்
நாவை யரிந்து நாய்முன் எறிந்தா
லன்றி என்சினம் ஆரு தேயடா.
உன்மகன் சாமி ஒழுங்குகள் எல்லாம்
யானறி யேனென் றிருந்தா யோடா?
அவன்,

---

22. திகையா - பூர்த்தியாகாத.

23. கன்னியும் காப்பும் காணுக் குமரன் - கலியாண மாகாத சிறுவன்; கன்னி காணு - கன்னிகழியாத; காப்பு - கலியாணத்தின்போது கையிலணியும் மங்கலக் காப்பு.

27. தானிகன் - ஸ்தானிகன்; இங்கே, தாசிகள் வீட்டையே இருப்பிடமாகக் கொண்டவன்.

பரத்தை நாடிப் பௌரணை தோறும்
கன்னிப் பதிக்குப் போகும் காரணம்
பக்தியின் மிகுதியோ, பணத்தின் மிகுதியோ,
உண்டு கொழுத்த உரத்தின் மிகுதியோ?
உண்மை யறிய உனக்கு முடியுமோ?
கள்ளுக் குடிக்கிற காரிய மெல்லாம்
மந்தா ரம்புதூர் மதுவிளை நாடான்
கிட்டின முத்துவைக் கேட்டால் தெரியும்.
நான்சொன் னால்நீ நம்புவை யோடா?
பள்ளியில் உன்மகன் படித்துப் பெரிய
பரீக்ஷையும் கொடுத்துப் பட்டமும் பெற்றொரு
மாதவ ராயராய் வரட்டு மப்பா!
நாடும் நகரும் நடுங்கட்டு மப்பா!
அழகு அழகு அதிசயம் அதிசயம்!
பெற்ற புத்திரன் பெரும்பிழை செய்யினும்
சிறுவன் செய்த சிறுபிழை யென்பாய்,
சினந்திட மாட்டாய், சிரித்து விடுவாய்.
ஏசினும் பேசினும் எட்டி யடிப்பினும் [வாய்.
மறுத்துரை செய்யாய், பொறுத்துக் கொள்
'மக்கள்மெய் தீண்ட லுடற்கின்பம் மற்றவர்

---

34. பரத்தைநாடி யென்பது மோக்ஷத்தை விரும்பி யென்றும் தாசியை விரும்பி யென்றும் பொருள்படும்.

35. கன்னிப்பதி - கன்னியா குமரி.

40. மந்தாரம்புதூர் - கன்னியாகுமரிக்குப் போகும் வழியருகிலுள்ள ஓர் ஊர்.

45. மாதவ ராயர் - திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பிரபல திவானாயிருந்த ஸர். டி. மாதவ ராவ்.

சொற்கேட்டல் இன்பம் செவிக்'கெனச் சொல்
உண்மைக் குறளின் உட்பொருள் அறிந்து[லும்
நடப்பவர் உன்போல் நானிலத் தில்லை!
ஆனல்,
மருமகன் வந்து வணங்கி நின்று
வாழ்த்த வெண்ணி வாயைத் திறக்குமுன்,
வைதான் என்று பொய்தான் சொல்வாய்!
அடியேன் என்றவன் அங்கை கூப்பினும்,
அடித்தான் என்றநி யாயமே கூறுவாய்.
காரண வா! உன் காரிய மெல்லாம்
அற்புதம் அற்புதம் அற்புத மப்பா!
ஒருகண் வெண்ணெயும் ஒருகண் நீறும்
வைப்பது முனக்கு வழக்கம் தானடா.
இதற்குச் சாத்திரம் எங்கே பார்த்து
வைத்திருக் கின்றீர், மாப்பிள்ளைத் துரையே!
போட்டும்,
ஆண்டு தோறும் அறுப்புக் காலம்உன்
நாலாம் மனைவி நாடகக் காரி,
வித்துத் தண்டும் வாளை மீனும்
முருங்கைக் காயும் மொச்சைக் கொட்டையும்
வட்டி வட்டியாய் வாங்கி வாங்கிக்
கறிகள் வைத்துக் கஞ்சியும் வைத்து,
கஞ்சியை
ஆற்றி ஆற்றி அரையரை அகப்பையாய்
விட்டுக் கொண்டு, விசிறி எடுத்து

---

69. போட்டும் - போகட்டும் ; இது நிற்க.

வியர்வை மாற வீசிக் கொண்டு,
பற்பல பேச்சிலும் பக்குவ மாக
உண்மையும் பொய்யும் ஒருங்கு கலந்து
காலம் போக்கும் காரணம் இன்னதென்று
அப்ப முத்துநீ அறிவா யோடா?
கொட்டுக் குடவைப் புட்டும் தின்று,மேல்
குறுணிக் காப்பியும் குடித்தால் போதுமா?
வீட்டுக் காரியம் விசாரித் தறிய
மதியில் லாதவன் மனிதனு மாடா?
சாளையும் சோறும் சண்ணுமுன், சம்பா
களத்துச் சுவரைக் கடந்து போவது
எத்தனை வட்டிநெல் என்றறி வாயோ?
கூடப் பிறந்தவள் கும்பி கொதித்து
வந்துநின் றாலும், மாபா தகன்நீ,
ஆழக்கு நெல்லும் அளித்திடு வாயோ!

---

83. அப்பமுத்து - கொஞ்ச காலத்துக்குமுன் நாகர் கோவிலில் இருந்த பேர்போன ஒரு மூடன்.

84. கொட்டுக் குடவை - பாத்திர வகை.

88-9. சாளை - சாளை மீன்; இதில் துப்புவாளை என்றொரு வகையுண்டு; இம்மீன் முள் அதிகமுடையதால், சாப்பிடும்போது, முள்ளைத் துப்பிக்கொண்டேயிருக்கவேண்டி யிருக்கும். இப்படி முள்ளை நீக்கி நீக்கிச் சாப்பிடுவதற்கு அதிக நேரமாகும். பெண்டிர், இந்த மீனைக் கறிசமைத்துக் கணவருக்குப் பரிமாறி, அவர் சாப்பிட்டு எழுவதற்கு முன், களத்துச் சுவரின் மேலாக அவரறியாமல் நெல்லை அப்புறப்படுத்தி விற்றுப் பணம் சேர்த்துக்கொள்வதுண்டு; இந்தப் பழக்கமே இந்த வரிகளில் சுட்டப்படுகிறது. சண்ணும் - நிறையச் சாப்பிடும்.

அலர்தலை யுலகில் அறவழி நில்லா
அரசர் மகுடம் அனைத்தையு மொன்றாய்
அடித்து நொறுக்கி அழலிற் காய்ச்சி
மாசெலா மகற்றி வையகம் தொழுதன்
அடியில் இடுஞ்செருப் பாணிகள் ஆக்கவும்,
அவர்,
கொடுங்கோல் எல்லாம் குதிரைப் பாகர்
தாங்குதற் குரிய சவுக்குகள் ஆக்கவும்,
ஈட்டி வாளிவை யாவையும் முறித்துப்
பண்பட நிலமுழு படைகள் ஆக்கவும்,
கொடிகள் கொற்றக் குடைக ளிவற்றைச்
சிறுசிறு துண்டாய்க் கீறிச் சிறுமியர்
பாவைக் கணிபா வாடைகள் ஆக்கவும்,
நாடும் நகரும் நாசம் செய்யும்
பென்னம் பெரிய பீரங் கிகளை
இந்திய நாட்டில் இழுத்துக் கொணர்ந்து
செந்நெல் கோதுமை தீங்கரும் பென்று
பன்னப் படுபல பயிர்களும் ஓங்குநம்
நிலங்களில் என்றும் நீர்வளம் பெருகக்
கங்கை யமுனை காவிரி முதலிய
வற்றிலா நதிகளில் மடைகள் ஆக்கவும்,
கங்கணம் கட்டியெம் காவலர் காவலன்
ஐந்தாம் ஜ்யார்ஜாம் அமரா பரணன்
பூதலம் மீதலம் பாதலம் நடுங்க
ஏம கால தூதரும் இளைக்கக்

---

97. தொழு தன் - தொழுகின்ற தன்னுடைய.

கடும்போர் செய்யுமிக் காலந் தன்னில்
காரண வர்களே! காரண வர்களே!
குடும்பந் தோறும் கொடுங்கோ லரசு
நிலைத்திட முயல்வது நீதிதா னாகுமோ?
அது,
நீணிலத் தினியொரு நிமிஷம் நிற்குமோ?
ஐயோ! இவர்செயும் அநியா யங்களை
அறிபவர் யாரே! அறிபவர் யாரே!
கொடுங்கோ லரசர் குடிகளைப் போல்,இக்
காரண வர்களின் கைக்கீழ் தங்கி
இரவும் பகலும் எவ்வெப் பொழுதும்
மாறாக் கண்ணீர் வடிய விட்டுத்
தீராத் துயரம் தீருநாள் எண்ணி
நைந்து நொந்து நாளைக் கழிப்பவர்
எத்தனை எத்தனை எத்தனை என்பேன்!"
என்றெலாம் சொல்லி இனிய மொழிகளால்
வாழ்த்தி நல்ல வரங்களும் கொடுத்துத்
தெருவில் இறங்கினார்; சிறிது தூரம்
சென்று, பின்னும் சீறிச் சினந்து
வந்தார்; வந்த வரவில், மண்டை
படீரென வாசற் படியில் மோத,
முன்னிலும் கோபம் மூண்டு, "மூடா!
வஞ்சகா! உன்குட வண்டியைக் கலக்கிப்

---

119. இக்காலம்: சென்ற மகாயுத்தம் நடந்த காலமாகிய *1914*-ம் ஆண்டு.

141. குடவண்டி: தொந்தி வயிறு.

போடுகி றேன்பார்..........................
....
....”
படபட வென்று பற்பல மொழிகளைப்
பொரித்துக் கொட்டிப் போனு ரம்மா!
கணவரோ,
வைய வைய வைரக் கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக் கல்லும்
ஆகி யிருந்தனர்.

---

9. கோடேறிக் குடிமுடித்த படலம்

ஐயோ! ஐயோ! அடங்கா வீர
பத்திரப் பிள்ளை, - அப் பாவி பாதகன், என்
குடியைக் கெடுத்த கொடிய சண்டாளன்
அரக்கன் ஏழரை ஆண்டைச் சனியன் -
விரைவில் ஓடி வீட்டில் சென்று,
மனைவியை அழைத்து மண்டையைக் காட்டி,
அண்ணன் அடித்த அடிகளைப் பாரடி! [“உன்
இன்றைக்கு,
உயிர்போ காமல் இருந்ததுன் தாலிப்
பாக்கியம் தானடி, பகவான் செயலடி!
அவன், எண்ணிப் பாரா தேசின ஏச்சில்
கடுகள வேனுமுன் காதில் விழுந்தால்,நீ

---

142 - 4. இவ்விடத்தில் ஏடு சிதிலமாகப் போய் விட்டது.

148. வைய வைய, திட்டத் திட்ட, மிக்க வைராக்கி யம் கொண்டனர்.

நஞ்சைத் தின்பாய், நான்று சாவாய்,
நாக்கைப் பிடுங்கி நடுங்கி இறப்பாய்,
ஆற்றில் குளத்தில் அலறி விழுவாய்,
சங்கிலித் துறைபோய்ச் சாடி யொழிவாய்;
இதற்கோ ரையம் இல்லை இல்லையே.
என்னை,
பறைப்பயல் பள்ளப் பயலினும் கேடாய்
நினைத்துப் பேசின நீசன் இவனை
வாயில் மண்ணை வாரி யடித்து
வீட்டை விட்டு வெளியி லிறக்கின
அன்றைக் கல்லவோ ஆண்பிள்ளை யாவேன்?''
என்று பற்பல இன்னும் சொல்லிக்
கோபா வேசம் கொண்டவ னுனன்.
கூட இருந்த குசும்பன் சாமி
போதா தென்று புகையும் போட்டான்.
வீணுய்க் கதையை விரிப்ப தேனம்மா?
அப்பனும் மகனும் அண்டை வீட்டுக்
குசும்பன் சாமியும் குண்டுணிச் சுப்புவும்
கோட்டு மாடன் பிள்ளையும் கூடி

---

16. சங்கிலித் துறை - கன்னியாகுமரிக் கடலில் தீர்த்தமாடும் இடத்தையடுத்துள்ள ஆழமான ஓரிடம். தீர்த்தமாடுவோர் அலைகளால் அடித்துச் செல்லப்படாதவாறு இரும்புச் சங்கிலியால் அங்கே வேலி போட்டிருக்கும்.

26. குசும்பன் சாமி : ஒருவரைப்பற்றி மற்றொருவரிடம் சதா கோள் சொல்லிப் பகைமூட்டுவதையே தொழிலாகக்கொண்ட சாமி என்னுமொருவன்.

இரவு முழுதும் இருந்து, யோசனை
பலவும் செய்து, பலபல வென்று
விடியு முன்னம் விரைவா யெழுந்து,
பானையில் கிடந்த பழவோ லைகளும்
முறிப்பெட்டி யிலுள்ள முன்னோ லைகளும்
கைச்சீட் டுகளும் கடச்சீட் டுகளும்
கைச்சாத் துகளும் பொய்ச்சாத் துகளும்
பத்திரச் சுருளும் பகர்ப்புச் சுருளும்,
எல்லாம் சுமடாய்க் கட்டி, இரண்டொரு
முண்டைப் போட்டு மூடிப் பொதிந்து
தோளில் வைத்துச் சுமந்து கொண்டு,
நாகையம் பதியை நாடிச் சென்றனர்.
அங்கு,
நீதிக் கெல்லாம் நிலைய மாகியும்
உண்மைக் கெல்லாம் உறைவிட மாகியும்
கருணைக் கெல்லாம் களஞ்சிய மாகியும்
வாழும் நியாய வாதிகள் தங்கும்
வீதியை முற்ற விலகிச் சென்று,வீண்
விவகா ரங்கள் விளைநில மாகியும்
பொய்கள் அடைக்கலம் புகுமிட மாகியும்

---

36. முறிப் பெட்டி - ஓலைப் பிரமாணங்களைக் காப்பாற்றி வைப்பதற்குரிய பெட்டி. முறி - ஓலைப் பிரமாணம்.

37. கடச்சீட்டு - கடன் சீட்டு.

39. பகர்ப்புச் சுருள் - நகல்; ஒன்றைப் பார்த்துப் பெயர்த்தெழுதி வைத்தது.

43. நாகை - நாகர்கோவில்.

குதர்க்கம் குடிகொளும் குகையிட மாகியும்
திருஅவ தாரம் செய்தன் றிருந்தஓர்
அண்டப் புரட்டன் வக்கீல்ஆ பீஸில்
ஆனைப் பொய்யன் குமஸ்தனை யறிந்து,
காரியம் சொன்னார், கதைகளும் சொன்னார் ;
'காரணவ னைப்பல காரணத் தாலே
மாற்றும் படிக்கு வந்தோம்' என்றார் ;
புற்றை விட்டுப் புறம்போ காமல்
பட்டினி கிடக்கும் பாம்பின் வாயில்
தேரை குதித்துச் சென்று விழுவது,
நாகம்முன் செய்த நல்வினைப் பயனோ ?
தேரைமுன் செய்த தீவினைப் பயனோ ?
ஈதெனச் சொல்ல எவரால் ஆகும் !
செல்லும் செலவு செய்திட, ரூபாய்
நூற்றைம் பதுக்கோர் நோட்டு, வக்கீல்
மைத்துனன் முத்து வாத்தியார் பேருக்கு
எழுதி முடித்தார் ; எடுத்து வந்த
ஆதா ரங்கள் அனைத்தும் கொடுத்தார் ;
இவரிவர் சாக்ஷிகள் என்றும் சொன்னார் ;—
வெள்ளை மடத்துக் கள்ள பிரானெனும்
மூத்த பிள்ளையே முதலாம் சாக்ஷி ;

---

66. நோட்டு - பிராமிசரி நோட்டு என்னும் கடன் பத்திரம்.

71. வெள்ளை மடம் : நாகர் கோவிலை யடுத்த ஓரூர். கள்ளபிரான் - அங்குள்ளார் ஒருவர்.

72. மூத்த பிள்ளை : நாஞ்சில் நாட்டு வேளாளரில் தகுதியுடையவருக்குத் திருவிதாங்கூர் மன்னரால் முன்பு அளிக்கப்பட்டுவந்த ஒரு பட்டம்.

மாத்தால் கணக்கு மகரா சன்மகன்
பிச்சைக் காரன் பின்னொரு சாக்ஷி ;
இருக ணில்லா இருளப் பன்மகன்
முத்தொளி மறவன் மூன்றும் சாக்ஷி ;
ஐயம் பிள்ளை அண்ணாவி புதல்வன்
நல்ல பிள்ளை நாலாம் சாக்ஷி ;
பொய்சொலா மெய்யன் புத்திரன் மாறி
யாடும் பெருமாள் ஐந்தாம் சாக்ஷி.
நம்பர் பதித்த நாலா மாதம்
ஒருநாள் காலை, உறக்கப் பாயில்
எழுந்தென் கணவர் இருக்கும் பொழுது,
கறுப்பன் கட்டையன் கப்படா மீசைக்
காரன் ஒருவன், காலனைப் போல,
கோர்ட்டுச் சம்மனைக் கொண்டு வந்தான்.
நச்சுவா யண்ணன் நாச காலன்
வீர பத்திரன், வெட்டையாய்ப் போவான்,
எண்ணினது போல எல்லாம் ஆச்சுதே !
நினைத்தது போல நேரம் விடிந்ததே !
இந்நாள் இங்கு யான்படும் பாடெலாம்,

---

73. மாத்தால் - நாகர்கோவிலுக்கு ஆறு மைல் வடக்கிலுள்ள ஓரூர். கணக்கு - மூத்தபிள்ளை ஸ்தானம் உடையவர்கள் பெயரோடு 'கணக்கு' என்று இணைத்தெழுதுவது வழக்கம்.

77. அண்ணாவி - உபாத்தியாயர்.

84 - 5. கறுப்பனும் கட்டையனும் மீசைக்காரனுமான ஒருவன்.

87 - 8. நச்சுவாயண்ணனும் நாசகாலனும் வெட்டையாய்ப்போவானுமான வீரபத்திரன்.

நாளை
அவரும் மக்களும் அனுபவிப் பார்கள்,
யாதும் தடையிலை, யாதும் தடையிலை ;
பத்தினி என்சொல் பழுதா காது,
உத்தமி என்சொல் ஊரையும் சுடுமே ;
கேட்கும், கேட்கும், தெய்வம் கேட்கும் ! -
சேவகன் வந்த காரியம் தெரிந்தோ,
இயல்பாய்த் தானோ, யாதோ அறியேன் -
மேல வீட்டிருந்து வெள்ளையம் பிள்ளை
அண்ணனும் அப்பொழு தங்கு வந்து,
‘யார் இவன்’ என்றனர் ; ‘இன்னார்’ என்றோம்;
சம்மனைப் படித்துச் சங்கதி யறிந்தென்
புருஷனை நோக்கி, “போன தெல்லாம்
போகட்டு மையா ! பொய்கைப் பற்றில்
ஆறு தடியும், அணஞ்சி விளையும்,
துலுக்கன் தோப்பும், தொட்டிச்சி மேடும்,
மேலத் தெருவில் மேடை வீடும்,
ஈரணை ஏரும், ஏழு பசுவும்,
யாதொரு கடனும் இல்லா மல்,நீர்
இருக்கு மட்டும் யாப்பிய மாகவும்,
அப்பால் அவற்றைஉம் அருமை மக்கள்

---

105 - 7. பொய்கைப்பற்று, அணஞ்சிவிளை, துலுக்கன் தோப்பு, தொட்டிச்சிமேடு : நிலப்பெயர்கள்.

111. யாப்பியம் - நாஞ்சில் நாட்டு மருமக்கத்தாய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், குடும்பத்திலிருந்து விலகும்போது அக்குடும்பத்தில் அவருக்குள்ள பாத்தியதைக்கு ஈடாகக் கொடுத்து ஒதுக்கும் சொத்து.

ஒன்று விடாதுகந் துடைமை யாகவும்
எடுத்துக் கொள்ளஓர் ஓலை யெழுதி
உம்மை மக்களோ டொதுக்கி விடுவரேல்,
வாங்கிக் கொண்டு வழக்கில் லாமல்
சும்மா இருப்பது மெத்தச் சுகமாம்.
இப்படி ராஜி எழுதிக் கொடுக்க
உமக்குச் சம்மத முண்டோ? சொல்லும்.
வியாச்சிய மென்னும் சுழியில் விழுந்து
கறகற வென்று கறங்கி மயங்கி,
கைப்பொரு ளிழந்து கடனும் வாங்கி
வீணாய்த் துன்பம் விளைத்திட வேண்டாம்,
அல்லலை விருந்துக் கழைத்திட வேண்டாம்,
தொல்லைக்குத் தூது சொல்லிவிட வேண்டாம்!
ஐயோ! கோர்ட்டுக் காரே போவார்!
ஐயோ! கோர்ட்டுக் காரே போவார்!
பண்டொரு நீதி பதி, தம் கோர்ட்டு
வாயிலின் வந்த மனித ரெல்லாம்,
உடைந்த ஓட்டை ஒருகையி லேந்தி
வழக்கி ழந்தவன் வாடி நிற்பதையும்,

---

128 - 137. முன்பு, அறிவுள்ள நீதிபதி யொருவர் நியாயஸ்தலத்து வாயிலின் இருபக்கங்களிலும் யாவரும் பார்க்கும்படி இரண்டு சித்திரங்கள் எழுதிவைக்கச் செய்திருந்தார். முதலாவது சித்திரம், எலும்புந் தோலுமாகி, தரித்திர நிலையடைந்த ஒரு மனிதன் உடைந்த ஓடொன்றைக் கையிலேந்தி நிற்பது; இது, கோர்ட்டு வழக்கில் ஈடுபட்டவர் இரு சாராருள், வழக்குத்தோற்றவர் தம் கைப்பொருள் இழந்து, இரப்பதற்கு நல்ல சட்டிகூடக்

தாட்பொதி யொன்று தலையிற் சுமந்து
வென்றவ னுடலம் மெலிந்து நிற்பதையும்
கண்களால் கண்டு கண்டு, நாளும்
நல்லறி வெய்திட நடைநடை தோறும்
இருபுறச் சுவரிலும் இரண்டுரு வங்கள்
செய்து வைத்த கதைதெரி யாதோ?
இழந்தவர் வென்றவர் இருவர் மீதியும்
இவைக ளன்றிவே றெவையும் உண்டோ?'
புத்தியில் லாஇரு பூனைகள் பண்டு
வானரத் திடம்போய் வழக்குச் சொல்லி
உள்ளதும் இழந்துவே றுணவும் இன்றி
வெறுங்கை யாகி வெட்கி மீண்டதாய்
நாம்,

கிடைக்காமல், உடைந்த ஓட்டைக் கையில் வைத்திருக்கும் காட்சி. இரண்டாவது சித்திரம், மற்றொரு மனிதன் காகிதப் பொதியொன்றைத் தலையில் சுமந்து நிற்பது. இது, வழக்கில் வென்றவர், தமது பொருளையெல்லாம் வழக்காடுவதிலே செலவு செய்து வென்ற பிறகு, பணமிழந்து, வழக்கு சம்பந்தமான தஸ்தவேஜுகள் மாத்திரமே மீதியாகி, அவற்றைத் தலையிலே சுமந்துகொண்டு திரியும் காட்சி. இவ்வுருவங்களைப் பார்த்தபிறகேனும், வழக்கில் வென்றவர் நிலைமையும் தோற்றவர் நிலைமையும் முடிவில் தரித்திர நிலைமையே என்பதை அறிந்து, கோர்ட்டுக்குப் போய் வீணில் பொருளைப் பாழாக்காதிருக்க வேண்டும் என்ற உண்மையை மக்கள் உணர்ந்து ஒழுகும் பொருட்டு ஒரு நீதிபதி அவ்வுருவங்களை எழுதி வைக்கச் செய்தார் என்றொரு கதை உண்டு.

132. தாள்பொதி - காகிதக் கட்டு.

பள்ளியில் பாடம் படிக்க வில்லையோ ?
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்.
அரையடிச் சுவருக் காகஜக் கோர்ட்டு
வரையிலும் ஏறி வழக்குப் பேசி,
அந்திர புரத்து மந்திரம் பிள்ளை
அடியொடு கெட்ட தறிய மாட்டீரோ ?
வடக்கு வீட்டு மச்சம் பியும்அவர்
மருமக் களுமாய் வருஷ மெட்டாக
மாறி மாறி வாதம் செய்து
யாவையும் போக்கி, இரவா வண்ணம்
இரந்து திரிவதை இவ்வூ ரில்நாம்
கண்ணு லின்று காணவில்லையோ ?
வேலுப் பிள்ளை வீட்டு நம்பரில்,
ஐந்தாம் சாக்ஷி ஆண்டி அவனை
அழஅழப் படுத்தி, அறுபது ரூபாய்
வாங்கிக் கொண்டு,மேல் வாயிதாத் தோறும்,
'வீட்டுக் காரியம் வெட்ட வெளிச்சம்,
முட்டப் பஞ்சம், மூதேவி வாசம் ;
பானையி லேபத் தரிசி இல்லை,
உப்போ புளியோ ஒன்று மில்லை,
உச்சிக் கெண்ணெய் ஒருதுளி யில்லை,

---

149. அந்திரபுரம் - நாஞ்சில் நாட்டிலுள்ள ஓரூர்.

151. மச்சம்பி - அத்தான் ; அக்காள் கணவன்.

157. வேலுப்பிள்ளை வீட்டு நம்பர் - வேலுப்பிள்ளை என்பவர் குடும்பத்திலேற்பட்ட வழக்கு.

158. ஆண்டி : ஒருவர் பெயர்.

159. அழ அழப்படுத்தி - மிகவும் கஷ்டப்படுத்தி.

தொட்டில் கட்டத் துணியு மில்லை,
காந்தி மதிக்குக் கண்டாங்கி யில்லை,
எனக்கும் வேட்டி யாதொன்று மில்லை ;
இப்படி யிருக்க, எப்படி உமக்காய்
கோர்ட்டில் மொழிநான் கொடுக்க வருவேன்?'
என்று சொல்லி, எத்தனை பணத்தைத்
தட்டிப் பறித்தான் சண்டாள னப்பா !
முளைய நல்லூர் முதல்பிடிப் பிள்ளை
அண்ணனும் இப்படி யாகக் காரணம்,
விளாத்திக் கோண விவகார மல்லவோ ?
எத்தனை வகையை இழந்தா ரப்பா !
மூக்கரை யன்விளை மூலையில் நிற்கும்
பலாமர மொன்றுமே பத்துக் குடும்பம்
தாங்கி, மீதியும் தருமே யப்பா !
அந்த
மதினி கழுத்தில் மங்கிலியம் தவிர
எல்லா நகையும் இறக்கி விட்டாளே !
ஒவ்வொரு காதிலும் உழக்குழக் குப்பொன்
இட்டிருந் தாளே ! எல்லாம் போச்சே !
ஆளும் வேற்றுள் ஆகி விட்டதே !

---

167. காந்திமதி - ஆண்டியின் மனைவி.

173. முளையநல்லூர் - நாஞ்சில் நாட்டிலுள்ள ஓரூர் ; இப்போது அழிந்துபோய் விட்டது.

175. விளாத்திக் கோணம் : ஒரு கோணத்தின் பெயர் ; கோணம் - ஒரு நிலம்.

176. வகை - வஸ்து, சொத்து.

177. மூக்கரையன் விளை - ஒரு புன்செய் நிலம்.

கருந்தாளி உலக்கை கையி லெடுத்தவள்
கோவில் நெல்லைக் குத்துவா ளென்று
யாவ ராயினும் எண்ணின துண்டா ?
என்ன செய்வாள், ஏழை ! பாவம் !
நட்டியும் குட்டியும் நாழியும் உழக்குமாய்
ஏழு மக்களை எப்படி வளர்ப்பாள் ?
கோர்ட்டு வழக்குக் கொஞ்சமா செய்யும் ?
இதுவும் செய்யும்மே லெதுவும் செய்யும் ;
கட்டுக் கட்டாய்க் காய்கறி யனுப்பவும்,
வல்லம் வல்லமாய் மாம்பழ மனுப்பவும்,
பானை பானையாய்ப் பால்நெய் யனுப்பவும்,
மந்தை மந்தையாய் மாடுக ளனுப்பவும்,
வண்டி வண்டியாய் வைக்கோ லனுப்பவும்,
யாரால் முடியும் ! யாரால் முடியும் !
எந்தக் குடும்பம் ஈடு நிற்கும் ?
ஐயா,
வழக்கு மிழந்து வகையு மிழந்து,
யாவும் இழந்துளம் ஏங்கி யிருக்கும்
கைலாசம் பிள்ளை கரையாளன் வீட்டை

---

186. கருந்தாளி உலக்கை : கருந்தாளி மரத்தால் செய்தது.

190. அதிக காலம் இடையீடில்லாதபடி அடுத்தடுத்துப் பல குழந்தைகள் பிறந்திருந்தால், அவற்றை 'நட்டியும் குட்டியும் நாழியும் உழக்கும்' என்று நாஞ்சில் நாட்டில் சொல்வதுண்டு.

195. வல்லம் - தென்னங் கீற்றினால் செய்யும் ஒரு வகைக் கூடை.

204. கரையாளன் - ஒரு ஸ்தானப் பெயர்.

வக்கீல் பீஸு பாக்கி வகையில்
எழுபது ரூபாய்க் கேலம் கூறிக்
கொட்டிக் கொட்டிக் கொண்டு போனதும்
நேற்றுத் தானே, நினைவு மில்லையோ?
இந்த மாசம் எட்டாந் தேதி
மேலத் தெருவில்..............வீட்டில்
ஜப்திக்கு வந்த தலைவன், ஐயோ!
எள்ளள வேனும் இரக்கமில் லாமல்,
அந்தக்
கிழவனைத் தூக்கிக் கீழே போட்டுக்
கட்டிலை வெளியில் கடத்தச் சொன்னதும்,
தண்ணீர் குடிக்கும் சமயம் பார்த்துப்
பிள்ளைக் கெண்டியைப் பிடுங்கச் செய்ததும்,
சருவம் பானை சட்டுவம் அகப்பை
குட்டுவம் செம்பு குழியல் முதலாய்
உப்போடு சிரட்டை ஒன்றுமில் லாமல்

---

210. ஏட்டில் பொடிவு.

219. குட்டுவம் - தண்ணீர் விட்டு வைத்திருப்பதற்காக உபயோகிக்கும் பரந்த பெரிய பாத்திரம்; கொப்பரை என்று சொல்வதுமுண்டு. குழியல் - சாப்பிட உபயோகிக்கும் பாத்திரம்.

220. உப்போடு - உப்புப் போட்டு வைக்க உபயோகிக்கும் அற்பப் பாத்திரம்; மரத்தாலானது. சிரட்டை - கொட்டங்கச்சி. மிக்க விலையுயர்ந்த பாத்திரம் முதல் விலையே இல்லாத அற்பச் சிரட்டை வரையிலுள்ள எல்லாப் பாத்திரங்களையும் என்பதைக் காட்டுகிறது.

எல்லாம் வண்டியில் ஏற்றிச் சென்றதும், நாம்
கண்ணுற் கண்டதோ? கனவோ ஐயா?
நாமெலாம் சேர்ந்து நடத்தின கட்சிக்
கொடையில், மாடன் கொண்டாடி நம்பி
சந்தனம் பூசிச் சல்லடம் கட்டிப்
பூவை யெடுக்கப் போன பொழுது,
வாறண்டுக் காரன் வந்ததை யறிந்து,
குட்டிச் சுவரெலாம் குதித்துச் சாடி
வாய்க்கால் வழியாய் வடக்கே யோடி,
ஒருவரும் காணா தோச்சன் குளத்து
மடைக்குட் சென்று மறைந்து கொண்டதும்,
'சாமி சுடலைச் சாம்பலி லாடி
விளையா டுதற்கு வேகமாய்ப் போகிறார்'
என்று நினைத்தங் கிருந்தவ ரெல்லாம்
எழுந்து போனதும், எங்கும் தேடிக்
காணா தானதும், கடைசியில் உண்மை
தெரிய வந்ததும், செலவொடு செலவென்று
ஏழு ரூபாய் எண்ணிக் கொடுத்து
வாறண்டை அன்று மடக்கி விட்டதும்,

---

225. மாடன் கொண்டாடி நம்பி - மாடன் என்ற தெய்வத்தை ஆராதனை செய்து, ஆவேசம் வந்து ஆடுபவன்; நம்பி என்ற பெயருடையவன்.

231. ஓச்சன் - உவச்சன்; உவச்சன் குளம் என்பது ஒரு குளம்.

240. மடக்கிவிட்டது - ஆளைப் பிடிக்காமல் திரும்பிப் போகச் செய்தது.

நடந்த காரியமோ? நாடகந் தானோ?
வியாச்சியம், வேண்டாம் வியாச்சியம் வேண்
தேடின முதலைத் தெருவில் வாரி [டாம் ;
இறைக்க வேண்டாம், இறைக்க வேண்டாம்.
அல்லும் பகலும் அலுப்பில் லாமல்
ஆஆ வென்றலை ஆமீன் வாயில்
அகப்பட் டார்வெளி யாவது முண்டோ?
சுரு மீனையுமே தூக்கி விழுங்கும்
பொல்லா மீனிது போலொரு மீனைக்
கடலினும் கூடக் கண்டவ ரில்லை.
"எவரினும் பெரியவன் யானே ஆவேன் ;
எப்பெரு வேலையும் எளிதில் முடிப்பேன் ;
இம்மிரு கத்தையும் எடுத்தொரு நொடியில்
வானெலொம் சுற்றி வருவதற் குள்ள
ஆற்றலு முடையேன் ; ஆனால், அத்திறம்
அனைத்தையும் வெளிப்படை யாகக் காட்ட
அற்பமும் ஆசை எனக்கிலை ; அன்றியும்,
உருவமோ நீளமோ உயரமோ கண்டே
மூட உலகம் மோசம் போகும் ;
ஆதலா லொருவரும் அறியா திருந்திந்
நாலுகை யானை நடத்து கின்றேன்"

246. ஆ ஆ என்று அலைகிற. ஆமீன் - 'அமீனா.'

261. நாலுகை - வக்கீல் கோர்ட்டில் அணியும் கறுப்புக் 'கவுன்' ; நாலு கையுடைய சட்டை என்று ஏளனமாகச் சொல்வது வழக்கம். நாலுகை யானை என்பது வக்கீல். வக்கீலாகிய யானையைத் தான் நடத்திச் செல்வதாகக் குமஸ்தா கூறிக்கொள்கிறான்.

என்றதன் முதுகி லிருக்கும் ஈயொன்று
எண்ணுது டம்பம் எடுத்துரைப் பதுபோல்,
" இரவும் பகலும் இடைவி டாமல்
பற்பல வருஷம் படித்து, பீ.எல்.,
எம்.எல். பட்டம் எல்லாம் பெற்று
வந்திடும் பெரிய வக்கீல் மாரும்,
யாங்க ளில்லையேல் என்செய் வார்?" எனப்
புத்தி யிலாது புலம்பித் திரியும்
குமஸ்தா வெனும்ஈக் கூட்டம் உம்மைக்
குத்தி ரத்தம் குடித்திடு மையா!
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்!
குதித்துக் குடியைக் கெடுத்திட வேண்டாம்!
" இன்ன படியென் றெழுதி விட்ட
சிவனே வரினும் சிறிதும் அஞ்சேன்,
விதியினுக் காயிரம் விக்கினம் சொல்வேன்;
வருகிற வழியாய் வந்தெனைக் கண்டால்,
சிக்கெலாம் போக்கித் தீர்ப்பையும் நடத்தித்
தருவேன்" என்று சற்றும்வாய் கூசாது
உரைக்கு மந்த உத்தம புருஷன்
நிறையா வயிற்றை நிறைத்திடக் கடலைத்
திறந்து விட்டாலும் திகையுமோ ஐயா?
வீட்டை விட்டு வெளிவரா உமக்குக்
கோர்ட்டுக் காரியம் கொஞ்சமும் தெரியுமோ?
பாரப் படிகளும் பட்டிகைப் படிகளும்
சாக்ஷிப் படிகளும் சமன்ஸுப் படிகளும்
கணக்கி லடங்காக் கமிஷன் படிகளும்

ஐப்திப் படிகளும் லேலப் படிகளும்
வாறண்டுப் படிகளும் வாசற் படிகளும்
ஏணிப் படிகளும், இப்படி அப்படி
எல்லாப் படிகளும் ஏறி இறங்கி,
வாணுள் கொடுத்து வாண தீர்த்தம்
ஆட ஆளும் நீரோ ஐயா?
கோர்ட்டுப் பீஸு குமஸ்தாப் பீஸு
கூடிக் காப்பி குடிக்கப் பீஸு
வெற்றிலை வாங்கிட வேருெரு பீஸு
வக்கீல் பீஸு மகமைப் பீஸு
வக்கா லத்து வகைக்கொரு பீஸு
எழுதப் பீஸு சொல்லப் பீஸு
எழுதிய தாளை எடுக்கப் பீஸு
நிற்கப் பீஸு இருக்கப் பீஸு
நீட்டின கையை மடக்கப் பீஸு
பாரப் பீஸு கீரப் பீஸு
பார இழவு பயிற்றுப் பீஸு
கண்டு பீஸு காணுப் பீஸு

---

288. லேலம் - ஏலம்.

292. 'வாணுளைக் கொடுத்து வாண தீர்த்தம் ஆடுவது' என்பது ஒரு நாஞ்சில் நாட்டுப் பழமொழி; வாண தீர்த்தம் என்பது பாபநாசம் அருவியிலுள்ள ஒரு தீர்த்தக் கட்டம். இதில் தீர்த்தமாடி வருவது மிகவும் சிரமமான காரியம். அதிக கஷ்டப்பட்டு ஒரு காரியத்தை நிறைவேற்றுவது என்பது இப்பழமொழியின் கருத்து.

303. கோர்ட்டு 'பாரங்'களைப் பூர்த்திசெய்தெழுதுவதற்குரிய கூலி.

முண்டு துணிக்கொரு முழுமல் பீஸு
அந்தப் பீஸு இந்தப் பீஸு
ஆனைப் பீஸு பூனைப் பீஸு
ஏறப் பீஸு இறங்கப் பீஸு -
இப்படி யாக என்றென் றைக்கும்
பீஸு பீஸாய்ப் பிச்சுப் பிடுங்கும்
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்,
குதித்துக் குடியை முடித்திட வேண்டாம்.
மூவுல கேத்து மூவரும் நாணப்
பொதுரிக் கார்ட்டுப் புரையில் தனியாய்
ஓர்மூலையில் இருந்து முத்தொழி லியற்றும்
தெய்வத் தின்இரு சேவடி நிதமும்
கண்டு தொழுது காணிக்கை யிட்டு
வணங்கா தவர்க்கு வருந்தோ ஷங்கள்
இத்தனை யென்றிட யாரால் முடியும்?
இதற்கெலாம் முதலுக் கெங்கே போவீர்?
வஞ்சியை முறித்து வாரப் போவீரா?

---

311. பீஸு பீஸாய்: பீஸ் (fees) என்னும் கட்டணம் கட்டணமாக என்றும், துண்டு (piece) துண்டாக என்றும் பொருள்படும். பிச்சு - பிய்த்து.

314. மூவர் - பிரம, விஷ்ணு, ருத்திரர்.

316-7. முத்தொழில்: இல்லாததை உண்டு பண்ணுதல், உண்டு பண்ணியதைப் பரிபாலித்தல், உள்ளதை அழித்தல் என்பன. தெய்வம் - இங்கே குமஸ்தா.

322. வஞ்சி - கோவிலில் காணிக்கை செலுத்தும் உண்டிப் பெட்டி. வஞ்சியை முறித்தல்: திருட்டுத் தொழிலில் வல்லவனை, 'வஞ்சியை முறித்த கள்வன்' என்று சொல்வது வழக்கம்.

வாதி பாகத்து வக்கீல் உம்மைக்
கூட்டில் ஏற்றிக் குறுக்கு மறுக்காய்க்
கிருஸ் கேட்டுக் கிடுக்கி விடுவான்.
சந்தேக மில்லை, சந்தேக மில்லை ;
நீர்
அண்டப் புரட்டனை அறிய மாட்டீர் ;
புத்தியில் பெரியவர், பொல்லாத வம்பர் ;
ஆளும் தரமும் அறிந்திட வல்லவர்,
சீரும் திறமும் தெரிந்திடச் சமர்த்தர் ;
ஆடிக் கறப்பதை ஆடிக் கறப்பார் ;
பாடிக் கறப்பதைப் பாடிக் கறப்பார் :
தயவாய்ச் சொல்வார், தக்கில் கேட்பார்,
இரைந்து சொல்வார், எச்சில் எழும்புவார் ;
பார்பார் என்பார், பல்லைக் கடிப்பார் ;
போருக்கு நிற்பார், புலிபோல் பாய்வார் ;
அங்கும் இங்கும் அசையாதே என்பார்,
குனியாதே என்பார், கோட்டைப்பார் என்பார்,
கோட்டையும் கூடக் கூட்டாக் காமல்
கேள்விகள் பலவும் கேட்க வருவார்.
'ஓடும் குதிரைக் குச்சியில் கொம்புகள்
ஒன்று இரண்டா? உடன்சொலும்' என்பார் ;
நாம்,
குதிரைக் கேது கொம்புகள் என்றால்,
அது,

---

325. கிருஸ் - குறுக்கு விசாரணை.
334. தக்கில் - தாழ்ந்த குரலில்.
339. கோட்டை - கோர்ட்டை.

கோர்ட்ட லட்சியக் குற்றம் என்பார் !
‘கேள்வியை நன்றாய்க் கேட்டுச் சொல்லும் ;
இரண்டா ? ஒன்றா ? என்பதென் கேள்வி ;
உண்டா இல்லையா என்றுநான் உம்மிடம்
கேட்டே னாய் ? காதுகேட் காதோ ?’
என்றெலாம் சொல்லி ஏமாற்றி விடுவார்.
குண்டில் விழுந்த குள்ள நரியைப்
படுத்தும் பாடெலாம் உம்மைப் படுத்துவார்.
இவர்,
ஈரங் கிகளை எடுத்துச் சொன்னால்
பீரங் கிகளும் பின்னிட் டோடும் ;
பொல்லா தவரவர், பொல்லா தவரவர்.
இந்த வக்கீலுக் கேழரை நாட்டனும்
இணையா வாரோ ? இணையா வாரோ ?
அறிந்து பிழையும், அறிந்து பிழையும்.
சொந்த வீட்டில் துரும்பையும் தூக்கி
எறியச் சற்றும் இயலா தென்பவர்,
வக்கீல் வீட்டில் வரிக்கல் பிடுங்கப்
போவது மெத்தனை புத்திகே டையா !’
தங்கை மக்கள் தரித்திர மடைந்து

---

353. குண்டில் - பள்ளத்தில்.

359. ஏழரை நாட்டன்: ஏர்ட்லி நார்ட்டன் (Eardley Norton) என்ற பிரசித்தி பெற்ற ஆங்கிலேய வக்கீல்; பாமர மக்கள் இப்பெயரை உச்சரிக்கும்போது, ஏழரை நாட்டன் என்று மருவி, ஏழரை நாட்டுச்சனியன் என்றும் பொருள்படும்.

364. வரிக்கல் - நீளமாக அடித்துத் திருத்திய கல்.

வயிற்றுக் கின்றி வாடி யலைய,
வருக்கை மாம்பழம் வாழைப் பழமும்
பெட்டிப் பாலும் பிஸ்கூத் துகளும்
ஊரார் மக்கள் உண்டு களித்திட
வாங்கிச் செல்வது மதியுளார் செயலோ ?
மேடும் காடும் வெட்டித் திருத்திப்
பாறையு முடைத்துப் படுநில மாக்கிப்
பருவ மறிந்து பண்பட உழுது
மண்ணல முணர்ந்து வளமிகப் பெய்து,
வாசிறை மீண்டான் வளரச் செய்து
சம்பாப் பயிரைத் தழைக்கச் செய்து,
காலா காலத்தில் களைக ளெடுத்து
வேலியைக் கட்டி விலங்கினம் விலக்கிப்
பறைகளைக் கொட்டிப் பறவையை ஓட்டி,
நீரும் பாய்ச்சி, நிதமும் இராப்பகல்
உறக்க மின்றி உழைப்பத னாலே
விளையச் செய்த மேனிநெல் எல்லாம்,
வக்கீல் வீட்டு வாயிலிற் கொண்டுபோய்
விரித்துக் காய்ச்சி வீசித் தூற்றி
அளந்து வாரி அறைக்குட் போட்டு,
வெறுங்கை யோடு வீடுபோய்ச் சேரும்
நம்மவர் போலிந் நானிலத் தெங்கும்
ஒருவ ரேனும் உண்டோ ஐயா ?
மூச்சை யடக்கி முக்குளி போட்டுக்
கீழுலகம் போய்க் கிடைத்த சிப்பியை
வாரி யெடுத்து மேலே வந்திடும்

---

376. வாசிறை மீண்டான் : ஒருவகை நெல்.

முழுக்கா ளியினிடம் முத்தொன் றேனும்
இருப்பது முண்டோ ? எண்ணிப் பாரும் !
படிப்பிலார் தேடும் பற்பல பொருளும்
படித்தவர் வீட்டையே பார்த்துச் செல்லும் ;
மூடர் முதலெலாம் வக்கீல் முதலாம்.
ஐய மிதற்கிலை, ஐய மிதற்கிலை,
ஐயா ! ராஜி ஆவதே உத்தமம் !
ஐயா ! ராஜி ஆவதே உத்தமம் !!
மருமக் கள்வழி வழங்குமிந் நாட்டில்
வீடுவீ டாயொரு கோடிருந் தாலும்
வழக்குகட் கோய்வு வருமோ ஐயா ?"
என்றிவை யெல்லாம் எடுத்துச் சொல்லி
இறங்கிப் போனார். இக்கதை யெல்லாம்,
நாலாம் மனைவி நாடகக் காரியின்
மாமன் மகனொரு வக்கீல் குமஸ்தன்
அறிந்து வந்தான். "அண்ணே ! அந்த
வெள்ளையம் பிள்ளைக்கு வேலை யில்லை ;
காடு கூப்பிடுது, காலம் வரவில்லை ;
வீடு போக்கிடுது, வேளை வரவில்லை ;
கூனக் கிழவன் கோர்ட்டு வழக்கில்
என்ன அறிவான் ? இவன்பேச் சையுமொரு
காரிய மாகக் கருதிட லாமோ ?

---

393. முழுக்காளி - முத்துக் குளிப்பவன்.

397. மூடர்களால் வக்கீல்கள் செல்வராகிறார்கள் என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. (Fools make the lawyers rich.)

402. கோடு - கோர்ட்டு.

செல்வமும் கல்வியும் செழித்த நாட்டில்,
வியாபா ரங்கள் மிகுந்த நாட்டில்,
உழைப்புகள் பற்பல ஓங்கிய நாட்டில்,
வழக்குகள் நிதமும் வளர்ந்து வருவது
சகஜம் என்று ஸ்தாபித் திடநான்
'அத்தா ரிட்டிகள்' ஆயிரம் காட்டுவேன்.
அண்டப் புரட்டன் வக்கீ லென்ன
ஆளைத் தூக்கி விழுங்கிடு வாரோ ?
இவர்வீச் செல்லாம் யாரிடம் செல்லும் ?
ஏழை, பாவம், யாவ ரேனும்
வந்தால், கொஞ்சம் வாலை முறுக்குவார் ;
அன்றி,
பதிவு சாக்ஷிப் பலவேசம் பிள்ளை
கூட்டா ளிகளைக் கூட்டிற் கண்டால்,
வாயைத் திறவார், மௌனம் கொள்வார் ;
பேடியைக் கண்ட பீஷ்மரு மாவார் ;

420. அத்தாரிட்டி - அத்தாட்சி, ஆதாரம்.

427. பதிவு சாக்ஷி : லஞ்சம் வாங்கிக்கொண்டு, முன் பின் தெரியாத எந்தப் பத்திரத்திலும் சாக்ஷிக் கையெழுத்துப் போடவும் சாக்ஷி சொல்லவும் தயாராயிருப்பவன்.

பலவேசம் பிள்ளை : இப்பெயரைப் 'பல வேஷம் பிள்ளை' எனக் கொள்ளவேண்டும் ; இவர், லஞ்சம் பெற்றுக்கொண்டு, யார் யாருக்கு எந்த எந்த விதமாகச் சாட்சியம் சொல்லவேண்டுமோ அந்தந்த விதமாகக் கோர்ட்டில் சொல்லத் துணிந்திருப்பவர் என்பது கருத்து.

430. பேடியைக் கண்ட பீஷ்மர் : உத்தம வீரரான பீஷ்மர் பேடிமீது அம்பு தொடுக்கமாட்டார். அவரைப் போரில் ஒருவராலும் வெல்லமுடியாதிருந்த நிலையில், ஒரு பேடியை முன் நிறுத்தி அருச்சுனன் அவரை வென்ற்ன் என்பது பாரத சரித்திரம்.

அண்டமும் கோழி அண்டமாய் விடும்;
உருட்டும் புரட்டும் ஒழிந்து போய்விடும்;
அண்ணன் எதற்கும் அஞ்ச வேண்டாம்;
எதுவந் தாலும் யானிருக் கின்றேன்;
என்னை,
அண்ணன் நன்றாய் அறிய மாட்டீர்.
இந்து லாவில் எழுத்துக ளித்தனை,
மகம்மத லாவில் வரிக ளித்தனை
என்று சொல்ல எனக்குத் தெரியும்.
தி. பி. கோ. வைத் திருப்பித் திருப்பிப்
பாரா இரவும் பகலும் இல்லை.
சுருக்கி உம்மிடம் சொன்னால் போதுமே!
சட்ட மெனக்குத் தலைகீழாய்த் தெரியும்;
நடைபடி யெல்லாம் நன்றாய்த் தெரியும்;
இரண்டு கையால் எழுதத் தெரியும்;
அரைநிமி ஷத்தில் அநியா யங்கள்
ஐம்பதைக் கோர்ட்டி லாக்கத் தெரியும்.
பட்டிகை எழுதப் பாரம் போடக்

---

440. தி. பி. கோ. - திருவிதாங்கூர் பீனல் கோட் (குற்ற விசாரணைச் சட்டம்).

443. தலைகீழாய்: மிக நன்றாக என்றும், மாறுபாடாக என்றும் இருபொருள் தொனிக்கும்.

444. நடைபடி: கோர்ட்டு நடவடிக்கை முறைகள் என்றும், கோர்ட்டுவாசல் நடை, அதன் படிகள் என்றும் இருபொருள்.

446. அநியாயம்: பிராது என்றும், நியாயக்கேடு என்றும் இருபொருள்.

கெட்டி கெட்டி என்றுபேர் கேட்ட
ஏட்டுக் குமஸ்தன் யானே யாவேன்.
சாடை காட்டிச் சாட்சிக ளுக்குத்
தெரியாக் காரியம் தெரியச் செய்ய
என்னைப் போலிங்கு யாருண் டையா?
கட்சிகள் வந்தென் கையில் தந்த
பணத்தைச் சொந்தப் பணம்போ லெண்ணி
வாங்கிப் பெட்டியில் வைத்துக் கொள்வேன்;
சிறிது மோசஞ் செய்திட மாட்டேன்;
வக்கீல் குமஸ்தன் சத்திய வாசகன்
இன்னு ரென்றிந் நாடெலாம் அறியும்.
ராஜியும் வேண்டாம், கீஜியும் வேண்டாம்;
நானே கேஸை நடத்தி, ஜயமும்
வாங்கித் தருகிறேன்; மலைக்க வேண்டாம்.
என்,
வக்கீல் பேர்க்கொரு வக்கா லத்தை
எழுதிப் போடும்" என்றெலாம் சொல்லி,
இந்திர சாலம் மந்திர சாலம்
மகேந்திர சாலமும் வல்லஇம் மனிதன்

---

450. ஏட்டுக் குமஸ்தன்-தலைமைக் குமஸ்தா (Head Clerk).

457. சிறிது மோசம்: சிறிதுகூட மோசம் செய்ய மாட்டேன் என்றும், சிறிய மோசம் செய்யாமல் பெரிய மோசமே செய்வேன் என்றும் இருபொருள்.

458. சத்திய வாசகன்: சொல் (அதாவது வாசகம்) மட்டுமே சத்தியம், செயல் முற்றிலும் பொய்யும் புரட்டும் என்பது கருத்து.

நாட்பண மாக நாலு ரூபாயும்
வக்கா லத்தும் வாங்கிச் சென்றான்.
'அர்ஜி கொடுத்தேன், அவதி மாற்றினேன்,
பிரதி உத்தரமும் பேஷாய்க் கொடுத்தேன்,
கேஸில் ஜயமும் கிடைக்கும், நிச்சயம்'
என்று வார்த்தைகள் இதமாய்க் கூறி,
இடையிடை ரூபாய் இருபது முப்பது
தட்டிக் கொள்வான் - தலைவிதி ! தலைவிதி !
கொடுத்துவைத் தவர்கள் கொண்டுபோ னார்க
என்விதி யானும் இப்படி யானேன் ! [ள்.
நாகைக் கோர்ட்டில் கேஸு நடந்தது ;
நடந்தது, நடந்தது, நாலரை வருஷம் !
ஐயோ தெய்வமே ! ஐயோ தெய்வமே !
இரவும் பகலும் இன்றிஎன் கணவர்,
பட்ட பாடெலாம் பகர்வதும் எளிதோ ?
திங்கட் கிழமை தெரிசனம் போச்சு,
திண்டாட் டங்கள் தீரா தாச்சு !
வெள்ளிக் கிழமை விரதம் போச்சு,
விவகா ரங்கள் மிகவே யாச்சு ;
குளியும் போச்சு, கும்பிடும் போச்சு,
கோர்ட்டு வாசல் குடியிருப் பாச்சு !
மாதாந் தங்கள் மறந்தே போச்சு,
வக்கீ லாபீஸ் வாழிட மாச்சு !

---

470. அர்ஜி - பிராது மனு.

489. மாதாந்தங்கள் : ஒவ்வொரு மாதக் கடைசியிலும் குறிப்பிட்ட ஒரு தினத்தில் ஏதேனுமோர் ஆலயத்துக்கு சுவாமி தரிசனம் செய்யப்போகும் வழக்கம்.

உயர்ந்த மேடை உறைவிடம் போச்சு,
ஓட்டுத் திண்ணை உறங்கிட மாச்சு !
மெத்தை திண்டு விதானம் போச்சு,
விரிக்கும் பாய்அவர் மேல்முண் டாச்சு !
துப்பட் டாவும் தொங்கலும் போச்சு,
துவர்த்து முண்டும் துணியுமே யாச்சு !
புட்டும் பழமும் காப்பியும் போச்சு,
புளித்த காடியே போதுமென் ருச்சு !
தோசை இட்டலி தோய்ப்பனும் போச்சு,
தொந்தியும் கரைந்து சுருங்குவ தாச்சு !
சுகந்தத் தூளும் சோப்பும் போச்சு,
சும்மா சிரங்கு சொறிவது மாச்சு !
சீலைக் குடையும் செருப்பும் போச்சு,
தினமும் வெயிலில் திரிவது மாச்சு !
அரைவண் டியுமா டனைத்தும் போச்சு,
அஞ்ச லோட்டம் அவர்க்கே யாச்சு !
மட்டிலாக் கவலை மனங்குடி கொண்டது,
அளவிலாத் துன்பம் அடிமை செய்தது !
ஐயோ ! யாங்க ளனைவரும் அந்நாள்
அடைந்த துயரெலாம் யாரே அறிவார் ? க

---

496. துவர்த்து முண்டு - ஈரந் துவட்டுவதற்குரிய துண்டு.

497. புட்டு - பிட்டு.

499. தோய்ப்பன் : ஒருவகைப் பலகாரம்.

506. அஞ்சலோட்டம் - தபால் சுமந்து செல்லும் அஞ்சற்காரன் ஓடும் ஓட்டம்.

வேறு

குலக்குறத்தி வரினுமொரு
கோடங்கி வரினும்
குறிகேட்டுப் பொருள்விரித்துக்
கொண்டிருந்தோம் அம்மா !
துலக்கமுறப் பரல்பரத்திச்
சோசியர்கள் கணித்துச்
சொன்னவைகள் உண்மையென்று
துணிந்திருந்தோம் அம்மா ! உ

பதியிருக்கும் பதியெங்கும்
பதிவாகச் சென்று
பால்வைத்துக் கணக்குகளும்
பார்த்துவந்தோம் அம்மா !
கதிகிடைக்கும் எனக்காளி
கொடைநடக்கும் காலம்
கடாத்தறித்துப் பொங்கலிட்டுக்
காத்திருந்தோம் அம்மா ! ந

உ. அம்மா : விளி ; இவ்வரலாற்றைச் சொல்லிவரும் பெண் மற்ெருரு பெண்ணை அம்மா என விளித்துக் கூறுகிருள். கோடங்கி - குடுகுடுப்பைக்காரன்.

ந. கடாத் தறித்து - கடாவைப் பலியிட்டு.

ந, ரு. நாராயணசாமி பதிகள் அல்லது கோயில்களை நாஞ்சில் நாட்டிலுள்ள பல ஊர்களிலும் காணலாம். அப்பதிகளில் சிறப்பு நடத்துவதற்குப் ‘பால் வைத்தல்’ என்று பெயர். பதி கொண்டாடிச் சன்னதம் கொண்டு அடிமைகளுக்கு வருங்காரியம் கூறுவது ‘கணக்குப் பார்த்தல்’ எனப்படும்.

குறத்திசொன்ன குறியெல்லம்
குறிதவறிப் போச்சே !
கோடங்கி குறியாலும்
குணமில்லா தாச்சே !
நிறுத்துரைக்கும் நிமித்திகரின்
நிமித்தங்கள் இந்நாள்
நினைக்கும்போ துளம்வெந்து
நீருகு தம்மா ! ௪

பதித்தலத்துப் பால்வைத்தும்
பயனடைந்தோ மில்லை !
பலிகொடுத்தும் தேவிஅருள்
பாலித்தா ளில்லை !
விதித்தவிதி தானிருக்க
வேறுவிதி வருமோ !
விம்மியினி அழுவதெலாம்
வீணலவோ அம்மா ! ௫

வேறு

இப்பெரும் கஷ்டம் யாரே படுவர் ?
கணவர்,
அல்லும் பகலும் அலைந்து சடைத்தார்,
எலும்பும் தோலு மாக இளைத்தார்,
இருமல் இழுப்புக் கிருப்பிட மானார்,
எதிலும் விருப்பம் இல்லா தானார்,
வெளியூர்ப் போக்கை விட்டே விட்டார்,
உள்ளூர் மட்டும் உலாவி வந்தார் ;

சிலநாள் பின்னும் செல்லச் செல்ல
தெருவில் மாத்திரம் திரிவா ராயினர் ;
படிப்படி யாயிப் படியவர் பாடு
குறைந்து குறைந்து கொண்டே வந்தது ;
அண்டை வீடாகி, அறைப்புரை யாகி,
படிப்புரை யாகிப் பாயிலு மானர் ;
எழுந்து நடக்க இயலாதானர் ; -
நடந்தவர் கீழே கிடந்தா ரம்மா. சா

---

10. யாத்திரைப் படலம்

மூன்று மாதம் முன்ன தாகவே
மனைவியர் இருவர் மாண்டு போயினர் ;
நாலாம் மனைவி நாடகக் காரியும்
விடுமுறி போட்டு விலகி விட்டனள் ;
ஒருத்தி, பாவம், ஒருகதி யில்லாள்,
நான்கு பிள்ளை நமனுக்குக் கொடுத்தாள்,
பெற்றும் மலடி, பேசா மடந்தை,
எனக்குத் துணையாய் இருந்தா ளம்மா !
எழுந்து நடக்க இயலா தாகிப்
பாயிற் கணவர் படுத்த நாள்தொட்டு

சா. 13-14. அறைப்புரை, படிப்புரை ; வீட்டின் பாகங்கள். படிப்புரையை ஒட்டுத் திண்ணையென்றும் சொல்வதுண்டு.

---

4. விடுமுறி - கணவனும் மனைவியும் பிரிந்து கொள்வதைக் குறிக்கும் பிரமாண பத்திரம்.

5. ஒருத்தி - மற்றொரு மனைவி.

அடைந்த துயரெலாம் அறிபவர் யாரே?
ஒருநாள்,
தீனம் என்ற செய்தி யறிந்து
மருமகன் வந்தான், வாயிலில் நின்ருன் ;
எட்டிப் பார்த்தான், இனிஇவர் என்றும்
எழுந்திருப் பதுவு மிலேயெனத் தேர்ந்தான் ;
அண்டையிற் சென்ருன், அழவும் செய்தான் ;
என்ன வேண்டுவ தென்றும் கேட்டான் !
பக்கத் திருந்த பாவிகள், யாங்கள்
இருவரும், ஏங்கி இரங்கி யழுதோம் ;
கண்ட மக்களும் கதறி யழுதனர் ;
புருஷனும் இதனைப் பொறுக்கமாட் டாமல்,
அருகில் நின்ற மருகனே நோக்கி,
" அப்பா ! வாடா, அண்டையி லிருடா,
நாச காலர் நாலைந்து பேர்கள்
கூடி நம்மைக் கோர்ட்டில் நாடகம்
ஆடும் படியாய் ஆக்கி விட்டனர்.
போகட்டும் போகட்டும், போனது போகட்டும்.
இன்ருே நாளையோ இப்பொழு தோவென்று
எனக்கும் காலம் இறுகி விட்டது.
இதுநாள் வரையில், யானென் மனைவி
மக்களுக் கென்ருெரு வஸ்து வாகிலும்
கொடுத்தது மில்லை. குடியிருப் பதற்கு
வீடும் அவர்க்கு வேறிலை யப்பா !

---

13. தீனம் - நோய் ; உடல்நலமின்மை.
30. இறுகிவிட்டது - முடிவு நெருங்கிவிட்டது.

தங்கத்தை நீயே தாலி கட்டினால்,
கவலை யின்றிக் கட்டையை விடுவேன்.
அவளும் சமைந்தீ ராண்டுக ளாச்சுது ;
கண்ணால் உங்கள் கல்யா ணத்தைக்
காண்பனோ? தெய்வ கடாக்ஷ மெப்படியோ!
அத்தைமா ரிவர்கள் அல்லும் பகலும்
படும்பா டுகள்நீ பார்க்க வில்லையோ?
அப்பா! இவரை ஆதரித் தென்றும்
காப்பாற் றுவதுன் கடமை யல்லவோ?
பயலையும் நீகண் பார்த்துக்கொள், ஐயா!
படிப்பான் கருத்தாய், பணந்தா னில்லை ;
பரீக்ஷை கொடுத்துப் பாஸாய் வரவினும்
ஐந்து வருஷம் ஆகும்.அப் பொழுதுன்
தங்கை வயதும் சரியாய் வந்திடும்.
மேற்கா ரியம்உன் விருப்பம் போலச்
செய்து கொள்,நீ தெரிந்தது தானே?
இந்த
ஊரி லுள்ள ஒருபய லாவது
நல்லவன் என்றுநீ நம்பி விடாதே.
கொஞ்சம் இடம்நீ கொடுத்தா யானால்,
உள்ளதை யெல்லாம் ஒன்றில் லாமல்
கொள்ளை யடித்துக் கொண்டுபோய் விடுவான்.
நச்சு வித்துகள்! நச்சு வித்துகள்!

---

35. தங்கம் - அவருடைய பெண்ணின் பெயர்.
44. பயல் - அவருடைய மகன்.
46. வரவினும் - வர இன்னும்.

நம்பலா காது! நம்பலா காது!
என்னடா, அப்பா! என்னசெய் யட்டும்?
வயித்தியன் ஒழுங்காய் வருகிறு னில்லை,
தக்க மருந்தும் தருகிறு னில்லை;
பணம்பண மென்று பதைத்துச் சாகிறுன்.
எழுந்திருப் பதுவும் இனியிலை; ஆயினும்,
ஆட்டு லேகியம் கூட்டித் தின்றுல்
சுகம்வரு மென்று சொல்லு கிறுர்கள்;
கையிற் பணமிலை, கடன்தரு வாரிலை;
வழக்கில் முதலை வாரி யெறிந்தேன்;
கிழக்கு மேற்காய்க் கிடக்கின் றேனிதோ!
என்ன செய்யலாம், யாரை நோகலாம்?"
என்றிம் மொழிக ளிசைப்பது கேட்டவர்
கூடப் பிறந்துயிர் கொள்ளும் வியாதிபோல்,
அருமை மதினி ஆங்கார வல்லி
காந்தாரி யம்மை கடுகி வந்தாள்.
மகனை நோக்கி, "மடையா, மூடா!
முருக்குத் தடிபோல் வளர்ந்தமுட் டாளே!
ஐயா உன்னிடம் சொல்லி அனுப்பின
செய்திக ளென்ன? நீ செய்வதிங் கென்ன?
நீயும்,
ஆண்பிள்ளை யோடா அவலட் சணமே!

---

67. முதலை - தன்கைப் பொருளை.

71. 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்பது மூதுரை.

76. ஐயா - அவளுடைய கணவன்; கேட்ட பைய னுடைய தந்தை.

அத்தைமார் கூட அழஇருந் தனையோ?
அவர்,
கைவிஷம் கொடுத்துக் கணவனைக் கைவசமாய்
ஆக்க நினைத்த அரக்கிக ளல்லவோ?
வருஷம் ஐந்தாய் வழக்கும் சண்டையும்
மூட்டி விட்ட முண்டைக ளல்லவோ?
நினைத்த காரியம் நிமிஷம் முடிப்பரே!
மாய வல்லிகள் வலையில் நீயும்
விழுந்துவிட் டாயோ? வெட்கம்! வெட்கம்!
போதும் எழுந்திரு! போதும்! போதும்!
அரங்குக் கதவை அடைத்துப் பூட்டிவை;
தட்டுக் கதவையும் சங்கிலி யிட்டுவை;
சாய்ப்புக் கதவிலும் தாழைப் போட்டுவை;
பொதிய மலையும் பொட்டண மாகிப்
புழைக்கடை வழியாய்ப் போய்விடு மப்பா!
ஐயா வரும்வரை அங்கே நீதான்
கருத்தாய் நின்று காத்திட வேண்டும்.
இந்தா பூட்டுகள், இவையும் போதுமோ?
அதிகம் வேண்டுமோ, அறிந்துசொல் அப்பா!"
என்றிப் படியாய் எக்கா ரியங்களும்
சரியாய்ப் பார்த்துச் சட்டம் கட்டி,
அரங்கு நடையி னருகாய் ஓர்மலைப்
பாம்பு போலப் படுத்துக் கொண்டாள்.
நினைக்க நினைக்களன் நெஞ்சு வேகுதே!

90, 92. அரங்கு, சாய்ப்பு - வீட்டின் பாகங்கள்.
91. தட்டு - மேல்மாடி.

ஐயோ சிவசிவ! அரஹர! அரஹர!
போதும், போதுமிச் சன்மம் போதும்,
பட்ட துயரமும் பாடும் போதும்.
கணவர்க் கந்திய காலம், தண்ணீர்
குடிக்கும் பாத்திரம் குடுக்கை யானதும்,
பரந்த சட்டி படிக்க மானதும்,
பாலும் அன்னப் பாலே யானதும், இனி
எடுத்துச் சொல்லுவ தேனோ அம்மா?
மருமக் கள்வழி வந்து பிறந்தவர்க்கு
ஏதும் புதுமை இவற்றி லுண்டோ?
ஈனாப் பேச்சிபோல் எங்களை வெருட்டின
மதினியின் மீதும் வருத்தமொன் றில்லை.
காயம் மணக்குமோ, காஞ்சிரம் இனிக்குமோ?
இயற்கையை மாற்ற யாரால் முடியும்?
இவையெலா மல்ல, என்றென் றைக்குமென்
மனத்தி லிருந்து வாளா யறுப்பது!
நெஞ்சி லிருந்து நெருப்பா யெரிவது!
மற்றக் காரியம் வையக மெல்லாம்
அறியும் படியான் அறைவே னம்மா!—
கணவரின் மரண காலத் தங்கு
வந்திருந் தவரென் மகனை நோக்கி,
"தம்பி! உன் தந்தை தலைமாட் டிருந்து,
திருவா சகத்தில் சிற்சில பதிகம்
படி"யெனச் சொல்லிப் பண்ணை வீட்டில்

---

110. அன்னப்பால் - உலையிலுள்ள கொதி நீர்.

114. ஈனாப்பேச்சி - மகவு பெறாத பேச்சி; ஒரு பிசாசு.

இருந்தொரு புத்தகம் எடுத்துக் கொடுத்தனர்.
பயலும் அதனைத் திறந்து பார்த்தான்.
'ஆரே தமிழை அறிபவர்' என்றான்,
'பள்ளியில் தமிழும் படித்தேனோ' என்றான் ;
'பரீக்ஷையில் தமிழொரு பாடமோ' என்றான் ;
'என்னால் படிக்க இயலா' தென்னச்
சுவரிற் சாய்ந்து சும்மா விருந்தான்.—
ஐயோ !
அப்பன் மரண மடையுங் காலம்
எமவே தனைக ளில்லா தாக்கவும்,
சிந்தை சிவனடி சேரச் செய்யவும்,
செந்தமிழ் மறையாந் திருவா சகத்தைப்
பக்க மிருந்து படிக்க அறியா
மக்கள் படிப்பை வையகம் மதிக்குமோ ?
நாஞ்சி னாட்டில் நல்லஆண் பிள்ளை
இல்லா ததனால் இப்படி யாச்சுது !

130-5. கொஞ்ச காலத்துக்கு முன், திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர் வாழும் நாடான நாஞ்சில் நாட்டிலுங் கூட, பாடசாலைகளில் மலையாளமொழியே கற்பித்து வந்தார்கள். ஆரம்பக் கல்வியும் தமிழிலே கிடையாது ; மலையாளத்தில்தான். இது காரணமாக, இந்தப் பையனுக்குத் தமிழே படிக்கத் தெரியவில்லை.

136-141. பெரியவர்கள் இறந்து போகும்போது, அவர்களுடைய மனம் ஆண்டவனுடைய திருவடிகளை நினைக்கச் செய்யும் பொருட்டு, அருகிலிருந்து யாரேனும் திருவாசகப் பதிகங்களை ஓதுவது இன்றும் தமிழ் நாட்டிலே பெரு வழக்காயுள்ளது. தனது மகன், தந்தையின் மரண காலத்தில் அருகிலிருந்து திருவாசகம் வாசிக்கக் கூட முடியவில்லையே, அவன் பள்ளிப் படிப்பு அவ்வளவு

மலையா ளத்தில் வரைந்திடும் கோர்ட்டு
சமன்ஸு வந்தால் சரியாய்ப் படித்துக்
காட்டுவ தோபெருங் காரியம் அம்மா ?
ஈசன் கழலுக் கெமையா ளாக்கும்
புண்ணிய நூல்களைப் புறக்கணித் திடுதல்
அறிவோ ? அழகோ ? ஆண்மையோ ? அம்மா!
பண்டு தொட்டுப் பரம்பரை யாக
முன்னோர் வைத்த முழுமணிப் பூணெலாம்
ஆசை யோடணிந் தழகுபா ராமல்,
பாசிக் காகவும் பளிங்குக் காகவும்
கூச்ச மின்றியோர் குச்சுக் கடைபோய்க்
காத்துநிற் பவரைக் காசினி கண்டு
சீசீ யென்று சிரித்தி டாதோ ?
பைத்திய மென்று பழித்தி டாதோ ?
அன்னை யாக்கிய அமுதினை உண்ணாது
அண்டை வீட்டுக் கூழை யளந்து
வாரி யுண்டு வயிறு நிரப்பும்
மதியும் என்ன மதியோ ? அம்மா !
நாஞ்சி னாட்டில் நடப்பவை யெல்லாம்
அதிசயம் ! அதிசயம் ! அதிசய மம்மா !
பாவம் ! சுவரிற் சாய்ந்து, கண்ணீர்
மாலை மாலையாய் வடித்தங் கிருந்தான்.—

பயனற்றதாய்ப் போய்விட்டதே என்று அதை அப்பெண் நிந்தித்துக் கூறுகிறாள். இந்த நிலைமை இக்காலத்தில் மாறிவிட்டது; நாஞ்சில் நாட்டில் மட்டுமன்றி, மலையாள நாட்டிலுங்கூட, சில இடங்களில் தமிழ்ப் பாடசாலைகள் நடந்துவருகின்றன.

இந்தச் சமயம், எங்கள்புண் ணியத்தால்,
உலகெலாம் புகழும் உமையொரு பாகத்
தேசிகன் பாற்சிவ தீக்ஷை பெற்றவர் -
நெற்றி நிறைந்த நீற்றுப் பூச்சினர்
கழுத்து நிறைந்த கண்டிகை யணிந்தவர்
உலர்ந்து பழுத்த உடையை உடுத்தவர்
தளர்ந்த நடையினர், சாந்த முடையவர்
கண்டவர் தொழத்தகு காட்சி கொண்டவர்
மாணிக்க வாசகர் வழங்கிய மணியெலாம்
பேணித் தம்முளப் பெட்டியில் வைத்துத்
தினந்தினம் எம்மான் திருவடி சார்த்திப்
பணியுந் தொண்டர் - பாக்கியம் பிள்ளைப்
பாட்டா - வந்தனர்; படிபபுரை யிருந்தவர்
வேண்டிய காரியம் விளம்பக் கேட்டு,

167-8. உமையொருபாகத் தேசிகர்: ஆசிரியருக்குச் சிவதீக்ஷை செய்துவைத்த பெரியவர். இவரது மடம் சீவைகுண்டத்திலும், தேரூரை யடுத்த பாணந்திட்டு முதலிய பல இடங்களிலும் உண்டு. அங்கு, சைவ போதனை முதலிய தருமங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ தேசிகரிடம் ஆசிரியர் சிவதீக்ஷை பெற்றுக் கொண்டபோது பாடிய ஒரு பாடல் வருமாறு:

வேறு மொருதுணையான் வேண்டுவனோ வேணுவனம்
தேறுமுமை யோர்பாகத் தேசிகனே - கூறுமெமக்(கு)
எய்யாப் பிறவி யிருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது.

178. பாட்டா - பாட்டனார், தாத்தா.

உரைத்த நாத்தே னூறி யெழவும்,
உள்ளமும் செவியும் ஒருங்கு குளிரவும்,
திருத்த மாகத் திருவாச கத்தில்
பற்பல பதிகமும் பண்ணோ டோதினர்.
இப்படி அவரும் யாத்திரைப் பத்தில்,
“ போவோம் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே ”
என்ற பாகம் எடுத்துக் கூறவே,
கணவர்,
ஏங்கி யழுத எங்களை நோக்கினர்,
வாடி யழுத மக்களை நோக்கினர்,
கடவுளை எண்ணிக் கையை எடுத்தனர் :
கண்ணை மூடினர், கயிலைபோய்ச் சேர்ந்தனர்.

11. கும்பியெரிச்சல் படலம்

... ...
... ...

தீரா வழக்கும் சென்மப் பகையும்
உற்றா ருக்குள் உண்டாக் கும்வழி
அப்பனைப் பிள்ளை அண்டவொட் டாவழி
பிள்ளையை அப்பன் பேணவொட் டாவழி
புருஷனை மனைவி போற்றவொட் டாவழி
மனைவியைப் புருஷன் மதிக்கவொட் டாவழி
அண்ணனைத் தம்பி அடுக்கவொட் டாவழி

1-14. ஏட்டில் பொடிவு.

தம்பியை அண்ணன் தரிக்கவொட் டாவழி
மருகனை மாமன் வஞ்சித் திடுவழி
மாமனை மருமகன் வதைத்துக் கொலும்வழி
குடியை முடிக்கும் கொடிய தீவழி
அடிபிடி சண்டை அகலாப் பெருவழி
மனிதரைப் பேயாய் மாற்றும் பாழ்வழி
என்னும் படியுடல் என்பெலாந் தெரியக்
கண்ணும் குழிந்து கன்னமும் ஒட்டி
வயிற்றுக் கின்றி வறுமையின் மெலிந்து,
என்போல்
நடைப்பிணம் ஆயிரம் நடக்கும் வனவழி -
வெவ்வழி, சற்றும் வெளிச்ச மிலாவழி
இருள்வழி செல்பவர் இடறும் கல்வழி
கூகையும் ஆந்தையும் குடிகொளும் குகைவழி
நெருஞ்சில் படர்ந்து நிரம்பிய முள்வழி ;
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று
ஔவை சொல்மொழி அறியா மடவழி ;
பெற்ற பிதாத்தன் பிள்ளை கட்குப்
பழியும் பாவமும் பற்றிய நோயும்
அழியாப் பொருள்களாய் அளிப்ப தன்றி,
ஒருகா சேனும் உதவாச் சதிவழி !
இது,
மக்கள் வழியென மதிக்கவொண் ணாது ;
மருமக் கள்வழி யாகவு மாட்டாது ;
இருவழி கட்கும் இடைவழி யாய்வரும்
வழியிது போலிவ் வையகத் தெங்கும்
உண்டோ அம்மா ! உண்டோ அம்மா !

வீடு விற்று விளைநிலம் விற்று,
ஆடு மாடுகள் அனைத்தும் விற்று,
குடிக்கும் செம்பு குழியலும் விற்று,
பாத்திரம் பண்டம் பலவும் விற்று,
தண்டை பாத சரங்களும் விற்று,
காப்புக் காறை கடுக்கனும் விற்று,
பதக்கம் சிற்றுருப் பாம்படம் விற்று,
தாலியை விற்றுப் பீலியை விற்று,
வக்கீல் சாமி மலரடி களிலும்
குமஸ்தா மாடன் கோவில் களிலும்
சாக்ஷி தெய்வச் சன்னிதி களிலும்
பழந்தேங் காய்கள் படைப்புகள் வைத்தும்,
வேண்டிய புகையிலை வெற்றிலை வைத்தும்,
விதம்விதம் வேட்டிகள் முண்டுகள் வைத்தும்,
சேலை தாவணி சீட்டிகள் வைத்தும்,
இன்னும் பலவா றிவர்க ளிடத்து
முன்னம் கொண்ட கடன்களை முற்றும்
குறைகூறாது கொடுத்தும், முடிவில்
மனைமாண் பிழந்து வாய்மண் ணாகி,
உண்ண உணவும் உடுக்கத் துணியும்
இல்லா தாகி, யாரும் கைவிட,
முற்றத் துறந்த முனிபுங் கவர்போல்
பக்கப் பழுத்த பட்டினத் தடிகள்போல்

---

51. குழியல் - சாப்பிட உபயோகிக்கும் பாத்திரம்.
55. சிற்றுரு - கழுத்திலணியும் ஓர் ஆபரணம். பாம்படம் - காதிலணியும் ஓர் ஆபரணம்.
56. பீலி - கால் விரல்களிலணியும் வெள்ளி அணி.
71. பக்கப் பழுத்த - மிக்க வயதாகி உடல் பழுத்து.

"உற்றார் சதமல ஊரார் சதமல
பெண்டிர் சதமல பிள்ளையும் சதமல
இப்பே ருலகில் யாரும் சதமல"
என்று கூறி, இனித்தோ வாளை
கஞ்சிப் புரையே கதியெனச் சென்று,
பக்க மெங்கும் பரந்து சுற்றிச்
சுவான தேவர் துதித்து நிற்க,
அந்தர மெங்கும் பந்தர் போட்டுக்
காக்கைபா டினியர் கானம் பாட,
பழஅடி யார்கள் பலரொடும் கூடி
வெட்ட வெளியில் வெண்சோ றுண்டு,
பட்டைச் சோறும் பாற்சோ ருக
ஒட்டுத் திண்ணை உறங்கிட மாக
இருப்பதை நோக்கி யிரங்கி யிரங்கி,
இழந்ததை எண்ணி ஏங்கி ஏங்கி

72-4. பட்டினத்தடிகள் பாடல், திருவேகம்பமாலை.

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதம்கச்சி ஏகம்பனே.

75. தோவாளை கஞ்சிப்புரை: தோவாளை என்பது நாஞ்சில் நாட்டிலுள்ள ஓரூர். திருவிதாங்கூர் மன்னரால் இங்கே ஏழைகளுக்குக் கஞ்சிவார்க்கும் தருமம் இன்றும் நடைபெறுகிறது.

77-80. ஏழைமக்கள் கும்பலாகக் கூடியிருந்து கஞ்சி குடிக்கும்போது, நாய்களும் காகங்களும் சுற்றி வட்டமிடுவது இவ்வரிகளில் குறிப்பிடப்படுகிறது.

78. சுவானதேவர் - நாய்கள்.

80. காக்கை பாடினியர் - காகங்கள்.

அழுபவர் கண்ணீர் ஆருய்ப் போம்வழி -
ஐயோ, இவ்வழி ஆகா தாகாது !
ஆடுகள் மாடுகட் காகும் இவ்வழி -
மனிதர் செல்லும் வழியா யிடுமோ ?
... ...
... ...
கற்றவ ருளரோ கற்றவ ருளரோ !
பெற்ற மக்களைப் பேணி வளர்த்திடாக்
கற்றவ ருளரோ கற்றவ ருளரோ ! !
அறிஞரு முளரோ அறிஞரு முளரோ !
வறுமைக் கிரையாய் மக்களை விட்டிடும்
அறிஞரு முளரோ அறிஞரு முளரோ ! !
நீதியு முளதோ நீதியு முளதோ !
மாதர் கண்ணீர் மாரு நிலத்தில்
நீதியு முளதோ நீதியு முளதோ ! !
தெய்வமும் உளதோ தெய்வமும் உளதோ !
பொய்வழிப் பொருளைப் போக்குமிந் நிலத்தில்
தெய்வமும் உளதோ தெய்வமும் உளதோ !!

வெண்பா

காரணவன் ...தெப்போகல்யாணம்செய்வதெப்போ
வாரமிகு மக்களொடு வாழ்வதெப்போ-தாரணியில்
எல்லா ரையும்போல் இருப்பதெப்போ......
... ... நாம்.

முற்றும்

91-2. ஏட்டில் பொடிவு.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	7	புல்வா யைப்போல்	புல்வாய் போல
23	7, 20	நெட்டாமா	நெட்டரமா
26	11-ம்	வரியின்பின், அடியில் வருவதைச் சேர்க்க : ஏட்டுக் கணக்காய் எழுதி வைத்தனர் !	
26	20	கண்டறிந்தவரில்	கண்டறிந் தவரிலை ;
36	16	குப்பன்	குசும்பன்
38	8	நெல்விதை	நெல்லிதை
44	11	சண்ணுமுன், சம்பா	சண்ணும் சப்பா. (சப்பா - பயனற்றவன் என்பது கருத்து.)
82	17	யளந்து	யலந்து (அலந்து - ஆசைப்பட்டு.)
82	22	பாவம் ! சுவரிற்	பாவம் சாமியும் சுவரிற்
85	8	என்னும்படி	எண்ணும்படி (எலும்புகளை எண்ணும்படி என்பது கருத்து.)
86	20	மனைமாண் பிழந்து	வழக்கை யிழந்து

1809